
NA - 1

பெரியார் படம்

அன்பர்கள் பலரின் ஆவலைப் பூர்த்தி செய்தல் எமது கடமை என்பதைக் கொண்டு, "பொன்னி" பொங்கல் மலரில் வெளிவந்துள்ள பெரியார் முழு உருவப் படத்தினை இரு வண்ணங்களில், அழகிய ஆர்ட் அட்டையில் வெளியிட ஏற்பாடு செய்துள்ளோம்.

★

விலை ரூ 0—5—0

தபால் செலவுடன் ரூ 0—6—0

★

விற்பனையாளர்களுக்குத் தக்க கழிவு உண்டு. முன் பணம் அனுப்பித் தேவையான படங்களுக்குப் பதிவு செய்துகொள்ளுங்கள்.

செந்தமிழ்ப் பதிப்பகம்

கீழராஜ வீதி :: புதுக்கோட்டை.



1. திருச்சி, தஞ்சை ஜில்லாக்கள்: சங்கர் பிக்சர்ஸ், ஸ்ரீரங்கம்
2 மலபார், இலங்கை, பர்மா: டி. கே. எஸ். அண் பிரதர்ஸ் கோயம்புத்தூர்
3. சேலம், மைசூர், ஐக்கிய மலேயா நாடுகள்: சேலம் சண்முகா பிலிம்ஸ், குகை சேலம்
4. சென்னை, செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, கோயம்புத்தூர், நீலகிரி, ஆந்திர தேசம், வட இந்தியா: ஜெயா பிலிம்ஸ் செவ்வாய்ப்பேட்டை, சேலம்
5. மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம் ஜில்லாக்கள்: ராமநாதன் பிக்சர்ஸ், காரைக்குடி.



பொன்ன

மலர் : 2

பொருளடக்க

ஆசிரியர் :
முருகு சுப்பிரமணியன்

ஆகியோரின் எழுத்தோவியங்கள்

திருவள்ளுவர் ஆண்டு 1979 மாசித் திங்கள்
1948 பிப்ரவரி :: விலை அணா எட்டு

செய்திப்பாட்டு

மதவெறிக்

உலகமெலாம் துன்பமுற்ற தெதற்கடி தோழி—மிக
உத்தமர் காந்தியார் செத்தனர் ஆகையால் தோழா—உயிர்

விலகிடவே செய்துவிட்ட நோயென்ன தோழி—மத
வெறிஎன்னும் நோய்வந்து குறிவைத்துச் சுட்டதடா தோழா!
—நல்ல

காந்திஉயிர் போக்கவந்தோன் யாரடி தோழி—தினம்
கல்வணங்கும் இந்துமதக் கல்நெஞ்சக் காரனடா தோழா
—அவன்

சாந்திசொல்லும் காந்திக்கெதிர் ஆனதேன் தோழி—அந்தச்
சண்டாளன் மதவெறி கொண்டவன் ஆகையால் தோழா!
—அந்த

உத்தமர் மதத்தை எதிர்த்தாரோடி தோழி—அவர்
உண்மையில் இந்துமதம் கண்ணென்று சொன்னாரே தோழா
—பின்

செத்துவிழச் சுட்டதன் மூலமென்ன தோழி—தீமை
செய்யாதிர் நபிவழி உய்வோருக் கென்றதால் தோழா!—அதை

ஒப்பாமல் சுட்டானே யாரடி தோழி—அவர்
உயிர்கொண்டோன் ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவ சங்கத்தான்
தோழா—அவர்

சிப்பாய்கள் போலுடை கொண்டதேன் தோழி—சண்டை
செய்திட நாட்டிடை எண்ணியே பழகினர் தோழா!—அந்தச்

சங்கத்தின் எண்ணந்தான் என்னடி தோழி—மதச்
சண்டைகள் வளர்ப்பது, கண்ணியம் அழிப்பது தோழா!—
இந்தப்


பங்கந்தான் மறைந்திட வழிஎன்ன தோழி—இந்தப்
பாழான சங்கத்தை வாழாமற் செய்வது தோழா!—அது

வாழாமற் செய்திடும் வகைஎன்ன தோழி—சட்டம்
வருத்தத்தைப் பரவாமல் தடுப்பது காணென்றன் தோழா—
பலிக்கு

ஆளானவர்க்கென்ன மரியாதை தோழி—இனி
அமைதியாய் இருமென்ற பெரியார் சொல் பின்பற்றல் தோழா!

—நாரா. நாச்சியப்பன்

...குப் பலியானார்!



உலகம் புகழும் உத்தமர் காந்தியார் 1869-ம் ஆண்டு பிறந்தார்; 1948-ம் ஆண்டு மறைந்தார். இடையே எழுபத்தொன்பது ஆண்டுகள்—அவர் வரலாறு முடிவுற்றது. நாட்டின்தந்தை கொல்லப்பட்டார்; மதம் அவரைப்பலிகொண்டது. மக்கள் ஆறத்துயரில் மூழ்கினர். எத்தகைய ஆறுதலும் இத்துக்கத்தைப் போக்கமுடியாது!

பெருந்தகை பிரிந்தார்

1948-ம் ஆண்டு ஜனவரி 30-ம் நாள் இரவு உலகமே துக்கத்தில் ஆழ்ந்தது; இந்தியாவின் பேரொளி அன்று அணைந்தது; இந்தியர் தாங்க முடியாத துயர முற்றனர்; நாடு முற்றும் வருத்தக் கடலில் மிதந்தது.

அன்று தான் இந்தியாவின் தந்தை காந்தியாரைக் கோட்ஸே என்ற மத வெறியன் மும்முறை சுட்டான்; அவன் எண்ணம் நிறைவேறிற்று; ஐயகோ! உலகத்திற்கே வழிகாட்டியாகத் திகழ்ந்த பெம்மான் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையானார். அன்பு நெறியையே தம் வாழ்நாளெல்லாம் பரப்பி வந்த அண்ணலின் முடிவு இவ்வாறு நேரும் என்று யாரும் எண்ணவில்லை; செய்தி கிடைத்தவுடன் நம்பவுமில்லை. வானொலி நிலையமும் பத்திரிகைகளும் செய்தியைப் பரபபியவுடன் தான் மக்கள் 'உண்மை' யென்றறிந்தனர். இந்தியர் மட்டுமல்ல, உலக மக்கள் அனைவருமே இப்பெருந்தகையின் பிரிவுக்கு வருந்தி இரங்கினர். கட்சி, சாதி, சமய, இன, நாட்டு வேறுபாடுகளையெல்லாம் மீறி அனைவரையும் துக்கம் தாக்கிற்று. உலகப் பெருமக்கள் தம் தம் வணக்கவுரைகளை அனுப்பி மறைந்த பெருமாண்பினருக்கு மரியாதை செய்தனர்; அவர் தம் புகழ் நின்று நிலவ ஆலோசனைகள் கூறினர்.

ஒருவாறு பதினைந்து நாள் துக்கத்திற்குப் பிறகு நாடு ஆறுதல் பெற்றிருக்கிறது. என்ருலும் 'அண்ணல் காந்தியாரின் மறைவு' அவ்வளவு விரைவிலே மறந்துவிடுவதற்குரியதல்ல. உலகில் நாடோறும் எத்தனையோ பேர் பிறக்கிருர்கள்! எத்தனையோ பேர் சாகிருர்கள்! அப்படிப் பட்டதல்லவே காந்தியார் மறைவு! நேர்மையும் தாம் கொண்ட கொள்கையில் இடையறாத பற்றும் காந்தியாரிடம் காணப்பட்ட சிரிய பண்புகள். அண்மையில் எழுந்த இந்து முஸ்லிம பிணக்கை வேரறுப்பதில் அண்ணாரின் 'அன்பு நெறி' கண்கண்ட பலன் தந்ததை யாவரும் அறிவர்; நவகாளி அண்ணல் காந்தியாரின் நினைவுச் சின்னமாக இன்றும் விளங்குகிறது.

இத்தகைய பெருமாண்பினரைக் கொன்றவன் ஒரு இந்து; அதுவும் உயர்சாதிப் பார்ப்பனன்; படித்தவன்; இளைஞன். அண்ணலின் இனிய முகத்தைப் பார்ப்பவர் உள்ளத்தில், எத்தகைய கொடு நெஞ்சுடையராயினும் இத்தகைய தீய எண்ணம் எழுமா? அண்ணாரின் பேச்சும்,

எழுத்தும், வாழ்க்கையும் அவர்க்கொரு பகைவனை வளர்த்திருக்கவும்முடியுமா? அதுவும்பிரார்த்தனை நேரத்திலே, அவரை வணங்கிப் பின்னர் அவரைக் கொல்லத் துணிந்தானே பாவி! அவன் பத்திரிகாசிரியனாம்! வெட்கக்கேடு! வெட்கக்கேடு!

கோட்ஸே 'இந்து ராஜ்ய ஸ்தாபனம்' செய்வதற்குக் காந்தியார் இடையூறாய் நின்றாராம்! பிரிந்து சென்று தனி நாடு அமைத்துக்கொண்ட முஸ்லிமகளுக்காகப் பரிந்து பேசினாராம்! இதுதான் அவர் செய்த குற்றம்! மத வெறி யேறிப்போன கோட்ஸே அவர் செய்த குற்றத்திற்குத் தண்டனையளிக்கும் பொறுப்பைத் தான் ஏற்றுக் கொண்டான்! எப்படித்தான் சுட்டானோ! பல கோடி மக்களின் அன்புக்குப் பாத்திரமாய் நின்ற அன்பின் சிகரத்தைச் சுட்டு வீழ்த்த அவன் உள்ளம் எவ்வாறு துணிந்ததோ? எண்ணிப் பார்க்கவும் முடியவில்லையே! மதவெறி — இந்து மத போதை அவனை அப்படிச் செய்யத் தூண்டிற்று. அன்புருவாய் அமைந்த அண்ணலை 'முஸ்லிம்களுக்கு வக்கில்' என்று எண்ணும்படி செய்தது!

ஆம். மத போதனையை விரோதமாகக் கருதாது, இந்து தர்மத்தைத் தழைக்கச்செய்யவேண்டுமென்பதில் சற்றும் ஆர்வம் குறையாது, மக்களெல்லாம் கடவுளின் புதல்வர்களே, என்ற கருத்தில், காலத்திற்கேற்பச் சீர்திருத்தவும், ஒற்றுமையை எவ்வாற்றானும் காக்கவும் முயன்ற ஒரே குற்றத்திற்காக(?) கொல்லும்படி தூண்டிற்று! எண்ணக்கூட முடியாது இத்தகைய ஒரு நிகழ்ச்சியை — ஆனால் கோட்ஸே குழுவினர், எண்ணித் திட்டமிட்டு, நிறைவேற்றியும் விட்டனர்! படுபாவிகள்! மறைந்தார்! இனி என்ன செய்வது! அவர்தம் திட்டங்கள் நாட்டிலே உருக்கொள்ள வேண்டும், அண்ணல் காந்தியாரின் வாழ்நாளில் அவரை வணங்கிய 'பக்தர்களே' அநேகம்; அவர் கூறியபடி நின்றார் சிலரே! இனியும் இந்நிலைகூடாது. அப்பெருந்தகையின் திட்டங்கள் அரசியலாரின் திட்டங்களாக மாறவேண்டும். அப்பெருந்தகையைப் பலிகொண்ட பின்னும் சாதிமத பேதங்களை இந்நாட்டிலே நிலவ விட்டிருப்பது வேடிக்கை பார்ப்பதாகவே முடியும். திராவிடர் தலைவர் பெரியார் அவர்களின் ஆலோசனைகள் நாட்டினை வாட்டும் பிணிகளனைத்தையும் போக்கும் நன்மருந்தென்பதே நமது கருத்து. அண்ணல் காந்தியாரின நினைவைக் கோயிலாகவும் ஸ்தூபிகளாகவும் காண நினைப்பது அவ்வளவு பொருத்தமல்ல; தலைவர்கள் எண்ணிப்பார்த்துமறைந்த பெருந்தகையின் மாண்பினுக்குற்ற நினைவை எழுப்புவார்களாக.

வாழ்க காந்தியாரின் புகழொளி!



நாக. முத்தையா

மண்காண விண்விட்டு நிலவு வந்து
மாதொருத்தி வடிவுற்று வாழ்வ தைப்போல்,
கண்காணும் அழகுடைய காரி கையாள்
களிப்பூட்டி என்னகத்தில் வாழ்ந்து வந்தாள்;
என்காண நினைத்தாளோ தெரியவில்லை!
இடர்காண எனைவிட்டு நீங்கி விட்டாள்!
புண்காணும் உளத்தோடே வைய கத்தில்
பொருந்தியிருந் துயிர்வாழ விருப்ப மில்லை!

கற்றறிந்த ஓவியனின் கைத்திறத்தால்
கவின்சூழும் எழில்ஆளும் பெண்ணொருத்தி
உற்றதிரு வடிவெய்தி ஒளிரு தல்போல்
உவகைதர என்னுளத்தில் ஒருத்தி வாழ்ந்தாள்!
பற்றுள்ளம் நீத்ததற்குக் காரணந்தான்
பாவையவள் கூறாமல் மறைந்து விட்டாள்!
உற்றுறுத்தும் துயரத்தின் ஊடு நின்றிவ்
உலகத்தில் உயிர்வாழ விருப்பமில்லை!

கதைகாணும் மன்னர்களின் கற்ப னையில்
கதைத்தலைவி யாகவந்து தோற்றுகின்றாள்,
சதைகாணும் உருவமுடன் விளங்குதல்போல்
சலிப்பகற்றி என்னுயிரில் ஒருத்தி நின்றாள்,
எதைக்காண எனைவிட்டுச் சென்று விட்டாள்?
என்னையவள் தனிமையிலே தவிக்கவிட்டு
வதைகாணச் செய்வதுமேன்? இந்நிலத்தில்
வாழுதற்குத் துளியளவும் விருப்பமில்லை!




கசக்கும் காலை!

கோவை இளஞ்சேரன்

மரங்களுக்கு வேர்போலும், தொழிலாளர்
மண்வளர்க்க உழைத்துழைத்தும்
உரங்காணார் உழன்றிடுவார் அவர்கட்கெல்லாம்
உறக்கந்தான் ஓய்வு நேரம்
உறங்கவரும் இரவவர்க்குத் தேன் கூடாம்!
அவரியாம்! அதைக் கலைக்கக்
குரங்கெனவே வருங்காலை கனியெனினும்
குமட்டல்தரும் கசப்பேயன்றோ?

சீர்திருத்தச் செம்மல்களும், சிந்தனைகொள்
சிற்பிகளும் உறங்குகையில்
'ஊர்திருத்த விழிப்பீ' ரென்றெழுப்புகின்ற
காலையது உயர் வென்றாலும்
பேர்நிறுத்தும் வஞ்சகத்தைப் பொதியவைத்துப்
படுத்திருப்போர் சுரண்டலுக்கு
வேர்நிறுத்த வருங்காலை விழாவெனினும்
வேம்பு தரும் கசப்பேயன்றோ?

இரவுக்கு வாழ்த்தெடுத்து, நிலவுக்கு
அழைப்பனுப்பி, எனதினியாள்
வரவுக்குப் பரிசளித்து; இன்பமதை
வளர்க்கையிலே அதை நசுக்கப்
பரவுகின்ற கதிர்கண்டு பரபரப்பாய்ப்
"போறேன்" னென் றவள் நடக்க
அரவெனவே வருங்காலை அழகெனினும்
வாந்திதரும் கசப்பேயன்றோ?



காலமும் கருத்தும்

அகில தமிழர் மாநாடு

சென்னையில் பிப்ரவரி 14, 15, தேதிகளில் கூடிய அகில தமிழர் மாநாடு சில தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறது. குறிப்பாக திரு ஜி. டி. நாயுடு அவர்கள் கொண்டுவந்த 'தமிழ் நாடு தனிச் சுதந்திர நாடாக' வேண்டுமென்ற தீர்மானம் வரவேற்கத் தக்கது. மேலும் அண்டை மொழியினரும் இணைப்பை விரும்புவரேல் வரவேற்பதாக அத்தீர்மானத்தில் கண்டிருப்பதும் பாராட்டத் தக்கது. மாநாட்டில் சொற்பொழிவாற்றிய திரு. வி. க. வழக்கறிஞர் எஸ். முத்தையா ஆகியவர்களும் மாநாட்டுத் தலைவர் நாவலர் பாரதியாரும் 'தனிநாடு' வேண்டுமென்ற கோரிக்கையை வற்புறுத்தியிருப்பதும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். இவை மாநாட்டுத் தீர்மான அளவில் நிற்பதில் பயனில்லை. பிரிவினையை வலியுறுத்திப் போராடிவரும் திராவிடர் கழகத்திற்கு உறுதுணையாக இந்த 'அகில தமிழர் மாநாட்டினை'க் கூட்டியவர்கள் பணியாற்றுவதே சாலச் சிறந்தது: அப்பொழுதுதான் அவர்கள் எண்ணம் ஈடேறும்.

மதம் ஒழிக!

காந்தியாரின் படுகொலைக்குப் பின்னும் இந்நாட்டில் மத ஸ்தாபனங்களுக்கு இடமளிப்பது பேராபத்தைத் தலைக்கு மேல் வைத்திருப்பதேயாகும். மதம் தனிப்பட்டவர்கள் கடைப்பிடிக்கும் ஒழுங்கு முறையாக உடனே மாற்றம் பெறவேண்டும். அரசியல் வாழ்விலோ, பொது வாழ்விலோ இனி மதத்திற்கு இடமிருக்கக் கூடாது.

இவ்வகையில் ராஷ்ட்ரிய சேவா சங்கத்தினர், இந்துமகா சபையினர் முதலியோர்மீது இந்திய அரசினர் எடுத்துள்ள நடவடிக்கைகளை வரவேற்கிறோம். இன்னும் கடுமையான முறைகளைக் கையாண்டாலொழிய இந்த 'ருத்ராட்சப் பூனை'களின் கொட்டம் அடங்க வழியில்லை.

லண்டனில் தமிழ்ச்சங்கம்

லண்டனில் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டிருப்பதறிய மகிழ்ச்சியடைகிறோம். பிரிட்டன் முழுவதும் கிளைச் சங்கங்கள் ஏற்படுத்தித் தமிழ்மொழியைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ள லண்டன் 'தமிழர்களைப் பாராட்டுகிறோம். பழந்தமிழ் நூல்களை ஆங்கிலம் முதலிய மொழிகளில் மொழிபெயர்த்து உலகெங்கும் பரப்ப வேண்டியது மிக இன்றியமையாததாகும். தமிழர் நாகரிகமும், தமிழர் எண்ணங்களும் வெளிநாடுகளில் இதுவரை சரிவர அறிவிக்கப்படவேயில்லை. தமிழ்ப் பண்பாட்டினை உலகம் தெரிந்துகொள்ளும் நாளே, தமிழகத்திற்கு மட்டுமல்ல, உலகத்திற்கே பொன்னாளா

கும். இத்திருப்பணியை மேற்கொள்ளுமாறு லண்டன் தமிழர்களைத் தமிழகம் வேண்டிக்கொள்கிறது.

விடுதலை விழா

இலங்கை விடுதலை பெற்றிருக்கிறது. அண்மையில் விடுதலை விழா அங்கே சிறப்பாக நடந்தது. இந்தியத் தலைவர்கள் தம் அண்டை நாட்டினருக்கு அந்நன்னாளில் வாழ்த்துச் செய்தி யனுப்பினர். சென்னை அமைச்சர்களும் விழாவில் கலந்து கொண்டனர். புதிய டொமினியனுகை உருப்பெற்றிருக்கும் இலங்கை சிறந்த நாடாகத் திகழ வேண்டுமென விரும்புகிறோம்.

அதிசய மனிதர்கள்

சென்னையினின்றும் காந்தியாரைப் பிழைக்க வைப்பதற்காக விமானசவாரிசெய்த 'சாமி'யின் கதை நம் தமிழகத்திற்கே அவமானத்தை ஏற்படுத்தி விட்டது. 'உயிர்பிழைக்கச்செய்யும்' அற்புத மனிதர் ஏன் பெரிய மனிதர்களை அணட வேண்டுமோ தெரியவில்லை; முதல் அமைச்சர் விழிப்போடு 'சவால்' விடுத்தபின்னும் 'ஆட்கள் அகப்படாமலா போவார்கள்!'' என்று சாமி உறுதியாக நம்பியது வீண் போகவில்லை. 'ஒருவாறு காந்தியார் பிழைத்து உயிர்பெற்றால்' என்பதை எண்ணிப் பார்த்தவர்கள், நிறைவேறு விட்டால், நிகழவிருப்பது என்ன என்பதை மறந்தே விட்டார்கள். பிழைக்கவைத்துப் புண்ணியம் தேட எண்ணியவர்கள் மறுகோடியிலே அவமானம் காத்திருந்ததை நினைக்கவேயில்லை. பெரியமனிதர்கள் இவ்வாறு சில சமயங்களில் அதிசய மனிதர்களாக மாறிவிடுகிறார்கள். என்ன செய்வது?

> ## பெரியார் பாராட்டு
>
> அன்புள்ள தோழர்
>
> முருகு சுப்பிரமணியம் அவர்களுக்கு
>
> தாங்கள் அன்புடன் அனுப்பித்தந்த பொங்கல் மலர் கிடைக்கப் பெற்றேன். அதன் அமைப்பு மிகவும் பாராட்டத்தக்க வகையில் ஆக்கப்பட்டிருக்கிறது. இவ்வாண்டு வெளியிடப்பட்ட பொங்கல்மலர்களில் பொன்னி பொங்கல் மலர் மிகமிக மேலான தரமானதாகும். பரிசு வழங்குவதானுல் பொன்னி மலருக்கே முதற் பரிசு உரிமையுடையதாகும். இதுவரை வெளிவந்த மலர்களில் இதுபோன்ற நல்ல அமைப்பு மலர் நம்மவர்களால் வெளியாக்கப் படவில்லை என்பது எனது கருத்து.
>
> தங்கள் அன்புள்ள,
>
> ஈ. வே. ராமசாமி
>
> 1—2—48

எல்லைப் பிரிவினை

தமிழ் நிலத்துக்கும் ஆந்திர நாட்டிற்கும் எல்லைவகுக்கும் வேலையில் பலர் முனைந்திருக்கின்றனர்; மூன்றும்மனிதன் தலையீடின்றி ஒருவருக் கொருவர் மனம் விட்டுப் பேசி முடித்துக் கொள்வதுதான் சாலச் சிறந்தது. இத்தகைய முயற்சிகளில் தலைப்படுபவர்களைப் பாராட்டுகிறோம்.



"பள்ளி நோக்கித் தள்ளாடி நடக்கும்
பிள்ளைகள் பின்னழகு வெள்ளம்பருகும்"

தாயினையும் தள்ளாடி நடக்கும் பிள்ளைகளையும் ஓவியர் அழகப்பன் சித்தரித்திருக்கிறார். கவியரசர் பாரதிதாசன் காட்டுகின்ற 'நல்ல குடும்பத்தில்' இந்நிகழ்ச்சி சித்தரிக்கப்படுகிறது. தன் புதல்வர்களைப் பேணுவதில் அவள் கொள்ளும் இன்பம் அளவிடற்கரியது! நம் குழந்தைகள் தள்ளாடி நடக்கும் காட்சி அவளை அப்படியே இன்பவெள்ளத்தில் தள்ளுவதில் வியப்பென்ன?

அட்டைப் படம்

வாழ்த்து

திருச்சி—20—1—48.

தமிழ் உலகத்திற்கே உயிரென மதித்தற்குரியதும், தமிழ் மக்களது வாழ்க்கை நலத்திற்குப் பெருந்தொண்டு ஆற்றி வருவதும் அறிவுச்சுடராய் விளங்கி அகவிருளை நீக்கிவருவதுமாகிய நமது "பொன்னி" என்னும் புதுமைத்தாங் தனது இரண்டாம் ஆண்டு தொடர்ந்து சிறந்து விளங்குவதைக் காண மகிழ்ச்சியுறுகின்றோம். அன்றியும் "பொன்னி பொங்கல் மலரும்" தனது நறுமணம் வீசி நறுந்தேன் பிலிற்றி நம் தமிழர்களை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தி இன்புறுத்துவதைக் காணவும் மகிழ்ச்சியுறுகின்றோம்: உள்ளக் களிப்புற்ற உத்தமத் தமிழர்களுக்கு, தமது பொன்னெனத் திகழும் "பொன்னி" என்றென்றும் நீங்கா உவகையளிக்குமெனத் துணிந்து கூறுகின்றோம்.

தங்களன்புள்ள,
வித்துவான்
இரா. மீனாட்சிசுந்தரனார்

பெரியார் வாழ்த்து

ஐயா,

பொன்னிக்கு இரண்டாம் ஆண்டு துவங்குவது கேட்டு மகிழ்ச்சியடைவதுடன் மிக்க ஆர்வத்தோடு வரவேற்கிறேன். அது பல்லாண்டு நிலவி மக்கட்கு நற்றொண்டாற்றிப் பயனளிக்க வேண்டுகிறேன்.

பொன்னியின் தொண்டினை மக்கள் பயன்படுத்திக் கொள்வார்கள் என்றே நினைக்கிறேன்.



தங்கள்

அன்புள்ள

ஈ. வே. ராமசாமி

6—2—48

[பொதுத்தொண்டும் உத்தமர் காந்தியார் வாழ்வும் பிரிக்கமுடியாதபடி இணைந்திருந்தன; ஏழைப்பங்காளராகிய அவர்தம் உடலம் தீக்கிரையாக்கப்பட்டாலும் அண்ணாரின் புகழ்மேனி என்றும் நிலைத்து நிற்குமன்றோ! பொதுவாழ்வின் சிறப்பைப் புலப்படுத்தும் புரட்சிக் கவிஞரின் வரிகளை இச்சந்தர்ப்பத்தில் நினைவு படுத்திக் கொள்வது எவ்வளவு பயனளிக்கும்!]

அழியாதன்றோ!

“.................. ....வெறிகொள்
வலியாரால் வாடும் எளியாரின் சார்பில்
புலியாகிப் போர்தொடுக்கும் போதில்—வலியோர்கள்
எய்யும் கோற்புண்ணும் இனிதாகும் அவ்வெளியார்
உய்ய உழைத்ததனைத் தானினைத்தால்!—வையகத்தே
தன்னலத்தை நீத்தும் பிறர்நலமே தான் நினைத்தும்
என்றும் உழைப்பார்க் கிடரிழைப்போன்—அன்றே
நடப்பார் அடியில் நசுங்கும் புழுப்போல்
துடிப்பானே தொல்லுலகி னோரால்!—இடமகன்ற
வையத்து நன்மைக்கே வாழ்வென் றுணர்ந்தவனே
செய்யும் தொழிலில் திறம் காண்பான்—ஐயம்
அகலும்; அறிவில் உயர்ந்திடுவான் அன்னோன்
புகழும் அனைத்துள்ளும் புதுமை—திகழுமன்றோ!
சாதலின் இன்னாத தில்லையென்று சாற்றிடினும்
ஏதும் அவன் சாருங்கால் இன்பமே!—சாதல்
வருங்கால் சிரிப்பான் பொதுவுக்கே வாழ்வான்
பெருமக்கள் வாழ்த்தும் பெறுவான்—ஒரு நிலவு
வானின் உடுக்களிடை வாழ்தல்போல் அன்னோனின்
ஊனுடம்பு தீர்ந்தாலும் உற்றபுகழ்—மேனி
விழிதோறும் மேலோரின் நெஞ்சுதொறும் என்றும்
அழியாதன்றோ!...........................

—புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

காந்தியாருக்கு நினைவுச் சின்னம்

பெரியார் கருத்து

காந்தியாருக்கு ஞாபகச் சின்னம் ஏற்படுத்துவது அவசியம். அது நிரந்தரமானதாகவும் அதிசயமான பலனுள்ளதாகவும் இருக்கவேண்டும். அதற்கு என் தாழ்மையான யோசனை:

1. இந்தியாவுக்கு ஹிந்துஸ்தான் என்கிற பெயருக்குப் பதிலாகக் காந்தி தேசம் அல்லது காந்திஸ்தான் எனப் பெயரிடப்படலாம்.

2. இந்து மதம் என்பதற்குப் பதிலாகக் காந்தி மதம் அல்லது காந்தியிசம் என்பதாக மாற்றப்படலாம்.

3. இந்துக்கள் என்பதற்குப் பதிலாக மெய்ஞ்ஞானிகள் அல்லது சத்ஞானஜன் என்று பெயர் மாற்றப்படலாம்.

4. காந்தி மதக் கொள்கையாக இந்தியாவில் ஒரே பிரிவு மக்கள்தான் உண்டு. வர்ணாஸ்ரம தர்ம முறை அனுசரிக்கப்படமாட்டாது. ஞானமும் (அறிவும்) பக்ஷமும் (அன்பும்) அடிப்படையாகக் கொண்டது. சத்து அதாவது சத்தியமே நித்தியமானது என்பதான சன்மார்க்கங்களைக் கொண்டதாகும் என்பதாக ஏற்படுத்தி, கிறிஸ்து ஆண்டு என்பதற்குப் பதிலாகக் காந்தி ஆண்டு என்று துவக்கலாம்.

இப்படிப்பட்ட காரியங்கள் செய்வதனால்தான் காந்தியார், புத்தர், கிருஸ்து, மகம்மது முதலிய பெரியார்களுக்கு ஒப்பானவராகவும், இன்றைய நிலைமைக்கு தோன்றிய ஓர் சீர்திருத்த மகான் ஆகவும் உலகமே கருதும்படியான நிலை ஏற்படும். உலக மக்களால் நாம் நன்கு மதிக்கப்படுவோம். இந்தியாவுக்குச் சாபக்கேடு என்று எது எது சொல்லி வரப்பட்டதோ அதெல்லாம் மறைந்து விடும். ஆர்ய சமாஜ், சீக் சமாஜ், பிரம்மசமாஜ், என்பன முதலிய எத்தனையோ புதிய மார்க்கங்கள் (கொள்கைகள்) ஏற்பட்டும் ஒன்றும் இந்தியாவை வெற்றிகொள்ளவில்லை. ஆனால் பௌத்த மதம், கிறிஸ்து மதம், முகம்மதிய மதம் ஆகியவை வெற்றிபெற்று விட்டன. இதன் காரணம் இவை அரசாங்க மதங்களாய் இருந்து வருவதேயாகும். ஹிந்துஸ்தான் முப்பது கோடிக்கு மேற்கொண்ட மக்களைக் கொண்டது. அதன் அரசியல் திட்டமாகக் காந்தியம் ஏற்பட்டு விடுமானால் கண்டிப்பாக வெற்றி பெற்றே தீரும். இன்றைய முட்டாள்தனமும் மூர்க்கத்தனமும் ஆன கொலை பாதகப் போராட்டங்கள் இனி நடைபெற முடியாமலும் போகும்.

சென்னை
9—2—48 } ஈ. வே. ராமசாமி.

மதம் அவசியமா?

நாரா—துரைக்கண்ணன்

இன்று மதத்தின் பெயரால் நடைபெற்று வரும் அட்டூழியங்களையும் கொலை பாதகங்களையும் கண்டு கேட்டு அறியும் எவருடைய உள்ளத்திலும் 'மதம் அவசியமா?' என்ற கேள்வி எழுவது இயற்கையே! மத உணர்ச்சி காரணமாக, மக்களிடையே மனமாச்சரியம் ஏற்பட்டு அடி, குத்து, கொள்ளை, கொலை என்ற அளவுக்குப் படு பாதகங்களையும் துணிந்து செய்யக்கூடிய வெறியேற்படுமானால், அத்தகைய மதம் மக்களுக்கு அவசியமேயில்லை என்றுதான் சொல்லத் தோன்றும்.

ஆனால், இன்று மக்களிடையே நிகழும் அநியாயம், கலகம், கொள்ளை, கொலை முதலிய கொடும் பாதகங்களெல்லாம் மத உணர்ச்சி காரணமாக ஏற்படுவதுதானா என்பதை நாம் முதலில் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நிதானமாக ஆராய்ந்து பார்த்தோமானால், நேற்று வரை மக்களிடையே நடந்த கலகமும் குழப்பமும் இன்று நடப்பதும் நாளை நடக்கப்போவதும் எல்லாம் மத உணர்ச்சியின் விளைவாக ஏற்பட்டதல்ல என்ற முடிவுக்கு நாம் வருவோம்.

அப்படியானால், மக்களிடையே நடக்கும் வகுப்புக் கலகங்களுக்கும் மதச் சண்டைக்கும் உரிய உண்மையான காரணம் தான் என்ன? மக்கள் இயற்கையில் அமைந்துள்ள சுயநலம், போட்டி, பொறாமை, சூழ்ச்சி, சுரண்டல் அடக்கியாளும் ஆசை போன்ற தீய குணங்களே மேற்குறித்த வகுப்புக் கலகங்களாகவும் மதச் சண்டைகளாகவும், கொள்ளை, கொலைகளாகவும், பரிணமிக்கின்றன. மேற்குறித்த தீய குணங்களுக்கு இருப்பிடமாயிருக்கும் கொடியோர்கள் தாங்கள்புரிந்துவரும் கொலை பாதகக் குற்றங்களை மறைக்கவே மத உணர்ச்சி என்ற போர்வையைப் போர்த்துக்கொள்ளுகிறார்கள். பணக்காரர்களும் படித்தவர்களுமாயுள்ளஒரு சுயநலக்கூட்டத்தார் பாமரமக்களிடையே மத உணர்ச்சியைத் தவறாகக் கிளப்பிவிட்டுத் தங்களுடைய பட்டம்பதவியாசைகளை எளிதாகநிறைவேற்றிக் கொள்ளுகின்றனர். தாங்கள் சுகபோகங்களை நன்கு அநுபவிப்பதற்கான வழிகளைத் தேடிக்கொள்ளுகின்றனர். இன்று மத அடிப்படையில் நாட்டைப் பிரித்து ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்போர் மேற்குறித்த சுயநலக் கூட்டத்தில் முதன்மை வகிக்கும் யோக்கியதை யுடையவர்களேயாவர். அது நிற்க.

மனிதர்களிடம் இரண்டு வித மான இயல்புகள் அமைந் திருக்கின்றன. ஒன்று மனிதத் தன்மை, மற்ருென்று மிருகத் தன்மை. இயற்கையில் மனி தர்கள்பால் மனிதத் தன்மை தான் பூரணமாக அமைந்தி ருக்க வேண்டும். ஆனல், அது மிகக் குறைவாக இருக்கிறது. மிருகத் தன்மைதான் அதிக மாக இருக்கிறது. மிகுதியாக இருக்கும் மிருகத் தன்மையைக் குறைத்துக்கொண்டே வந்து மனிதத் தன்மையைப் பூரண மாக அடைந்து, பின் அதிலும் பக்குவமுற்று, மனிதத்தன்மை யைக் கடந்த தெய்வத் தன் மையை அடைய வேண்டியது மனிதப் பிறப்பின் லட்சியமா கும். முதலில் மக்களை மிருகத் தன்மையிலிருந்து விடுவித்துப் பின் மனிதத் தன்மையைப் பூரணமாக அடைய உதவுவ தும் சமயம்தான். பின் பூரண மனிதத் தன்மை பழுத்துப் பக் குவமுற்றுத் தெய்வத் தன் மையை அடைய வழி செய்வ தும் சமயமதான். இவ்வித மனிதனின் உண்மையான நிலை யைத் தான் ஒரு பெரியார் "மனிதன் மிருகமல்லன்; கடவு ளுமல்லன்; தெய்வத் தன்மை யடைய முயலும் கடவுள் சிருஷ் டியாவான்" என்று விளக்கிக் கூறினர்.

சிருஷ்டி தத்துவத்தை அல் லது உலகஇயக்கத்தின் தத் துவத்தைக் கூர்ந்து உணர்ந் தால் தான்; ஜீவ உற்பத்தி அல்லது ஜீவ வளர்ச்சியின் உண்மை இன்னதென நமக்குப் புலப்படும். மனித வாழ்க்கை: என்? எல்லா ஜீவ ராசிகளும் அததற்குரிய உடம்புகளைத் தாங்கி வாழ்ந்து வருவது ஒரு லட்சியத்தைக் கொண்டுதான என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும. அறி யாமை இருளில் ஆழ்ந்து பாச பந்தத்தால் கட்டுண்டிருக்கும் உயிர்கள் அச்சிறையினின்றும் விடுதலை பெறுவதற்கே பிறப் பும் வாழ்வும் இறப்பும் நிகழ்ந்து வருகிறது. தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் இடைப்பட் டது வாழ்க்கை. ஜீவ வளர்ச் சிக்காகவே வாழ்க்கை அமை கிறது என்பதை நாம் அறிய வேண்டும்.

'கண்டதே காட்சி, கொண் டதே கோலம்' என்று மனம் போன போக்கில் வாழ்க்கை நடத்திச் சீர்கெட்டு அழிந்து வீணை மாண்டு மண்ணில் மறைவதற்கு மனிதன் பிறக்க வில்லை; வாழவுமில்லை. மனித னுக்கு வாழ்க்கை லட்சியம் உண்டு. அந்த லட்சியத்தை எப்படியும் அடையவேண்டும் என்ற மன உறுதியோடுதான் மனிதன் வாழ்க்கை நடத்த வேண்டும். துன்பத்துக்கு ஏது வாகிய பந்த பாசங்களிலிருந்து விடுபட்டு இன்பத்தையடை யவே, மனிதர்கள் மட்டுமல்ல; சகல ஜீவராசிகளும் விரும்பு கின்றன. ஆனல், தங்களைச் சூழ்ந்துள்ள துன்பத்தை— துன்பத்துக்குக் காரணமான பந்தங்களை எப்படித் தவிர்த்துக் கொள்வது என்று அறியக் கூடிய அறிவும் வசதியும் மற்ற ஜீவராசிகளுக்கு இல்லை. ஆத லால், அவை இயற்கை வழி வாழவேண்டியிருக்கிறது. மனி தனுக்குத்தான் இன்ப துன் பம் இன்னது, நன்மை தீமை இன்னது எனப் பகுத்தறியுஞ் சக்தியும், அறிந்ததை வெளிப்

இயற்கையில் வாய்த்திருக்கின்றன. பகுத்தறிவு வாய்க்கப்பெற்ற போதுதான் பிறப்புரிமை இன்னதென மனிதனுக்கு விளங்குகிறது. உரிமை உணர்ச்சி நல்ல முறையில் உருவானால், ஒழுங்கான வாழ்க்கையில் மனிதனைக் கொண்டு செல்லும். உரிமை உணர்ச்சி உண்டாகும் நிலையிலேயே கோளாறு நேருமானால், மனிதனை எங்கு எங்கெல்லாமோ தவறான வழியில் கொண்டு சென்று பந்தபாசங்களை அதிகப்படுத்தி மீளாத் துன்பத்துக்கு ஆளாகச் செய்யும்.

பிறப்புரிமையை உணர்த்தும்

பகுத்தறிவுவாய்க்கப்பெற்ற மனிதனதான் துன்பத்தினின்றும் விடுபட்டு இன்பம் அனுபவிக்க முயல்வதுபோல், தன்னொத்த மக்களையும் மற்ற ஜீவராசிகளையும் துன்பத்துக்கு ஏதுவாகிய பந்தபாசங்களிலிருந்து விடுவித்து இன்பமடையச் செய்யவேண்டும். இக்கடமையை உணர்த்துவதுதான் சமயத்தின் தத்துவமாகும். இவ்விதம் தான் மட்டுமல்லாமல், தன்னொத்த மக்கள் எல்லோரும் மற்ற ஜீவராசிகள் எல்லாமும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற நினைவு எப்போது உண்டாகும்? 'தானும் மற்ற மக்களும் ஜீவராசிகளும் ஒரே குடும்பத்துப் பிள்ளைகள்; அவர்கள் நம்முடன் பிறந்த சகோதரர்கள்' என்ற உண்மை தெரிந்தால்தான் ஏற்படும். 'எல்லாவற்றையும் ஆக்கி அளிக்கும் ஒரு முதற் பொருள் உண்டு. நாம் அனைவரும் அப்பொருளுக்கு உரிமையுடைய

அகங்காரம், ஆணவம், மயக்கம் முதலியவைகளால் ஏற்படும் பந்தபாசங்களை எல்லாம் ஆன்மநேயத்தாலும் அன்புத்தொண்டாலும் நீக்கி ஆன்ம சுதந்திரம் அடையச் செய்ய அம்முதல் பொருள் சகல ஜீவராசிகளுக்கும் உதவிவருகிறது' என்ற தத்துவ உண்மைகளை உணர்த்துவதற்கே ... சமயம் ஏற்பட்டது. மக்களையும் மற்ற ஜீவராசிகளையும் ஒன்றோடொன்று கலாம் விளைத்து அவமே மடியச்செய்யச் சமயம் ஏற்படவில்லை. ஜீவலட்சியத்தை உணர்த்த ஏற்பட்ட ஒரு பெருஞ்சமயம காலப்போக்கில் பல சமயங்களாயிற்று. பல சமயங்கள் பல பெயர்களால் ஏற்பட்டாலும், ஜீவலட்சியம் என்னும் ஒரு பேருண்மையைத் தான் பல விதமாக உணர்த்தி வந்தன: ஆனால் மதக்குருமார்கள் சிலர் அறியாமையாலோ சுயநலத்தாலோ செய்த விபரீத வியாக்கியானங்கள் அடிப்படை உண்மையை மறைத்து விட்டன. அதன்பயனாக ஏற்பட்ட கோளாறுதான் வகுப்புக் கலகமாகவும் மதச் சண்டையாகவும் பரிணமித்தது. ஆனாலும், பலப்பலவாய் விரிந்த மதங்கள் ஒரே உண்மையைத்தான் அடிப்படையில் கொண்டிருக்கின்றன என்று உணர்ந்து பன்மையில் ஒருமை கண்ட பெரியார்கள் பலர் இல்லாமலில்லை. ஆனால் பொதுவாக மக்கள் பன்மையில் ஒருமை காணும் பண்பை இழந்து வெகுகாலமாய் விட்டது.

இந்நிலையில், இக்காலநிலைக்கேற்ப, மக்கள் மனப்பண்புக்கிணங்க, உலகமனைத்துக்கும்

அவசியமாகிறது. 'ஒரே தேசம்; ஒரே சமுதாயம்; ஒரே தலைவன்' என்ற நிலை ஏற்படவேண்டுமென்று புத்துலக அமைப்பை எதிர்பார்ப்போர் விரும்புவது போல உலகமக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு பெருஞ் சமயத்தைச் சர்வ தேசிய சமயத்தை ஏற்படுத்த அறிஞர்கள் திட்டம் வகுக்க வேண்டும். புது உலகம் தனிமனிதனை மறந்து உலக சமுதாயமாக மாறப்போகிறதல்லவா! அப்பெரு நிலையை நாம் எதிர்பார்க்கிறோமல்லவா! அதுபோல், தனித்தனிச் சமயம் என்ற நிலைமாறி உலகப்பெருஞ் சமயம் என்ற ஒன்று ஏற்பட வேண்டுமென நாம் விரும்ப வேண்டும். அதற்கான அமைப்பைக்காணப் பேரறிஞர்களும் தத்துவ ஞானிகளும் விரைவில் வழிவகுக்கவேண்டும்.

இங்ஙனம் சமய தத்துவத்தின் உண்மை நிலையைச் சிர்தூக்கிப்பார்த்துத் தற்போதைய நிலைக்கேற்ப, சமய அமைப்பைக் காண்பதை விட்டு, 'மதம்தான் இன்றைய வகுப்பு வேற்றுமைக்கும் கலகங்களுக்கும் காரணமென்றும் அத்தகைய மதம் வேண்டாம்' என்று கூறிப்பிரசாரம் செய்வதிலேயே வீணாகக் காலங் கழிக்கின்றனர் பலர். மனிதர்கள் மனப்பேதலிப்பால் செய்யும் குற்றங்களைச் சமயத்தின் மீது சுமத்துவதும் பொருந்தாது. மதம் போதை தருகிற கஞ்சா போன்றது எனக்கூறுபவர்கள் மனிதனுடைய மன மயக்கின் உய்த்துணராமலே சொல்லுகிறார்கள். இல்லாவிடில், மனிதன் அறிவு தடுமாற்றத்தால் செய்யும் தவறுகளைச் சமயத்தின்மீது சுமத்திப் பழிப்பார்களா?

உதாரணமாக, விஞ்ஞானக் கலையை எடுத்துக்கொள்வோம். மனித சமுதாயத்துக்குரிய வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் நன்மையை உண்டுபண்ணுவதற்குமே விஞ்ஞானக்கலை ஏற்பட்டிருக்கிறதென்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். ஆனால், விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள கலைஞர்கள் பலர் உயிர்களையும் பொருள்களையும் அழிக்கும் நாசக் கருவிகளையும் கண்டு பிடித்திருக்கிறார்கள். யுத்த காலத்தில் அவர்கள் கண்டுபிடித்த ராக்கெட், அணுக்குண்டு முதலிய நாசக் கருவிகளால் ஏற்பட்ட உயிர்ச் சேதம் பொருள் சேதங்களை நாம் நன்கு அறிவோம். அதற்காக, விஞ்ஞானக்கலை வேண்டாம் என்று யாரும் சொல்லுவதில்லை. நாசக் கருவிகளைக் கண்டுபிடிக்கும் முயற்சிகளைத் தடைசெய்யவே, சர்க்காரும் அறிஞர்களும் முயல்கிறார்கள். அவ் விஞ்ஞானக் கலையைப் போன்றதுதான் சமயஞானமும் ஆகும். சமய உண்மைகளுக்கு விரிவுரை செய்யும் குருமார்கள் சிலருடைய விபரீதப்போக்கைக் கண்டித்து உண்மையை நிலைநாட்டப் பேரறிஞர்களும் பிறரும் முயலவேண்டும். அதை விட்டு, சமயமே அவசியமில்லை என்று கூறுவது மனித சமுதாயத்துக்கே கேடு செய்வதாகும்.

ஒவ்வொரு நினைப்பிலும் மொழியிலும் செயலிலும் பொங்கிக் கொண்டிருக்கிறது. சமய உணர்ச்சிதான் மக்களை நல் வழியில் நடத்திச் செல்கிறது. மனிதன்வழி தவறி இடர்ப்படும் போது சமய உணர்ச்சி எச்சரிக்கை செய்யும். மதியாது நடப்பவன்தான் நிலைதடுமாறி அல்லல் படுகிறான். எனவே சமயம் மனித சமுதாய வாழ்க்கையை ஒழுங்குபடுத்துகிறது; அதன் வாயிலாக, நாட்டின் நிலையையே (National character) ஒழுங்குபடுத்தும் வல்லமை வாய்ந்தது சமயம். ஆதலால் சமய தத்துவத்தை மதியாத தனி மனிதனின் ஒழுங்கீனம் வளர்ந்து வளர்ந்து நாட்டு ஒழுங்கையே பாதிக்கும் என்று அறிய வேண்டும்.

இத்தகைய சிறப்புப் பொருந்திய சமயத்தின் அடிப்படை உண்மையைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல், சாதாரணப் புராண இதிகாசங்களில் காணப்படும் கட்டுக்கதைகளையும் அறியாமையால் மலிந்துள்ள மூடப்பழக்க வழக்கங்களையும் அர்த்தமற்ற கொள்கைகளையும் சமய உண்மைகளாகக் கருதிச் சிலர் கண்டித்துப் பேசியும் எழுதியும் வருகின்றனர்; வாழ்க்கைக்கு வழிகாட்டாத ஊழல் மலிந்த மதம் அவசியமில்லை என்றும் வாதிக்கின்றனர். ஆசாபாசங்களாலும்கோப தாபங்களாலும் கற்பனைக் கோட்பாடுகளாலும் சமய உண்மையை நழுவவிடக் கூடாது.

சமயம் என்று ஏற்பட்டுவிட்டால், இந்து, முஸ்லிம், சீக்கியம், புத்தம், சமணம், கிறிஸ்துவம் என்பன போன்ற மத வேற்றுமைகளும், அவ்வேற்றுமைகளால் விளையும் பூசல்களும் ஏற்படுவதற்கே இடமிரா. மத அடிப்படையில் அரசாங்கத்தை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையே எழாது. அரசியலில் மதம் இடம் பெறக் கூடாதென்ற பேச்சுக்கும் இடமிருக்காது. அரசியல் வேலைகளை ஐக்கியமாகச் செய்து முடிப்பதற்குச் சமய உணர்ச்சி உதவும். சாதிப் பிரிவு, வர்க்கப் பிரிவு, நிறத்திமிர், மொழி வேறுபாடு, தேசப் பாகுபாடு ஆகியவைகளைப் பெரிய வேற்றுமைகளாகக் கருதும் எண்ணம் ஏற்படாதபடி சமய உணர்ச்சி தடுக்கும். பொருளாதார சமத்துவமும் பொதுவுடைமை நிலையும் சமய உணர்ச்சியால் சுலபமாக ஏற்படும். ஆன்மநேய ஒருமைப்பாட்டை உண்டுபண்ணும் இச் சமய உணர்ச்சி சர்வ தேசிய எண்ணத்தை வளர்க்கும் என்பதில் சந்தேகமென்ன!

ஆகவே, அறவழி நிற்க, அறிவு நிலை உயர, அன்பை வளர்க்க, ஒழுங்கையும் ஒழுக்கத்தையும் நிலைநிறுத்தப் பெரிதும் உதவுவதால், சமய தத்துவம் உருவமும் உணர்ச்சியும் அறிவும் நிறைந்த மனித சமுதாயத்துக்கு அத்தியாவசியமாகும். ★

இத்தொடரில் இன்னும் சில கட்டுரைகள் வெளிவரும்



பத்தாம் அத்தியாயம்

- பரிமளாவைக் காணோம் -

மேடும் பள்ளமும் நிறைந்த அந்தப் பாதையில் போராடிக்கொண்டு கட்டைவண்டி சென்றது. எங்களிடையே நிலவிக்கொண்டிருந்த அமைதி நெடுநேரம் நீடிக்கவில்லை. திடிரென்று ஏதோ நினைத்துக் கொண்டவள்போல், 'அம்மா! இந்தக் கோலத்துடன் நாம் அங்கே போகவேண்டாம், அம்மா!' என்றாள் செங்கமலம்.

"ஏன்?" என்று கேட்டாள் தாயார்.

"என்ன இருந்தாலும் அவர்கள் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நாம இந்தக் கோலத்துடன் அங்கு போய் அவர்களுடைய கௌரவத்தை ஏன் குலைக்க வேண்டும்?"

"இது என்ன வேடிக்கையாயிருக்கிறதே! அவர்கள் மட்டும் நம்முடைய கௌரவத்தைக் குலைக்கலாமோ?"

"இருந்தாலும் அவர்கள்தான் மோசமாக நடந்து கொண்டார்களென்றால், நாமும் மோசமாக நடந்துகொள்ள வேண்டுமா? இதனால் பரஸ்பரம் மனக்கசப்பு ஏற்பட்டு வைராக்கியம்தான் வளரும். என்னவோ, நடந்தது நடந்து விட்டது. அதை நல்ல வழியிலேயே திருத்திக்கொள்ளப் பார்ப்போமே?"

“ஏது வேலை விடு” என்று நீ தான் சொல்லேன்!”

“நாம் எல்லோருமாகச் சேர்ந்து அங்கே போகவேண்டாம். நானும் நீயும் இந்தக் குழந்தையுடன் எங்கேயாவது தங்கிவிடுவோம். முதலில் இவர் மட்டும் அங்கு போய் நம்முடைய நிலைமையை எடுத்துச் சொல்லட்டும். பிறகு என்ன ஆகிறதென்று பார்த்துக் கொண்டு மேலே செய்யவேண்டியதைச் செய்யலாம்” என்று செங்கமலம் என்னைச் சுட்டிக் காட்டிச் சொன்னாள்.

“என்ன தங்கமான குணம்!” என்று நான் எனக்குள் எண்ணி வியந்தேன். அதன்படியே அவர்கள் இருவரும் குழந்தையுடன் தங்களுக்குத் தெரிந்த யாரோ ஒருத்தியின் வீட்டு வாசலருகே வண்டியை விட்டு இறங்கிவிட்டனர். அங்கிருந்து குற்றாலலிங்கம் பிள்ளையின் வீடு சுமார் ஒரு பர்லாங்கு தூரத்தில் இருந்தது. நானும் அவர்களுடன் வண்டியை விட்டிறங்கி அவருடைய வீட்டை நோக்கி நடந்தேன்.

வாசலில் நின்று கொண்டிருந்த என் மாமா என்னைக் கண்டதும் குறுநகை பூத்தார். பிறகு அவர் சிரித்துக் கொண்டே, “என்னப்பா என்ன, கடையில் வெறுங் கையுடன் வந்து சேர்ந்திருக்கிறாயே?” என்றார்.

“ஏன், என்ன கொண்டு வர வேண்டும் என்கிறீர்கள்?” என்றேன்.

“சுயராஜ்யத்தை வாங்கிக் கொண்டுவந்து சேர்வாயாக்கும் என்றல்லவா நினைத்தேன்!” என்றார் அவர்.

“அது என்ன, சிறையில் விலைக்கு விற்கும் என்று நினைத்துக் கொண்டீர்களா?” என்று கேட்டுக்கொண்டே நான் உள்ளே நுழைந்தேன்.

அப்போது, “அழகான தங்கையைப் பார்த்து விட்டுப் போக வந்துவிட்டானாக்கும்!” என்று மாமி முனகியது என் காதில் விழுந்தது.

“என்னுடைய அழகான தங்கையை மட்டுமா? உன்னுடைய அழகான பிள்ளையையும்தான் பார்த்துவிட்டுப் போக வந்திருக்கிறேன்!” என்று நானும் பதிலுக்கு முனகிக் கொண்டே அங்கிருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்தேன்.

நான் அவ்வாறு முனகியது என் பின்னோடு வந்துகொண்டிருந்த மாமாவின் காதில் விழுந்து விட்டது போலிருக்கிறது. அவர், “ஏன், அவனுடைய அழகுக்கு என்ன குறைவு?” என்று கேட்டுக் கொண்டே எனக்கு எதிரிலிருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்தார்.

“ரொம்ப அழகுதான்! ஊர் சிரிக்கிறது!” என்றேன்.

“என்னத்துக்கு?”

“ஓர் அபலையின் உயிருக்கு உலை வைத்ததற்கு!”..

“அது யார், அந்த அபலை?”

“ஒன்றும் தெரியாதவர்போல் கேட்கிறீரே! அவளுடைய தாயார்கூட இங்கே வேலை

லையா?"

"ஆமாம், நாலு கழுதைக ளோடு ஐந்தாவது கழுதையாக ஏதோ ஒரு கழுதை இங்கே வேலை செய்துகொண்டிருந்தது. ஒரு மாதத்துக்கு முன்னால் அந்தக் கழுதையின் வேலை எங்களுக்குப் பிடிக்கவில்லை என்று அதை விரட்டி விட்டோம். அதனால் என்ன?"

"அதனால் ஒன்றுமில்லை; அவ ளுடைய மகள் செங்கமலத்தின் வாழ்க்கையை உங்கள் செல்வ மகன் கெடுத்துக் குட்டிச்சுவ ராக்கி விட்டானே, அதற்கு நீங்கள் என்னசொல்கிறீர்கள?"

"என்ன! செங்கமலமா? அவள் யார் என்றுகூட எங்க ளுக்குத் தெரியாதே!"

"உங்களுக்குத் தெரியாம லிருக்கலாம்; உங்கள் மகனுக் குக் கூடவா தெரியாது?"

"உனக்கென்ன, பைத்தியமா பிடித்திருக்கிறது?"

"எனக்குப் பைத்தியம் பிடிக் கவில்லை. நீங்கள் குடிசையைப் பிய்த்து எறிந்தால்கூடக் குற் றத்தை மறைத்துவிட முடி யாது என்பதை உணரவேண் டும்."

"யாருடைய குடிசையைப் பிய்த்து எறிந்தேன்? என்னு டைய குடிசையை நானே பிய்த்து எறிந்துவிட்டேன். அந்தக் கழுதை என் வீட்டில் வேலைபார்க்கும் வரை அதற்கு என்னுடைய குடிசையில் நான் இடம் கொடுத்து வைத்திருந் பிறகு அதற்கு அங்கே இடம் கொடுப்பானேன்?"

"ஐயோ! பணம் இருந்தால் எதுவேண்டுமானாலும் செய்து விடலாம் என்று நினைத்து விடாதீர்கள்! பழி யாரையும் விடாது. அந்தப் பழிக்குப் பக வான் தண்டனை அளிக்கும் வரை காத்துக் கொண்டிருக் கும காலமும் அல்ல இது!"

"என்னப்பா, என்னவெல் லாமோ சொல்லுகிறாயே! எனக்கு ஒன்றுமே புரியவில் லையே!"

"கொஞ்சம் நியாய புத்தி யோடு யோசித்துப் பார்த்தீர் களானால் எல்லாம் புரியும். ஓர் ஏழைப் பெண்ணுக்கு என்ன வெல்லாமோ ஆசை காட்டி, அவளைத் தன் இஷ்டத்துக்குப் பயன்படுத்திக் கொண்ட பிறகு கைவிடுவதை யாரும் சகிக்க மாட்டார்கள். ஆண்கள் அவ் வாறு கைவிடப்பட்டாலும் சமூ கத்தில் அவர்கள் வாழ்வதற்கு வழியுண்டு; பெண்களுக்கு அத் தகைய வழி ஒன்றுமில்லை. ஆகவே, உங்களுடைய பழியைத் துடைத்துக்கொள்ள வேண்டுமானால், நீங்கள் ஒன்று செய்ய வேண்டும். உடனே அந்தப் பெண்ணைச் சிவகுமார னுக்குக் கல்யாணம் செய்து வைத்துவிட வேண்டும்."

"நல்ல வேடிக்கைதான் இது! இன்று 'உங்களுடைய மகன்தான் என்னைக் கெடுத்து விட்டான்' என்று இவள் வரு கிறாள்; நாளைக்கு இன்னொ ருத்தி வருகிறாள்; அதற்கு மறு நாள் வேறொருத்தி வருகிறாள்.

இப்படியே எங்கெங்கேயோ கெட்டு எத்தனை பேர் வந்தாலும் அத்தனை பேரையும் சிவகுமாரனுக்குக் கல்யாணம் செய்துவைத்துவிட வேண்டியதுதானு? பேஷ்! உன்னுடைய யோசனையே யோசனை, அப்பா! வழியே போகிற சனியன்களையெல்லாம் விலைக்கு வாங்கிக்கொள்ள வேண்டுமென்கிருயே!"

"வழியே போகிற சனியனை விலைக்கு வாங்கிக்கொள்ள வேண்டுமென்று நான் உங்களுக்கு யோசனை சொல்லவில்லை; விட்டோடு இருந்த சனியனைத்தான் விலைக்கு வாங்கிக்கொள்ளச் சொல்கிறேன். நீங்கள் நினைப்பது போல் வேடிக்கை வேடிக்கையாகவும் இல்லை; வினையாகவே முடிந்துவிட்டது. உங்களுடைய சிவகுமாரனுக்குச் செல்வக் குமரன் ஒருவன் பிறந்திருக்கிருன். துரதிர்ஷ்ட வசமாக அவன் செத்துப் போகவுமில்லை; உயிரோடு இருக்கிருன்!"

"அவன் 'நான் சிவகுமாரனுக்குத்தான் பிறந்தேன்' என்று உன்னிடம் சொல்கிருனுக்கும்!"

"இதற்கெல்லாம் நீங்கள் சாட்சியைத் தேடிக்கொண்டிருக்க முடியுமா, என்ன?"

"அப்படியானல் நீ அவளைச் சத்தியகீர்த்தி என்று ஒப்புக்கொண்டிருப்பதுபோல் நானும் ஒப்புக்கொள்ள வேண்டுமாக்கும்! அவ்வளவு தூரம் என்னுடைய புத்தி இன்னும் கெட்டுப் போகவில்லை, அப்பா!"

"நீங்கள் இப்படி வாதிப்பது அநியாயமானது, அக்கிரமமானது! சிவகுமாரன் அவளைக் காதலிக்கும்போது, மற்றக் காதலர்களைப்போல் மடு சாட்சி, மலை சாட்சி, பூமாதேவி சாட்சி, சந்திரன் சாட்சி, இந்திரன் சாட்சி என்றெல்லாம் சொல்லியிருப்பான். அதற்காக அவர்களெல்லாம் உங்களுக்குச் சாட்சி சொல்லவேண்டுமென்கிறீர்களா? மலையும் மடுவும் சந்திரனும் இந்திரனும் ஒருக்காலும் சாட்சி சொல்ல வரமாட்டார்கள் என்ற தைரியத்தைக் கொண்டுதானே சிவகுமாரனைப் போன்றவர்கள் தங்களுடைய திருவிளையாடல்களுக்கு அவர்களைச் சாட்சிகளாகத் தேர்ந்தெடுக்கிருர்கள்! தொன்றுதொட்டு இந்த உலகத்தில் நடந்து வரும் அக்கிரமங்களில் இதுவும் ஒன்றல்லவா?"

"ஆமாம். அந்த நாய்களை உனக்கு எப்படித் தெரிந்தது?"

"வழியில் நான் அவர்களுக்கு ஒரு சிறு உதவி செய்யும்படி நேர்ந்தது; அதன் மூலம் தெரிந்துகொண்டேன்."

"இப்போது அவர்கள் எங்கே இருக்கிருர்கள்?"

"அவர்கள் எங்கே இருந்தால் என்ன? முதலில், அவளை உங்களுடைய மகனுக்குக் கல்யாணம் செய்து வைப்பதாகச் சொல்லுங்கள்; பிறகு நான் அவர்களை இங்கு அழைத்து வருகிறேன்."

"அவள் சிவகுமாரனுக்கு மாலையிடவேண்டுமானல், முதலில் என் உடம்பில் இருக்கும்

வேண்டும்"

"உங்களைப் போலவேதான் உங்களுடைய மகனும் சொல்லுகிறான்? அந்தப் 'புத்திசாலி'யை இங்கே கொஞ்சம் வரச் சொல்லுங்களேன்—கேட்டுப் பார்ப்போம்."

"அவனுக்கென்ன, உனக்குப் பிடித்திருப்பது போல் பைத்தியமா பிடித்திருக்கிறது? அவன் 'அந்த நாயின் முகத்தைக்கூட நான் பார்த்ததில்லை' என்கிறானே!"

"அடபாவி! இந்தக் கிராதகனுக்காக அவள் எவ்வளவு தூரம் பரிந்து பேசுகிறாள்!"

"பரிந்து பேசாவிட்டால் பணக்கார மாப்பிள்ளையாக எப்படிக் கிடைப்பான்? உனக்கு உலகம் தெரியாது, அப்பா! இப்படிப்பட்டவர்களிடம் இரக்கமே காட்டக்கூடாது! அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று எனகுக் கொஞ்சம் சொல். பாவத்துக்கு அஞ்சி 'போனால் போகிறது; பிழைத்துப் போகட்டும்' என்று குடிசையைப் பிய்த்துஎறிந்ததோடு விட்டால், அவர்கள் இப்படித்தான் வாலை ஆட்டிக் கொண்டிருப்பார்கள். உடனே, அவர்களைக் கூண்டோடு கொண்டு போய்ப் போலீஸ் லாக்-அப்பில் அடைத்து விட்டால் தான் தொல்லை தீரும். அவர்கள் மீதுள்ள குற்றங்களுக்கும் குறைவில்லை. விபசாரம் செய்த குற்றம், சிசு ஹத்தி செய்ய முயன்ற குற்றம், கௌரவமான ஒரு மனிதனை அவமதித்த குற்றம்........"

பணத்துக்கு முன்னால் சட்டம் கூடத் தன சக்தியை இழந்துவிடும் என்பதற்காக உங்களுடைய மனச்சாட்சியைக் கொன்று விடாதீர்கள்!"

"உன்னுடைய உபதேசம் ஒன்றும் எனக்கு வேண்டாம். இனிமேல் நான் உன்னிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டியது ஒன்றுமில்லை. எனக்கு எல்லாம் ஏற்கெனவே தெரியும். நீ வந்த வேலையைப் பார்!" என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டு அவர் எழுந்தார்.

எனக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. அந்த மனிதனின் மென்னியை அப்படியே பிடித்துத் திருகிவிட்டால் என்ன என்றுகூட எனக்கு ஒருகணம்தோன்றிற்று. என்ன ஈவிரக்கமற்ற உள்ளம்! தன்னுடைய ஏகபோக வாழ்விற்காகத் தினசரி நூற்றுக் கணக்கான ஏழைகளைக் கசக்கிப் பிழியும் அந்த மனிதரிடம் இரக்கத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்?

அதற்குமேல் ஒரு நிமிஷம் கூட என்னால் அங்கே தாமதிக்க முடியவில்லை. எழுந்து நின்று, "பரிமளா, பரிமளா!" என்று இரைந்தேன்.

பதில் இல்லை. "அவளைக் கொஞ்சம் கூப்பிடுங்கள்!" என்றேன்.

"அந்த வெட்கக் கேட்டை என்னவென்று சொல்வேன்? அவள் இருந்திருந்தால் இத்தனை நேரம் உன்னுடைய குரலைக் கேட்டு ஓடிவந்திருக்க மாட்டாளா?" என்றார் அவர்.

எங்கே?" என்றேன்.

"செத்துப் போயிருந்தாலும் 'கவலைவிட்டது' என்று பேசாமல் இருந்திருக்கலாம். அவள் வேறுவிதமாகவல்லவா நடந்து கொண்டு விட்டாள்!"

"என்ன விதமாக நடந்து கொண்டு விட்டாள்? உங்களுடைய யோக்கியதைக்கு இன்னொருவரைப் பற்றி அனாவசியமாக உளறுகிறீர்கள்!"

"எங்களுடைய யோக்கியதை கிடக்கட்டும், அப்பா! உன் தங்கையினுடைய யோக்கியதையைப் பார். அவளைப்பற்றி எனக்கு ஏற்கெனவே சந்தேகம். அடிக்கடி அவளுக்கு எங்கிருந்தோ கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. நான் 'அது என்ன கடிதம்?' என்று கேட்டால், அவள் 'அது என் சொந்த விஷயம்' என்பாள். அந்தச் சொந்த விஷயத்தின் பலன்தான் போலிருக்கிறது, நேற்று இரவிலிருந்து அவளைக் காணவில்லை! சிவகுமாரன் அவளைத் தேடு, தேடு என்று தேடியலைகிறான். இரவு பூராவும் அவன் தூங்கவே யில்லை. பொழுது விடிந்ததும் காரை எடுத்துக்கொண்டு அவளைத் தேடுவதற்காகக் கிளம்பிவிட்டான். அவனுடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டுதான் நான் தெருவில் நின்று கொண்டிருந்தேன். அப்போதுதான் நீ அந்த நாய்களின் சமாசாரத்தை எடுத்துக் கொண்டு என்னிடம் வந்தாய். அந்த வயிற்றெரிச்சலில்தான் பரிமளாவைப் பற்றி உன்னிடம் ஒன்றுமே அவர்.

எனக்கு விஷயம் விளங்க வெகுநேரம் ஆகவில்லை. சாந்தினி எழுதிய கடிதங்களை யாரோ 'காதலன்' எழுதியதாக இந்த மனிதர் நினைத்துக் கொண்டுவிட்டார் என்பதை நான் உடனே தெரிந்துகொண்டு விட்டேன். இவர்மீது இருந்த வெறுப்பின் காரணமாக அந்தக் கடிதங்களை யெல்லாம் பரிமளா இவரிடம் காட்டாமல் இருந்திருக்கவேண்டும். அதை இவர் தவறாக அர்த்தம் செய்து கொண்டு விட்டார். கடைசியில் அவள் இந்த வீட்டை விட்டுத் தன்னந் தனியாகவே கிளம்பி விடுவதற்குத் தைரியம் வர வேண்டுமென்றால் இவர்களுடைய உபத்திரவம் எவ்வளவு தூரம் உச்சநிலையை அடைந்திருக்க வேண்டும்?

நான் இவ்வாறு எண்ணி ஒரு கணம் திகைத்து நின்றதைக் கண்டதும், "என்னப்பா, யோசிக்கிறாய்?" என்று கேட்டார் அவர்.

"ஓடிப்போன பிறகும் உங்கள் திருக்குமாரனால் அவளை மறந்துவிட முடியவில்லையே, அதைப் பற்றித்தான் யோசிக்கிறேன்!" என்றேன்.

"ஆமாம்; 'ஐயோ, பாவம்!' என்று இரவும் பகலுமாகத் தேடிக்கொண்டு அலைகிறானே, அவனுக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்" என்றார் அவர்.

"ஐயோ பாவம்!" என்று பதிலுக்கு நானும் நீட்டி முழக்

கச் சொல்லிவிட்டு, அங்கிருந்து 'விர்'ரென்று கிளம்பினேன்.

அதுவரை என் சிந்தனையில் இடம் பெற்றிருந்த செங்கமலம் சிறிது விலகிப் பரிமளாவுக்கு வழி விட்டாள். 'ஒருவேளை அவள் தற்கொலை செய்து கொண்டிருப்பாளோ!' என்று நினைக்கும்போது என் உடம்பு முழுதும் ஒரு நிமிஷம் நடுங்கி ஓய்ந்தது. இடையிடையே 'அவள் சாந்தினியை நம்பித் தான் தன்னந் தனியாகச் சென்னைக்கு கிளம்பியிருப்பாள்' என்ற அசட்டு நம்பிக்கை எழுந்து, என்னைச் சிறிது ஆறுதலடையச் செய்தது.

இந்த நிலையிலும் நான். செங்கமலத்தை அடியோடு மறந்து விடவில்லை. பேதைப் பெண் பாவம்! இதயமற்ற பணக்காரப் பயலை நம்பிப் படுமோசம் போய்விட்டாள். அவளுக்கு நீதி வழங்குவார் யார்? அவள் சர்க்காரை நம்பிப் பயனில்லை; சட்டத்தை நம்பியும் பயனில்லை. ஏனெனில், அவளுடைய எதிரி பணக்காரன். அவனுடைய பணத்துக்கு முன்னால் எல்லாம் தலைவணங்கி விடும். கடவுள்......? அவன் தான் கல்லாச்சே!

பின் அவளுடைய கதி?—நாம்தான் அவளை நம்முடன் சென்னைக்கு அழைத்துக் கொண்டு போய் ஏதாவது செய்யவேண்டும்.

இந்தத் தீர்மானத்துடன் நான் செங்கமலம் தங்கியிருந்த வீட்டையடைந்து, அவர்களிடம் விஷயத்தைச் சொன்னேன், 'போலீஸ், லாக்-அப்' என்ற வார்த்தைகளைக் கேட்டதும் அவர்கள் நடுநடுங்கி விட்டனர். ஒரு பாவமும் அறியாத—அறிய முடியாத—ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டுவிட்டு அந்த அப்பாவிகள் என்னுடன் சென்னைக்குக் கிளம்பத் தயாராகி விட்டனர். காதை அடைத்த பசியையும் கவனியாது, மீண்டும் ஒரு கட்டை வண்டியை அமர்த்திக் கொண்டு நாங்கள் எங்களுடைய பிரயாணத்தைத் துவக்கினோம்.

(தொடரும்)

பில்லி சூனியம்!

சென்ற மூன்று நூற்றாண்டுகளாக வடநாடுகளிலிருந்து பல பழக்கங்கள் தமிழ் நாட்டில் புகுந்து விட்டன. அவைகள் பெரும்பாலும் மூட வழக்க வழக்கங்களே யாகும். சுகாதாரத்திற்கு எதிரிடையான பல அணிவகைகள் வடக்கே இருந்து தெற்கே எவ்வாறு புகுந்தனவோ அதுபோலவே பல துர்ப்பழக்கங்களும் புகுந்தன. அவற்றில் ஒன்று பில்லிசூனியம் என்ற செய்வினை.

ஸி. எம். இராமச்சந்திரன்
செட்டியார்.



வள்ளுவர் விருந்து

1. பசந்தாள் இவள்!

திருக்குறள் முனிசாமி

தாயைப் பிரிந்த குழந்தை அழுகிறது. ஆம். அழத்தான் செய்யும். ஒன்றுமறியாத நெஞ்சம் வேறென்ன செய்யமுடியும்? அழுகிற குழந்தையை யாராவது குறைகூறுவதுண்டா? 'இந்தக் குழந்தை அழாமல் தான் இருக்கவேண்டும்' என்று குழந்தைமீது குறையேற்றிக் குற்றம் சாட்டுவது பேதைமையல்லவா? தாயைப் பிரிந்த குழந்தை அழுவது இயற்கைதானே. பிரிந்திருக்கும் தாயை அல்லவோ குறை சொல்ல வேண்டும். எல்லாம் அறிந்த தாய்தான் சாமர்த்தியமாக நடந்து கொள்ள வேண்டும். இதனை அறியாது அழுகிற குழந்தையின்மீதுதான் குற்றம் இருக்கிறது என்று பேசுபவர்களும் உண்டு என்றால் நீங்கள் நம்புவீர்களா? நம்பத்தான் மாட்டீர்கள். ஆனால், அப்படிப் பேசுபவர்களும் உண்டு என்று ஆசிரியர் வள்ளுவனார் அந்தக் காதலி மூலம் காட்டி விடுகின்றார். தாயும், குழந்தையும் என்ற உதாரணத்தை இத்துடன் நிறுத்தி மேற்செல்வோம்.

எதிர்பாராத இன்றியமையாத மிக மிக அவசியமான வேலை யென்று சொல்லிவிட்டு நாயகன் நாயகியைப் பிரிந்து வெளியூர் சென்று விட்டான். சிறிது நாட்களில் திரும்பி விடுவான் என்றுதான் அவளும் எதிர்பார்த்திருந்தாள்: வரவில்லை. போன இடத்தில் எப்படியோ?- அவனும்தான் என்ன செய்வான்? ஆனால் நாயகியால் அதையெல்லாம் நினைத்துப் பார்த்து ஆறுதல் அடைய முடிகிறதா? அதுதான் இல்லை. தாங்கமுடியாத துன்பத்தில்

கிறது; மெலிந்தே விட்டது. அழகு குறைகிறது; நிறம் மாறுகிறது: மாறுதல் பசப்பு நிறத்தைக் கொண்டு வந்து விட்டது. இந்தப் பசப்பு நிறந் தான் காரியத்தைப் பெரிதாக்கி விட்டது. பசபபு நிறத்தில் நடைபெறுகிற ஒரு நிகழ்ச்சியில் ஆசிரியர் நம்மைக் கொண்டு வந்து சேர்க்கிறார்.

கவலை கொண்டதால் உடம் பினமீது தோனறுகிற நிறத் தைத்தான் 'பசப்பு நிறம்' என்று ஆசிரியர் குறிப்பிடுகின் ருர். இந்த நிறம நாயகிக்கு வந்த காரணந்தான் அவளை மற்றவாகள் பார்த்துக் குறை கூறச் செய்துவிட்டது. மனதிற் குள் இருக்கும் வேதனையை— அதுவும் இன்ப வேதனையை— பிறரும் அறிந்துகொண்டு பலப் பல பேசுகிறார்கள் என்றால் அவள் வருந்தாமல் இருக்க முடியுமா?

"நாயகன் பிரிந்தே இருந் தால்தான் என்ன? இவள் பொறுத்திருக்கக் கூடாதா? தன்னைத்தான் அடக்கிக்கொள் ளும் குணம இவளுக்கு இல் லையே? என்னம்மா, அவ்வளவு இன்ப வேகம்? அதற்குள் பசப்பு நிறத்தை உண்டாக்கிக் கொண்டாளே"...என்று இவ் வாறு பலரும் பேசிக்கொள்ளு வது அவள் காதில் வந்து விழத்தான் செய்கிறது. ஆனால் அவளுக்கோ, இந்த மக்களின் அறியாமையும், நியாயமற்ற பேச்சும் நன்றாகப் புரிந்துவிடு கிறது. அவள் பசப்புநிறம கொண்டுவிட்டது எதனை களுக்குச் சிறிதும் தெரிந்ததாக இல்லை. தெரிந்து கொள்ள அவர்கள் சிந்திக்கவுமில்லை.

இந்தப் பசப்பு நிறம் அவ ளுக்கு வருமபடி செய்தவன் நாயகன் தானே! அவன் பிரிவி னால் இவள் மனம் வேதனைக் குள்ளாயிற்று. அந்தப் பசப்பு நிறமும் வந்தது. ஆக, அந்த நாயகனையல்லவோ குறைகூற வேண்டும்? இந்த உண்மை அந்த மக்களுக்குப் புரிந்தால் தானே! 'பசந்து விட்டாளே, பசப்பு நிறத்தை உண்டாக்கிக் கொண்டாளே' என்று இவ ளைத்தான் குறை கூறுகின்ற னர். "பசந்தாள இவள் என பது அல்லால"—என்ற எளிய சொற்களால், ஆசிரியர் அந்த மக்கள் பேசுவதைக் குறித்து விட்டார். "இவள் ஏன் கவலை யால், பசப்பு நிறத்திற்குக் கார ணமாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார்களே அல்லா மல்..." என்று நாயகி தனது குற்றமில்லாத் தன்மையைக் கூற ஆரம்பிக்கின்றாள். அத துடன் உண்மையில் குற்றம் யார்மேல் இருக்கிறது என்ப தையும வெளிப்படையாகக் கூறிவிடுகின்றாள்.

நாயகியைத் துறந்து (விட்டு நீங்கி) போயிருப்பவன் நாயகன் தானே! பிரிவுத் துன்பத்தைக் கணப்பொழுதும், நாயகி தாங் கிச் சகியாள் என்பதையும் அவன் அறியாதவனா? எல்லா வற்றையும் அறிந்த அவன் பிரிந்திருப்பதனாலல்லவோ, இவள் துன்பமுற்று இந்தப் பசப்பு நிறம் வர நேர்ந்தது.

மீது யாதொரு குறையும் இருப்பதாகத் தெரிந்து கொள்ள வில்லையே, கூறவுமில்லையே!

"ஐயோ பாவம்! நாயகன் இத்தனை நாள் இவளை விட்டுப் பிரிந்து(துறந்து)இருக்கலாமா? இவளோ, மகாவேதனைப் படுகின்றாளே! மேனியழகும் போயிற்றே! பசப்பு நிறமும் வந்து விட்டதே!"......என்று கூறி ஒருவர் கூட அந்த நாயகனைக் குறைகூற வில்லையாம். "துறந்தார் அவர் என்பார் இல்"—என்ற சொற்களை வைத்து ஆசிரியர் இக் கருத்தினை விளக்கி விடுகின்றார். இவ்வாறு ஒரு பக்கமாகத் தன்னைமட்டும் குறைகூறும் மக்களைக் கண்டு நாயகி, ஒன்றுமறியாத பேதை மக்கள் என்று குறிப்பிட்டால் தவறேதும் உண்டோ? பசப்பு நிறத்தினையும், நாயகியின் உள்ளத்தில் ஊறிக்கிடக்கும் இன்பஎண்ணத்தின் ஆழத்தினையும் காட்டிவிடுகின்றது இந்தக் குறட்பா:

பசந்தாள் இவள் என்பது அல்லால்
இவளைத்
துறந்தார் அவர் என்பார் இல்—

[இவள் பசந்தாள் — நாயகி பசப்பு நிறத்தைக் கொண்டு விட்டாள், என்பது அல்லால் —என்று (நாயகியின்மேல் குற்றத்தை வைத்துப்) பேசுகிறார்களே அல்லாமல், இவளை — இந்த நாயகியைத் துறந்தார் அவர்—விட்டுப் பிரிந்து (இத்தனைநாள் இருக்கிறாரே) அந்த நாயகன்; என்பார் இல்—என்று அவரைக் குறைகூறுபவர்களை இல்லை:] ●

பத்திரிகைகள் பாராட்டுகின்றன!

பொங்கல் புத்தாண்டில் தமிழன் அடைந்த பெருமகிழ்ச்சிக்கும், தன்னம்பிக்கைக்கும் ஒரு எடுத்துக்காட்டு பொன்னியின் பொங்கல் மலர். கண்ணுக்கும் கருத்துக்கும் ஒருங்கே அளிக்கப்பட்ட முத்தமிழ் விருந்து இது.

'தமான்' 23-1-48

தன்மான இயக்கத்து ஏடுகளில் உயர்ந்தமுறை மலர் ஒன்றேனும் வராதா என்று பன்முறை ஏங்கிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தவர் புன்சிரிப்புச் சிரிக்கலாம்! முதல் முயற்சியே இத்துணை வெற்றியென்றால் நிர்வாகிகள் பெருமைப் படுவதில் தவறென்ன? தன்மானத் திராவிடர்க்கும் பங்குண்டு அப் பெருமையில்.

'விடுதலை' 27-1-48

அழகிய மலர்கள் எம் தனி உடமை என்று கொக்கரித்திருந்த சிறுமதியாளர் சிந்தை கலங்க வெளிவந்திருக்கிறது இந்நறுமலர். இதில் வாசம் உண்டு. வாசம் வந்த வசத்தில் திரும்பினால் மலர் பிலிற்றும் தேனின் தெவிட்டாத தீஞ்சுவையும் உண்டு. முதலிலேயே கலைமணம் நம் உள்ளத்தைத் தொட்டிழுக்கிறது. கிட்டே நெருங்கியதும், கருத்துத் தேன் சிந்தனையில் இன்பம் பாய்ச்சுகிறது. மலர் முழுவதும் எழுத்தோவியங்களும் கலை ஓவியங்களும் நிறைந்துள்ளன.

'போர்வாள்' 14-2-48

இ வாழ முடியும்

கு.ப. நாராயணன்

அவன் இளைஞன். அவளுக்கு அத்தான். அவனைவிட அவள் இளையவள். ஆனால் அவள் பேதையுமல்லள், பெதும்பையுமல்லள்; இரண்டு பருவத்துக்கும் இடைப்பட்ட சின்னஞ் சிறு பெண் அது திருமணம் நடக்கிற வீடு. "அவன், அவள், அது எனும் அவை மூவினைமை"யும் சேர்ந்துகொண்ட அந்த இடத்தில், உற்றார் உறவினர் எல்லாரும், அத்தி பூத்தாற்போல், ஒன்றாகத் திரண்டிருந்து அளவளாவுகிறார்கள். வழக்கம போல், சின்னஞ் சிறு பெண்களையும் பையன்களையும், அவர்களுடைய பெற்றோர்களின் முன்னிலையிலேயே, அவர்களுடைய மகிழ்வு துள்ளுகிற சம்மதிக் குறிப்புடனேயே, பாட்டன் பாட்டிமார் உரண்டை இழுத்து விளையாடுகிறார்கள். தாய் தகப்பன்மார்களும் கூட இதில் கலந்து கொள்ளுகிறார்கள்:

"ஏனடி வள்ளியம்மை! நீ யாருக்கு வாழ்க்கைப்படுவாய்?"

"இக்—ஊம்!"

"சும்மா சொல்லடி—இந்த ஐயாவுக்கு வாழ்க்கைப்படுகிறாயா?"

"இக்—ஊம்! மாட்டேன்."

"இந்த அம்மானுக்கு?"

"போ, அம்மா!...சும்மா...!"

"இந்த அத்தானைக் கட்டிக் கொள்ளுகிறாயா?"

"............"

"சொல்லடி வள்ளி: கட்டிக் கொள்வாயா?"

"கட்டிக் ...... கொள்ளு ...... கிறேன்."

வாழ்க்கைப்பட் வள்ளியம்மைக்கு விருப்பந்தான். அரும்பி வருகிற பெண்மை நாணப்படுகிறது. கூச்சத்தை மறைக்க "இக்—ஊம்" போலி மறுப்புச் சொல்லுகிறாள். பாட்டன் முறைக்கார "ஐயா" பெரியவர். பொருத்தமின்று. சட்டென்று மறுதலிக்கிறாள். "அம்மா"னே முறைமைக்கு உகந்தவரல்லர். சிணுங்கிக் கடிந்துகொள்ளுகிறாள். அத்தான் செய்தி பொருத்தந்தான். ஆனால், இந்தக் குறிப்பிட்ட அத்தான் எப்படியோ! எண்ணிப் பார்த்துத்தான் விடை சொல்ல வேண்டும். தான் அந்த அத்தானுக்கு வாழ்க்கைப்படுவது மட்டுமின்றி, அவனைத் தன் பங்குக்குத் தானும் கட்டிக் கொள்ள முடியுமென்ற செய்தி கேள்வி வடிவில் பிறக்கிறது. எண்ணிப் பார்த்தாச்சு சம்மதம்—குழந்தை மனத்தின் தெளிந்த சம்மதம்.

ளெல்லாம் அத்தை மக்கள் தாம். வாழ்க்கைப்படுத்திக் கொள்கிற ஆண்களெல்லாம அம்மான் மக்கள் தாம். ஆனாலும், இந்த அத்தான்மார்களும் மைத்துனிமார்களும் வாழ்க்கையில் படுகிற பாடும் பிறனை இவர்கள் படுத்திவைக்கிற பாடும், கட்டிக்கொள்ளுகிற துன்ப மூட்டையும் சிறு நிறையுடையவைதாமா? அல்ல.

எப்படியோ பிறக்கிறார்கள், எப்படியோ வளர்கிறார்கள், எப்படியோ சாகிறார்கள். இடையிடையே, சில பல நாள், வாழ்கிறார்கள்—ஆம், மன மகிழ்வுடன் வாழத்தான் செய்கிறார்கள். குறுகிய வாழ்வு நாளில் கிடைக்கிற அத்தகைய சிறுபோது வாழ்வுத் துய்ப்பானது நீடித்து நின்று அக நிறைவு தாவில்லையே என்ற ஏக்கம் எல்லாருக்கும் இருந்து கொண்டேயிருக்கிறது. ஏழை பணக்காரன், அறிவிலி, அறிஞன், தக்கவன் தகாதவன்— இவர்களில் எவனும் ஏதாவது ஒரு குறையைப்பற்றியே இடையின்றி அங்கலாய்க்கிறான் "வாழ்ந்தவன் கணக்குப் பார்த்தால் வாளுள் கூட மிஞ்சவில்லையே," என்ற குறைபாட்டு முனகல்தான் எங்கும், எப்போதும், எந்த நாளிலும், சிறு சிறு நொடிப்பொழுது நேரங்கள் தவிர்த்து. நம்முடைய வாழ்வில் பெரும் பல நாள் இத்தகைய குறைபட்ட ஓலப் பரிமாறலிலேயே கழிந்து போகிறது.

துன்பமே ஓங்கி நிற்கிறது. அல்லலே பெருகி விரிகிறது. பணம் இருந்தால், அதனால் ணிய மன நலம் கிட்டுவதில்லை. மன நலம் இருந்தால், வாழ்க்கைச் சுழலில் கடைத்தேற முதற் கண்ணதாய் வேண்டப் பெறுமென்று நாம் எண்ணி விரும்புகிற பணம் இல்லாத குறையால், அது இடம் பெயர்ந்து எட்டிப் போய்விடுகிறது. அறிவு, உழைப்பு, விடாமுயற்சி இவற்றால் வெற்றி வாழ்வு வாழலாம் என்கிறார்கள், வையகத்தில் பட்டுப் பழகி முன்னுக்கு வந்தவர்கள். படித்துப் பழகி, அறிவு பெற்று, அயராமல் உழைத்து, விடாமுயற்சியோடு தொங்கு தொங்கென்று தொங்கினாலும வாழ்வுப் போராட்டத்தில் சிந்திய நெற்றி வேர்வைநீர் நாக்கில் வடிந்து சொட்டும்போது உப்புக் கரித்து அருவருப்பைத் தரத் தான் செய்கிறது. வாழ்வில் கண்ட பயன் வேர்வை நாற்றமும், அழுக்குக் கழி பொருளுந் தாம். பஞ்சு மெத்தை, பளிங்கு மாளிகை; ஊர்க் கழிவிடம், ஒட்டுத் திண்ணை;—இவற்றில் எது வாயிருந்தாலும் வெறுப்புக்கிடமான கூறுகள் தாம் பெரும் பலருடைய வாழ்க்கையில் மிகுந்து நிற்கின்றன.

இருந்தாலும், நாம் ஒவ்வொருவரும் வாழ முடியவே முடியும். நாம் ஒவ்வொருவரும் சிற்சில வேளைகளில் மனம் நிறைந்த நல்ல வாழ்க்கையை வாழவே செய்கிறோம்.

இந்த நாளில் வையகமானது நிரம்பவும் கெட்டுத் தொலைந்து போய்விட்டது; நல்லது கெட்டது எல்லாம் நிலைதடுமாறிக் குழம்பிப்போய் விட்டன.

கொலே, களவு, கள், காமம், பொய் அனைத்தும் தலை விரி கோலமாய் ஆடித் திர்க்கின்றன. இந்த மாதிரியான நிலைமையில் நல்லவர்கள் வாழ முடியாது—என்று வாய்ப் பேச்சுத் தெறித்து ஓடி நம்முடைய நெஞ்சில் சுமை ஏறுகிறது.

இது நெருக்கடியான வேளையே யானாலும், இந்த மாதிரியான நெருக்கடி வேளைகளைச் சமாளித்துக் கொள்ள முடியவே செய்யும். என்? முந்தியெல்லாம் இப்படிப்பட்ட நெருக்கடிகள் நேரத்தான் நேர்ந்திருக்கின்றன. நம்முடைய முன்னோர்கள் அவற்றைச் சமாளித்து வரத்தான் செய்திருக்கிறார்கள், இன்றும் நம்மில் சிலர் மிக்க மன நிறைவுடன் வாழ்ந்து வரத்தான் செய்கிறார்கள்.

அப்படியானல், வாழ முடிவது எப்படி?

கொலே, களவு, கள், காமம், பொய் ஆகிய ஐம்பெருங் கேடுகளை நாம் அனைவரும் மனமார விட்டொழித்து, அண்ணன் தம்பி மாதிரி, கொல்லாமை, கள்ளாமை, வெறியாமை, விழையாமை, பொய்யாமை ஆகிய ஐம்பெரும் நன்மைகளைக் கடைப்பிடிக்கவேண்டும் என்பார்கள். இது அழகானபேச்சு. மெய்தான். செயலில் நடவாது-நடந்ததில்லை, நடக்கப் போவதில்லை. நடந்தால், நாம் மடிய வேண்டியதுதான். எதிர் எதிர் ஆன இவற்றைத் தக்க வேளையில், தக்கபடி கையாள நமக்குத் தெரியவேண்டும். எதற்கு எது பொருத்தம், எதை எதனுடன், எப்படி எப்போது, அளவோடு சேர்த்துப் பிரித்துக் கூட்டிக் குறைக்க வேண்டும் என்று தெரிந்து கொண்டு செயல் புரிய வேண்டும். நாம் நம்முடைய அறிவால் அறிந்ததைச் செயலாக்குவதைப் பொறுத்தே நம்முடைய வாழ்க்கை அமைய முடியும். நாம் ஒருவருக்கு மற்றவர் பல வகையில் கடமைப்பட்டிருக்கிறோம். அதேபோல் ஒருவர் மேல் மற்றவருக்கு உரிமையும் உண்டு. தெரிந்தோ தெரியாமலோ ஒருவருக்கு ஒருவர் உதவி ஒத்தாசை செய்துதான் வருகிறோம். கலப்பற்ற நல்லவரோ, கலப்பற்ற கெட்டவரோ நம்மில் யாரும் இல்லை. இறுக்கிப் பிடிக்கவோ, விட்டுக்கொடுக்கவோ, தெரியவேண்டும். இடையருத பரிமாறல் நடந்து வருகிறது இந்த வாழ்க்கைச் சந்தையிலே. வாழ்வைச் சுவைக்கப் பழக வேண்டும். அடைய வேண்டிய பெரிய நிலையை எண்ணி எண்ணி இருக்கிற நிலையை மறந்து விட்டு மற்றவர்களுடைய வழியில் மெய் மறந்தவர்களாகக் குறுக்கிட்டு நிற்ககூடாது. தள்ளுமுள்ளில் சளைபபடாமல் ஈடுபட்டு முன்னேற வேண்டும்.

கண்டது கேட்டது பற்றிய உண்மைகளை உணர்ந்து, வாழ்வு நலங்களை மற்றவர்களோடு கடமை, உரிமை உணர்வுடன் பகிர்ந்து துய்க்க முற்பட்டேனுல், அவர்களுடைய ஒத்துழைப்பு எனக்குக் கிட்டாமலா போய்விடும்? என்னுலும் உங்களாலும் வாழ முடியவே முடியுமென்பது உறுதி. இதனை இன்றே நாம் இருவரும் உணர்வோமாக. ✱



கழுதை ஊர்வலம்

தில்லை வில்லாளன்

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

மன்னன் அஜாதசத்துரு தன் அந்தரங்க அறையில் பஞ்சணையின்மீது அமர்ந்திருந்தான். பக்கத்திலே ஒரு மேஜை; அதன்மீது ஒரு தங்கத் தட்டு. அதில் அழகான ஒரு கனி. அதன் பக்கத்தில் ஒரு பளபளப்பான கத்தி—இருந்தது.

அவன் எழுந்தான். கத்தியைக் கையிலே எடுத்தான். அதை உருட்டிக் கொண்டே யோசிக்கலானான்.

"கோசலத்தை வென்றேன். ஆனால் வஜ்ஜியை மிரட்டக் கூட முடியவில்லை. வஜ்ஜியை வெல்லாவிட்டால் அஜாதசத்துரு வீழ்ந்தென்ன, வாழ்ந்தென்ன? அதுவும் நம்மை எதிர்க்கிற அளவு வந்துவிட்ட பிறகு, விட்டால் துளிர்க்காதா அவர்கள் தொல்லை? அஜாதசத்துரு அஞ்சுகிறான் என்று எண்ணிவிட்டால், அவர்கள் நாவில் நீர் ஊறினாலும் யார் தடுக்கமுடியும்? மகதத்தின் செழிப்பு உலகறிந்த உண்மையாயிற்றே?

"ஆனால், எட்டுக் கூட்டத்தவராம். வல்லவர்களாம். போரில்—ஒற்றுமை உயர்வு தரும் என்ற பொன்மொழியை இதயத்தில் பதித்தவர்களாம். எதிர்க்க நினைப்பவன் ஏமாளியாம். அப்படித் துணிந்து எதிர்த்தால் தோல்வி நிச்சயமாம். சொல்லுகிறார்கள் அறிஞர்கள், அதுவும் அந்நாட்டிற்குச் சென்றுவந்த ஒற்றர்கள் இவர்கள் கிடக்கிறாகள சாமான்யர்கள்."

"சாக்கிய முனிபுங்கவர் புத்தரிடம் கேட்டதற்கும் அதைத்தானே சொன்னார். வாசகாரா தானே அந்த உண்மையை அறிந்துவந்தார். வஜ்ஜியிலே வாழ்பவர்கள் சாமான்யர்களல்லர், ஒற்றுமையால் 'பூஜ்யர்கள்' போல் வாழ்பவர்கள்.

"அவர்கள் யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும். எனக்குக் கவலை இல்லை. முப்பத்து முக்கோடி தேவர்களேயானாலும் கவலை கொள்பவன் அஜாதசத்துரு அல்ல! ஆனாலும் போர் தொடுத்தால் எவ்வளவு சேதம்? எவ்வளவு தொல்லை

துயரங்கள்? அது மட்டுமல்ல; வெற்றி, தோல்வி யாருக்கு என்று உறுதிப்படுத்தமுடியும்? அப்படியே நமக்கு வெற்றி யென்றாலும், பெருஞ் சேதத்துடன் பெறுகிற வெற்றியால் வருகிற லாபம் என்ன?

"போர் கூடாது, ஆனால் வெற்றி வேண்டும்!—இது என் ஆசை. எப்படி முடியும்?—இது என் கேள்வி. ஆனால், 'அது வெகு எளிது' என்கிறார் வாசகாரா. 'எப்படி?' என்றேன். 'ஒரு நாவிதன், ஒரு சித்திரக்காரன், ஒரு கழுதை—அது போதும்' என்றார் சுருக்கமாக! எனக்கு விளங்கவில்லை. புரியச் சொல்ல வேண்டினேன். சொன்னார். சொன்னபடி செய்தேன்!

"பாவம்! வாசகாரா எவ்வளவு அவமானம் அடைந்து விட்டார்! எனக்காக, என் வெற்றிக்காக, அவருக்கு, அதுவும் ஒரு பிராமணோத்தமருக்கு இந்த அவமானம் செய்தேன்! ஆனால் அவர் யோசனைப்படி! எப்படி வெற்றி கொண்டு வருவார்? எனக்கே புரியவில்லை—அவரும் சொல்லவில்லை. அதை என்னைக் கேட்கக் கூடாதென்றுகண்டிப்பாகச் சொல்லி விட்டார்.

"அவர்கள் எட்டுக் கூட்டத்தவர். அவர்களைப் பிரிப்பது என்பது கனவில்கூடக் காண முடியாத காட்சி! ஆனால் வாசகாராவின் புத்திக்கூர்மையில் எனக்கு அதிக நம்பிக்கை உண்டு. அவரும், தேவதத்தரும் இல்லாவிட்டால் எனக்கு முடி இவ்வளவு விரைவில் கிடைத்திருக்குமா? அவர் கையாளும் வழியில் பழியுண்டு; பாபமுண்டு! ஆனால் 'சூட்சமத்தில், மோட்சம்' என்பது அவர் சித்தாந்தம்.

"பார்ப்போம், இனி என்ன நடக்கிறது என்று. அவர் சித்தரித்த நாடகம் அன்றைய ஆலோசனைக் கூட்டம்! திறமையாகவே நடித்தேன். பக்குவமாகவே அவரும் நடித்தார். நாடகம் முடிந்து விட்டது. நாளைய விளைவு என்ன என்பது தான் இனி எதிர்நிற்கும் கேள்வி!"

இப்படி மன்னன் மனம் எதையெதையோ எண்ணிக்கொண்டிருந்தது. மன்னன் கத்தியை எடுத்தான். பழத்தை எட்டுத் துண்டுகளாக்கினான். அதைக் குறுக்கிலும், நெடுக்கிலும் சிறு சிறு கீற்றுக்களாக்கினான். ஒவ்வொன்றாக வாயிலிட்டு மென்றான். பழத்தின் ரசம் நல்ல இனிப்பாக இருந்தது.

மன்னன் முகத்தில் திடீரென்று ஒரு ஆச்சரியம்! தட்டையே உற்று நோக்கினான். அந்தக் கத்தியில் வாசகாராவின் முகம் தெரிந்தது. அந்தப் பழம் வஜ்ஜிநாட்டு வைசாலி போன்றிருந்தது—அப்படி அவன் பிரமை! அஜாதசத்துரு சிரித்தான்!

ஆற்றங்கரையோரம், அவமானத்திற்காளான வாசகாரா, தனது உடலிலே படிந்திருந்த வர்ணங்களைக் கழுவிவிட்டு உட்கார்ந்திருந்தார். அங்கு 'வருவார், போவார்' இல்லாதஇடம் அதுதான். ஆகவே நிம்மதியாக உட்கார்ந்திருந்தார். ஆற்றங்கரையோரம் நாணல் காடு. அதன் பக்கத்

திலே எப்பொழுதோ யாகத்திற்காகக் கட்டப்பட்ட மண்டபம் சிதைந்திருந்தது. ஆடுமாடுகள் மட்டும் அந்தி நேரமானதால் வீடு நோக்கித் திரும்பிக்கொண்டிருந்தன.

அவர் தனக்குத்தானே ஏதேதோ பேசிக்கொண்டார். இடையிடையே சிரிப்பு அவரை அறியாமல் உதட்டை நட்பாக்கிக்கொண்டு வெளியே எட்டிப்பார்ப்பதும், சட்டென்று உள்ளே ஓடி விடுவதுமாக இருந்தது.

"வாசகாரா! உன் புகழ் மீண்டும் ஓங்குகிறது! ஏன்?

"மங்கிவந்த உன் செல்வாக்கு மீண்டும் ஒளிவிடுகிறது. நாறிப்போனதாகக் கருதப்பட்ட உன் நலல நிலே புது மணம் பெறுகிறது.

"ஆம்! இதோ பார்—பழைய வாசகாரா மீண்டும்! இரண்டொரு நிமிடங்களுக்கு முன்னால் இருந்தாயே கரும்புள்ளி செம்புள்ளிகளைத் தாங்கி, அது தான் உன் இடைக்கால உருவம். அது மாறுகிறது. பழைய வடிவு தோன்றத் தொடங்கி விட்டது.

"பிம்பிசாரர் ஆண்டார். அஜாதசத்துருவின் மனதில் அவசரத்தை, ஆத்திரத்தைத் தாவினாய். காரணம், அவன் முடிபெற்றால், நாட்டின் 'பிடி' உன் கையில் என்று எண்ணினாய். அதற்கு ஏற்ற துணையானான் தேவதத்தன், புத்தனின் வைரி! மகன் தந்தைக்காற்றும் உதவி கொலை செய்தல் என்று உலகு கூறுகிற அளவு காரியம் நடந்துவிட்டது. முதலில் அது சரியென்றே செய்தான். பிறகோ நாத்திக நச்சரவம் புத்தன் வழி சாயத் தொடங்கினான். ஒரு நாள் தன் பழைய கதையைக் கூறி அழுதானும் அந்த 'வாலிப முனி'யிடம்! அதிலிருந்தே வாசகாராவிடம் நெருக்கம் குறைவு தான்! என்ன செய்வது?

"வாசகாரா! உன் புகழ் சாவது ஒரு அற்ப விஷயம். ஆனால் பிராமண மதம் சவக்குழி நோக்கிப் பயணந்தொடங்கிவிட்டது. புத்தன் தன் புதிய சவுக்கால் அடித்து விரட்டுகிறான். புத்தன் இப்பொழுது சாதாரண ஆள். அவனுக்கு அரச சலுகையும், ஆதரவும் கிடைத்து விட்டால் என்ன ஆகும்?

"இதோ பார் உன் கண்முன்னால், ஓம குண்டங்கள் மண்மேடாகிக் கிடக்கின்ற அநியாயக் காட்சியை! நெய்யிடுவோர் இல்லை, நெருப்பு வளர்ப்பார் இல்லை, சமித்து சேகரிப்பார் இல்லை! யாக குண்டங்கள் அவிந்து விட்டன! வேதஒலியும் வேள்விப் புகையும் தன் அந்திய காலத்தை எட்டிப்பிடித்து விட்டன.

"பிராமண 'புனித' ஆத்மாக்கள் நடமாடவில்லை. எங்கும நாத்திகம் பேசும் வெள்ளையாடைக்காரப் பிச்சுகளும் பிச்சுணிகளும் வலம வருகிறார்கள்.

"வேதத்தின் புனிதத் தன்மையைப் புறக்கணிக்கிறார்கள். பிராமணத் தலைமையைத் தள்ளிவைக்கிறார்கள். எல்லாரும் சமமாம்; எவரும் சேரலா

மாம் இவர்கள் மதத்தில்! சாதிப்பிரிவுகள் தவறும், சாஸ்திரம் கூறுவது பொய்யாம். யாகம் கூடாதாம். ஆண்டவனுக்கு அளிக்கும் ஆகுதி ஆகாதாம்! என்ன 'அநியாயம்'?

"ஆகவே, அஜாதசத்துருவை முன்போல் உன் கைக்குள் போட்டுக் கொள். புத்தனை நெருங்க விடாதே? அதற்கு வழி உன்மீது அரசனுக்கு அதிக நம்பிக்கை, பிரியம் வளர வேண்டும். அதற்கு மார்க்கம் இது—இந்தக் கழுதை ஊர் வலம்!

"வஜ்ஜி நாட்டின்மீது அரசனுக்கு இருக்கிற ஆசையை வளர்த்தாய். அவன் ஆசை அளவு கடந்துவிட்டது. முடித்துத் தருகிறேன் என்று கூறி வந்தாய். இனித்தான் உன் வேலை—உன் புகழுக்கு மட்டுமல்ல, பிராமண மதத்தின் வாழ்விற்குத் தொடங்குகிறது!

"வஜ்ஜி நாட்டவரை அணு வணுவாகப் பிரிக்க வேண்டும். பிரித்தபின் வெல்வது எளிது! ஆனால், அது, அந்தப் பயங்கர வேலை சுடுகாட்டில் நடமாடுவது போலத்தான்—சிங்கத்தின் குகையிலிருந்து கொண்டு, அதற்குத் தெரியாமல் அதன் கண்ணின் கரு விழியில் ஊசி நுழைக்க முயலும் முயற்சி போலத்தான்! இருந்தாலும் தோல்வி நம் பரம்பரைக்குக் கிடையாது.

"வாள் இல்லை, வாளெடுத்துப் போரிடும் தோள் வலிமை இல்லை! ஆனால் அறிவு இருக்கிறது, அதைப் பயன்படுத்தினால் எதையும் முடிக்கலாம். நம்மிடம் ஏமாற்றிடும் பண்பு, அவர்களிடம ஏமாந்திடும் குணம! பயமேன்?"

வாசகாராவின் மனம் இப்படியெல்லாம் அவரிடம் கூறிக்கொண்டிருந்தது. அதனால் தான் இடையிடையே சிரித்தார்.

வாசகாரா ஆற்றைக் கடந்தார். வைசாலியின் எல்லைக்கு வந்துவிட்டார்.

வைசாலி அரசமாளிகையில் வஜ்ஜி பூபதி அமர்ந்திருந்தான், அரசாங்க அலுவல்கள் பற்றி எட்டுக் கூட்டத்தைச் சேர்ந்தவரும் அங்கு குழுமியிருந்தனர்.

அப்பொழுது ஒற்றன் ஒருவன் ஓடோடி வந்தான். சிரத்தை வளைத்து வணக்கம் செலுத்தினான்.

"பொன் கொழிக்கும் வஜ்ஜி நாட்டுப் பூபதிகளே, இனத் தலைவர்களே! வணக்கம். இன்று ஆச்சரியமான ஒரு செய்தி. மகதநாட்டு மன்னன், தனது முதலமைச்சர் வாசகாராவைக் கழுதைமேல் ஏற்றி நாடு கடத்திவிட்டான்; தான் படையெடுக்க எண்ணியிருந்த நம் நாட்டவருக்காக அவர் பரிந்து பேசினார் என்பதற்காக!"

"ஆ, என்ன ஆச்சரியம்"

எல்லோரும் ஒரே குரலில் கூறினர்.

"அவர் இப்பொழுது எங்கே?" என்று வஜ்ஜித் தலைவன் கேட்டான், அவசரமாக.

"நம் நாட்டு எல்லையில்"

"அழைத்து வா அந்தப் பொற்குணம்படைத்த சற்குண சீலரை" என்று விதேக முதல்வன் கட்டளை பிறப்பித்தான்.

"அரச மரியாதைகள் அணுவும் குறைக்கவேண்டாம்" என்ருன் லிச்சவி இன 'ராஷ்டிரபதி'

"தங்கப் பல்லக்கில் முத்துச் சரங்கள் கட்டுங்கள். பட்டால் அலங்கரியுங்கள். எட்டு எழிலரசிகள் சாமரம் வீசட்டும். பட்டத்து வேழம் பூர்ணகும்பம் தாங்கட்டும். படை பவனிவரட்டும்" என்ருன் ஜஞதிகாரித் தலைவன்.

"தங்கள் கட்டளை-வணக்கம் வாழ்க!"

ஒற்றன் போய்விட்டான். மற்றவர் இந்தப் புதிய செய்தியினுல் தாக்குண்டு திகைப்பால் மௌனிகளாயிருந்தனர்.

"அஜாத சத்துரு — மூர்க்கன், முன்கோபக்காரன்! பதைபதைப்பால் பாதை தவறிவிட்டான். அறிஞன் ஒருவனை அவமானப்படுத்தி விட்டான். அவமானம் — அந்த வார்த்தையே சுமக்கமுடியாத அர்த்தம் தந்துவிட்டான் மகதநாட்டான். மொட்டையடிப்பதாம், புள்ளியிடுவதாம், கழுதையில் ஏற்றுவதாம். அவமானத்தின் அளவு எவ்வளவு பெரிது! சாதாரண இழி மகனுக்குக் கூட இந்தத் தண்டனை தருவதில்லை. அறிவின் சிகரம், ஆராய்ச்சியின் உச்சி, வேதவிற்பன்னர், அரசியல் வீரகர் வாசகாரா — அவருக்கா இந்த மானக்கேடு? நினைக்க முடியவில்லையே!"

"அப்பனைப்போல ஏன் இந்த அஜாத சத்துரு இருக்கக் கூடாது? எவ்வளவு நேச மனப்பான்மை! கோசலநாட்டுக் கோதை யொருத்தியும், லிச்சவி நாட்டுத் 'துளிர் இலை' யொருத்தியும் மகதநாட்டு மஞ்சத்தில் கொஞ்சினர், பிம்பிசாரர் காலத்தில் — ஆனல் இந்த மதங்கொண்ட மட்டி கோசலத்தோடு முட்டினுன். வஜ்ஜியோடு போர் தொடுப்பேன் என்று தோள் தட்டுகிருன்."

"விளக்கோடு விளையாடும் விட்டில் பூச்சி"

"கிடக்கிறது, கழுதை! வரும் வாசகாராவுக்கு நாம், அவன் செய்த பழியைத் துடைக்கிற அளவு, மரியாதை செய்ய வேண்டும்"

"அது நம் கடமை! இந்தப் பெரிய அவமானம், நமக்குப் பரிந்துபேசியதால், அவருக்குக் கிடைத்தது. நம்மீது உள்ள ஆசை தந்த பரிசில் 'கழுதை ஊர்வலம்' — நினைவில் வையுங்கள்!"

"வரட்டும், வேண சிறப்புகள் வழங்குவோம்"

இப்படிப் பேசியிருந்தனர். அப்பொழுது துந்துபி முழக்கமும், சங்கநாதமும், மேளதாள ஒலியும் கேட்டன.

வாசகாரா வந்து விட்டார்—

"வணக்கம்-வாழ்வு பெருகுக. தங்களின் கருணை உள்ளத்திற்கு நன்றி! என் வாழ்வில் ஒரு 'சுபதினம்' உங்கள் சந்திப்பு" என்று பரிவோடு நன்றி நவின்ருர் வாசகாரா.

"அமருங்கள் இந்தப் பொன் தவிசில். தாங்கள் இங்கு வருமுன், நடந்த விபரம் கேள்விப்

பட்டோம். வருந்தினோம். சமயம் வருகிற நேரத்தில் நிச்சயம் அந்த செருக்குப் படைத்த சிறுவனுக்குப் பாடம் புகட்டுவோம்''

"வளர்த்த கடா மார்பில் பாய்வது வழக்கம். தீட்டிய மரத்திலேயே கூர் பார்ப்பது இயல்பு — அஜாத சத்துரு முழு உருவடைய என் மூளை வேலை செய்தது — ஆனால் 'கழுதை ஊர்வலம்' அவன் எனக்கு ஆற்றிய பிரதி யுபகாரம்''

"வருந்த வேண்டாம், பிராமண குல முதல்வ! தாங்கள் அங்கு வகித்துவந்த அமைச்சர் பதவியை இங்கே ஏற்றுக் கொள்ளுங்கள். தங்கள் மன ஆறுதலுக்காக அளிக்கப்படுகிறதுஎன்று எண்ணித் தடுக்க வேண்டாம். இது எங்கள் வேண்டுகோள் — மறுக்க வேண்டாம், மன்றாடுகிறோம்''

''க்ஷத்திரிய வீரர்களே! ஒரு சாதாரண பிராமணனிடம் நீங்கள் இவ்வளவு மதிப்பு வைத்திருப்பதைப் பார்த்துப் பெருமையடைகிறேன். தங்கள் கட்டளையை ஆண்டவன் கட்டளையென்று ஏற்க இசைகிறேன்''

எட்டு இனத் தலைவர்களும் ஒருங்கிருந்த சமயத்தில் வாசகாரா வந்து சேர்ந்தார். அவருக்கு அமைச்சர் பதவியளித்தனர். ஏற்றார். அவர் காரியத்திற்கேற்ற பதவி கிடைத்தது கண்டு மகிழ்ச்சி — குடத்திலே உள்ள நீர் போல-அவர் மனத்திலே ததும்பியது!

வஜ்ஜி நாட்டான் அத்துடன் நிறுத்தவில்லை — மேலும் ஒரு படி சென்றான்!

"யானை பட்டத்து யானையில் நமது புது அமைச்சர் நகர் வலம வரட்டும். கழுதை ஊர்வலம் நடத்திய கயவன் முகத்தில் கரி பூசப்படுவது போலக் காரியம் இருக்கட்டும். வீதிக்கோடியில் அந்த அற்பன் அஜாத சத்துரு கழுதைமேல் இருப்பதுபோலச் சிலை செய்து வையுங்கள். வேடிக்கை பார்க்கட்டும். இந்தச் சேதிகேட்டு, அந்த 'வீரன் விம்மி யழட்டும்! அவன் விருப்பும், 'கைவரிசையும்' நாம் பார்ப்போம்''

மண்டபக்கூட்டம் கலைந்தது. மறுநாள் வைசாலியில் ஒரே குதூகலம் — புது அமைச்சரைக்காண மக்கள் துடியாய்த் துடித்தனர். இளம் பெண்கள், இல்லத்து 'நடமாடும் செல்வங்கள்', கிழங்கள் எல்லாம் வீடுகளின் வாசல்களை அடைத்து விட்டனர். சாளரங்களில் மெல்லிய திரை, அதற்கப்பால் 'பொன் விக்கிரகங்கள்' வேடிக்கை பார்த்தன.

சிலர் மாலையிட்டனர். சிலர் வீதிகளில் நீர் ஊற்றினர். சிலர் கோலமிட்டனர்.

ஆனால், வீதிக்கு வீதி கழுதைமேல் ஒரு 'வைக்கோல் மனிதன்' பார்த்திருந்தான் இந்தக் காட்சியை — யானை மேல் ஊர்வலம் — கழுதை ஊர்வலம் அல்ல!

(அடுத்த இதழில் முடியும்)

கன்னட இலக்கியம்

கா. அப்பாத்துரை

1. முன்னுரை.

இந்திய மொழிகளுள் தமிழுக்கும் வடமொழிக்கும் அடுத்தபடி பழமை வாய்ந்த இலக்கியமுடையது கன்னடமே.

கன்னடம் திராவிட மொழிக் குழுவைச் சேர்ந்தது. பண்பட்ட திராவிட மொழிகளாகிய தென் இந்திய மொழிகளுள், பழமையிலும், இலக்கியப் பரப்பிலும் அது தமிழுக்கு அடுத்தபடியானது. நாட்டுப் பரப்பிலும் மக்கள் தொகையிலும், அது தமிழ், தெலுங்கு ஆகியவற்றுக்கு அடுத்த மூன்றும் இடம் உடையது.

கன்னடம் என்பது கர்நாடகம் என்ற தொடரின் சிதைவு ஆகும். வடமொழியில் அது 'கர்நாடகம்' என்றே குறிப்பிடப்படுகிறது.

கன்னடம் பேசும் மக்கள் தொகை ஒரு கோடி. மைசூர்த் தனியரசு, ஹைதராபாத் தனியரசின் மேல் பகுதி, பம்பாய் மாவட்டத்தின் 'தென்மராட்ட' வட்டங்கள், சென்னைமாவட்டத்தின் தென் கன்னட, பெல்லாரி வட்டங்கள் ஆகியவை கன்னட நாட்டைச் சேர்ந்தவை.

2. கன்னட நாட்டில் பிற மொழியகத் தொடர்புகள்.

கன்னட நாட்டு வரலாறு, மொழி, இலக்கியம், சமயம் ஆகியவற்றில் தெலுங்கு நாடு தமிழ் நாடு ஆகிய இரு பகுதிகளின் தொடர்புகள் பல. தென்மொழிக் குழுவுக்கே சிறப்பான எழுத்துக்களுள் வல்லின றகரம் அண்மை வரை தெலுங்கிலும் கன்னடத்திலும் இருந்தது. ழகரம் அண்மைவரை கன்னடத்திலிருந்தது. தவிர 13-ம் நூற்றுண்டு வரை தெலுங்கெழுத்துக்களின் உருவம் கன்னட எழுத்துக்களின் உருவினின்று வேறுபடாமல் ஒரு தன்மையதாகவே இருந்தது.

கன்னட இலக்கிய வரலாற்றில் தொடக்கத்தில் சமண சமயமும் பின் வீர சைவ சமயமும் இறுதியில் வைணவ சமயமும் தலைமை நிலை பெற்றன. சமணர் சமயத்துக்கு முற்பட்ட இலக்கியம் காணப்படவில்லை. இச்சமய இயக்கத் தொடர்ச்சி வரிசை தென்மொழிகளின் வரலாற்றில் ஒன்றின் பின் ஒன்ருக வந்த சமய இயக்கங்களின் வரிசை முறையைக் காட்டுவதாகும்.

3. தமிழிலக்கியமும் கன்னட இலக்கியமும்.

கன்னட இலக்கியத்தின் வீர சைவப் பகுதி சிறப்பாகவும் சமணப்பகுதி ஓரளவுக்கும் தமிழிலக்கியத்துடன் தொடர்புடையது. சைவ சமய நாயன்மார் அறுபத்து மூவரும் வீர சைவரால் பழஞ்சைவ நாயன்மார் (புராதனர்) ஆகக் கொள்ளப்பட்டனர். அவர்களுள் சம்பந்தர் பற்றித் தமிழகத்திலில்லாத கதைகள் கூடக் கன்னட நாட்டில் வழங்குகின்றன. அறுபத்து மூவருள் சேர்க்கப்படாத மாணிக்கவாசகர் கன்னட வீர சைவரால் வீர சைவத் தொண்டர் 770 பேர்களுள் தலை சிறந்தவராகக் கொள்ளப்படுகிறார். இவர்கள் தவிர வீர சைவத்தின் சிறப்புத் தலைவர்கள் பசவர், சென்பைசவர், அல்லமர் முதலியவர் ஆவர்.

தமிழிலுள்ள குறள், நாலடியார், மூதுரை, நல்வழி முதலிய நூல்கள் கன்னட வைணவ இலக்கியத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதைத் தவிரத் தமிழிலக்கிய நூலான பிரபுலிங்க லீலைக்கு முதனூல் கன்னடப் பிரபுலிங்க லீலையே என்பதும் குறிப்பிடத்தக்கது.

கன்னடமொழி ஹளகன்னடம் (பழங்கன்னடம்) புதுக்கன்னடம் என இரு பிரிவாகக் கொள்ளப்படுகிறது. ஹள கன்னடம் செந்தமிழ் போன்ற பழைமை வாய்ந்த மொழி நடை. பொது மக்கள் மொழியையே வீரசைவ இயக்கம் பின்பற்றியதால் எழுந்த புதிலக்கிய மொழி புதுக்கன்னடம். கன்னடப் புலவர் ஹள கன்னடத்தை விடாது ஆதரித்து இன்றும் அதில் சிறுபான்மையாக நூல்கள் இயற்றி வருகின்றனர். புதுக்கன்னடத்தைவிட ஹள கன்னடம் தமிழுடன் நெருங்கிய உறவுடையது.

கன்னட இலக்கிய வரலாற்றைச் சமண காலம் (9-முதல் 12-ம் நூற்றாண்டு வரை) வீரசைவ காலம் (12-முதல் 16-ம் நூற்றாண்டு வரை) வைணவ காலம் (16-முதல் 19-ம் நூற்றாண்டு வரை) கன்னடக் காலம் (19-20 நூற்றாண்டுகள்) என வகுக்கலாம்.

4. சமண கால இலக்கியம் (9-12 நூற்றாண்டுகள்)

கன்னட நாட்டில் கி. பி. 4-5 நூற்றாண்டுகளிலிருந்தே இலக்கிய வாழ்வு தொடங்கியிருக்க வேண்டும். ஆயினும் 9-ம் நூற்றாணடுக்கு முற்பட்ட இலக்கியம் எதுவும் கிட்டவில்லை. பிற்கால இலக்கிய உரையாசிரியர்களின் மேற்கோள்களாலும், குறிப்புக்களாலும் பல புலவர் பெயர்களும், நூற் பெயர்களும் அறியப்படுகின்றன. கன்னட நாட்டில் பேர் போன வடமொழிச் சமண ஆசிரியர்களான சமந்தபத்திரர், கவிபரமேஷ்டி பூஷ்யபாதர் ஆகியவர்களும் கன்னட மொழியில் எழுதி வந்ததாக அறிகிறோம். ஆயினும் இன்று இலக்கிய உலகுக்கு எட்டியுள்ள முதல் கன்னட நூல் 'கவிராஜமார்க்கம்'

[illegible] நூலை யாகும். இது நிருபதுங்கன் (814-877) என்ற இரட்ட கூட அரசன் பெயரால் நிலவினும் அவன் அவைப்புலவர் ஒருவர் இயற்றியதேயாகும். குணவர்மன் (முந்தியவர்) எழுதிய நேமிநாதபுராணமும் 'சூத்திரகன்' என்ற நூலும் இந்நூற்றாண்டுக் குரியவை.

பத்தாம் நூற்றாண்டில் மும்மணிகள் என்று கூறப்படும் (முந்தியவர்) பன்னன், இரன்னன் என்பவர் வாழ்ந்தனர். பண்டைச் சமண சமயாச்சாரியாராகிய 24 தீர்த்தங்கரர்களுள் முதல்வரான இடபதேவர் வரலாறு கூறும் ஆதிபுராணமும் விக்கிரமார்ச்சுன விசயம் அல்லது பம்ப பாரதமும் இவர் இயற்றிய சிறந்த நூல்கள். இருமொழிக்கவியரசர் எனப் பட்டம் பெற்ற பன்னன் 14-ம் தீர்த்தங்கரர் வரலாறாகிய சாந்திபுராணம், ஜினாட்சரமாலை ஆகியவற்றாலும் வளையல் செட்டி மரபினர் ஆகிய இரன்னன் அசித புராணம், சாகச பீமவிசயம் ஆகியவற்றாலும் புகழ் பெற்றவர்கள். சாவுண்டராயர் என்பவர் எழுதிய திரிசஷ்டி இலட்சண மகா புராணம் அல்லது சாவுண்டராய புராணம் கன்னடத்தின் முதல் முழு உரை நடை நூல் ஆகும். நாகவர்மன் (முந்தியவர்) சந்தாம் புதி என்ற சிறந்த யாப்பிலக்கணத்தின் ஆசிரியர்.

சோழர் படையெடுப்பால் 11-ம் நூற்றாண்டின் பெரும் பகுதியிலும் கன்னட நாட்டில், இலக்கிய வாழ்வு முற்றிலும் சீர்குலைந்தது. அதன் இறுதியில் தமிழகத்தில் தண்டியாசிரியர் காலத்தில் வடமொழி தமிழ் மொழி இரண்டிலும் எழுந்த சொல்லணிச் சித்திர அணிப் பித்துக் கன்னட நாட்டிலும் பரந்தது. சந்திரராசன் என்பவர் பல சந்தங்களுக்கு இடம் தருவதும் பொருளும் ஒலிப்பும் ஒத்தியைந்ததும் ஆன மதன திலகம் என்ற அணி நூல் ஒன்று இயற்றினார்.

பல்லாள அரசன் அவைப் புலவர் நாகசந்திரர் அபிநவபம்பர் எனப்புகழப் படுபவர். அவர் எழுதிய பம்ப ராமாயணம் எனப்படும் இராமச்சந்திர சரித்திர புராணம 12-ம் நூற்றாண்டின் தலைசிறந்த நூல் ஆகும்.

கதையளவில் இந்த இராமாயணம் வால்மீகி இராமாயணத்தை ஒத்ததாயினும் சமண இராமாயணங்களை ஒட்டி இது பல நிகழ்ச்சிகளில் அதனின்றும் மாறுபட்டதாகும். கிட்கிந்தை மக்கள் குரங்குகள் அல்லர், குரங்குக் கொடியுடைய நன்மக்களே என்பதும், இராவணன் வான ஊர்தி செல்லும் திறமுடைய நல்லரசனே, பத்துதலை அரக்கன் அல்லன் என்பதும், இராவணன், கரன் முதலியவர்கள் கொலை வேள்வியை எதிர்த்த சமணர்களே, அரக்கர் அல்லர் என்பதும் இந்நூலின் தனிப்பட்ட வேறுபாடுகள் ஆகும்.

பல்லாள அரசவைப் புலவருள் தமிழ் நாட்டு ஔவை போன்ற காந்தியார் என்ற பெண் புலவரின் பெயரும் காணப்படுகிறது. நாகச்சந்திரன்-காந்தியார் பாட்டுப்போட்டி

ஔவை—கம்பர் போட்டிக் கதையை நினைவூட்டுவதாயுள்ளது.

நாகவர்மன் (பிந்தியவர்) எழுதிய கர்நாடக பாஷா பூஷணம கன்னடமொழியின் தலை சிறந்த இலக்கணங்களுள் ஒன்று. இவர் எழுதிய யாப்பணி இலக்கணமாகிய காவியாலோகனம், மணிமேகலை போலப்புறச் சமயத்தை மறுத்துத் தன் சமய நிறுவும் சமய நூலாகும். பிரமசிவா எழுதிய சமய பரிசையும் இக்கால இறுதியில் எழுந்த இன்னொரு சிறந்த நூலாகும். பிரமசிவா ஆனின மருத்துவ நூல் என்னும் விலங்கு மருத்துவம் (*Veterinary Science*) பற்றிய செய்யுள் நூலும் ஆகும் இக்காலத்தில் சமணரல்லாதார் இயற்றிய நூல் துர்க்கசிம்மனின் பஞ்சதந்திரம்' என்ற 'சார்பு' நூலே. இது பிசாச மொழியில் (காஷ்மிர எல்லை மொழியில்) குணாட்யன் எழுதிய முதல் நூலின் மொழி பெயர்ப்பாகும்.

5. வீரசைவ காலம்

(12-16-ம் நூற்றண்டுகள்).

வீர சைவ காலத்திலும் அதன் பின்னும் சமண நூல்கள் எழுதபபட்டே வந்தன. 24 தீர்த்தங்கரர் வரலாறுகளும் அவற்றில் பேரிடம் பெற்றன. வீர சைவ இயக்க காலத்தில் இதுபோல் நாயன்மார் வரலாறும் வீர சைவத் தலைவர் வரலாறும் சிவபுராணக் கதைகளும் மிகுதியாக வழங்கின. சைவம், சமணம் ஆகியவற்றைப் போலவே வீர சைவமும் மிகப் பழைய சமயமே.

ஆயினும் 1160ல் காலசூரி மரபினனாகிய பிச்சளமன்னனை எதிர்த்துப் பசவரும் சென்னப் பசவரும் எழுப்பிய இயக்கத்தாலேயே அது புத்துயிர் பெற்றது. வடமொழியும் பழைய காவிய வழக்கும் கலந்த சமண இலக்கிய நடையைப் புறக்கணித்து வீர சைவ எழுத்தாளர் எளிய பேச்சுநடையில் எழுதினர். இது இச்சமயத்துக்கு மிகுதி ஆக்கம் அளித்தது.

அரிசுவரர் அல்லது அரிகரர் என்ற புலவர் 1165-லேயே 63 தமிழ் நாயன்மார் வரலாறுகளை 'ரகளே' என்ற நாட்டுப் பாடல் உருவில் 'சிவகணத ரகளே' என்ற நூலாகச் செய்தார். முதல் நாயனர் புராணப் பெயரைஒட்டி அது 'கமபியண்ணன ரகளே' எனவும் பெயர் பெறும். 'பார்வதி திருமணம்' பற்றிய 'கிரிஜா கலியாணம' இவர் எழுதிய பெருங் காப்பியம். ஹம்பியில் கோயில் கொண்ட விரூபாககப் பெருமானமீது 'பம்பசதகம்' என்ற நூறு பாடல்கள் இவரால் இயற்றப்பட்டன.

இவர் சிகூராகிய இராகவாஸ் வைணவ அரசனைப்பற்றி அரிச்சந்திர காவியம் எழுதியது குறித்து அவர் மாமன் வருந்தியதாகக் கூறப்படுகிறது. அவ்வருத்தம் தீர 'சித்தராம புராணம்' என்ற வீரசைவத் தொண்டர் வரலாறும் அவர் ஆசிரியர் அரிசுவரர் புகழ்பற்றிய 'அரிகர மகத்துவம்' என்ற நூலும் எழுந்தனவாம்.

பெலூர்க் குளத்தை அமைச்சர் என்ற முறையில் கட்டியதால் 'கெரெய்' எனப் புனைபெயர் பெற்ற பத்மராசர் "தீக்ஷர் போதம்" என்ற சமய வினவிடைப் பாடல் (ரகளே) நூல் இயற்றினர். இவர் புதல்வரும் சிறந்த கவிஞர் ஆவர்.

தேவகவியின் 'குசுமாவதி' அழகிய நடையில் அமைந்த 'சமபூ' நூல். கன்னடத்தின தலை சிறந்த காதற் புனைவுக் கதைகளுள் இது ஒன்று. ஓவியங் கண்டு காதலித்த ஓர் இளவரசனும் இளவரசியும் இதன் கதைத் தலைவர் ஆவர். மேற்குக் கரை நாட்டில் ஒரு சிற்றரசராயிருந்ததாகக் கூறப்படும் சாமராசர் 13-ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் எழுதிய 'சிருங்கார ரசம்' பரிவாரத்துடன் கயிலை சென்ற ஒரு மன்னவன் கதையாகும். இது மேற்குக் கரை மன்னனாகிய சேரமான் பெருமானின் கதையை நினைவூட்டுவதாகும்.

14-ம் நூற்றுண்டின் சிறந்த புலவர்கள் பீமகவியும், குப்பி நகரைச் சார்ந்த மல்லணார்யரும் ஆவர். பீமகவி பசவ புராணத்தின் ஆசிரியர். கன்னடத்தில் பெரும்பான்மை வழக்குடைய அறுசீர் விருத்தத்தில் (ஷட்பதி) இது எழுதப்பட்டுள்ளது. மல்லணார்யர் வீரசைவாமிர்தம், சிவபக்தர் புராணம். பாவசிந்தாரத்தினம் அல்லது சத்தியேந்திர சோழகதை ஆகியவற்றின் ஆசிரியர். இறுதிநூல் பிள்ளை நாயனார் (திருஞான சம்பந்தர்) எழுதியதாகக் கூறப்படும் சத்தியேந்திர சோழன் கதையைத் தழுவியதாகக் கொள்ளப்படுகிறது. திருஞான சம்பந்தர் கதைகளில் தமிழ் நாட்டில் பாண்டியன் பெயரைவிட மிகுதியாக இச்சோழன் பெயர் கூறப்படுகிறது.

வீரசைவ காலச் சமண இலக்கியத்துள் 12-ம நூற்றுண்டினனாகிய நேமிச்சந்திரன் இயற்றிய 'லீலாவதி' கன்னடத்தின் முதல் புதுமைப் புனைகதை ஆகும். 13-ம் நூற்றுண்டில் சன்னன் இயற்றிய 'யசோதா சரித்திரம்' தமிழ் யசோதா காவியத்தை நினைவூட்டுவது. சிசுமாயனன் கன்னடத்தில் புகழடைந்த இலக்கியத் துறையாகிய 'சாங்கத்திய' முறையை (இசைநாடகப்பாடல்) தோற்றுவித்தவன். அஞ்சன சரித்திரம், திரிபுர தகனம் ஆகியவை அவன் எழுதிய இசைப் பாடல் நூல்கள்.

ஆண்டய்யா என்னும் புலவர் தம் நூலிலும், நூற்பெயரிலும் தூய கன்னட நடையைப் பின் பற்றியவர். வடமொழிக் கலப்பால் கன்னடத்தின் வனப்புக் குன்றி வருகிறதென இவர் அறை கூவினர். இவர் நூல்கள் 'கப்பி காகால' (கவிஞர் பாதுகாப்பு) 'காவனகேல்ல'(காமன் வெற்றி) என்பவை. ஆங்கிலத்தில் 'பொன கருவூலம்' (*Golden Treasure*) என்ற அழகிய கவிதைத் திரட்டுக் கொப்பாகக் கன்னடத்தில் 'காவிய சாரம்' என்ற பாடல் திரட்டு அமைத்த பெருமை மல்லிகார்சுனருக்குரியது. இன்றைய கன்னட இலக்கியங்களுள் தலை சிறந்த 'சப்தமணி தர்ப்பண'த்தின் ஆசிரியரான கேசிராசர் இக்காலத்தவர்.

இரட்ட கவி என்பவர் எழுதிய இரட்ட சூத்திரம் கீழ் நாடுகளிலேயே காணப்படாத அரிய அறிவு நூல். இது நில அதிர்ச்சி, இடி, வழி எதிர்ப்புகள், கோள் நிலைகள் ஆகியவைபற்றிய உண்மைகளை அக்கால நிலைக்கு ஏற்க விளக்

கப் புகுந்த அறிவு விளக்க நூல். குமுதேந்து ராமாயணம், கசேந்திர மணிதர்ப்பணம் என்ற இலக்கணம், அபிநவசந்திரர் இயற்றிய குதிரை மருத்துவம் பற்றிய நூல் ஆகியவை இக்காலதில் குறிப்பிடத்தக்க நூல்கள்.

6. வைணவகால இலக்கியம் (16-19 நூற்றாண்டுகள்)

தமிழ் நாட்டில் பிறந்த இராமானுஜரும் வங்கநாட்டில் பிறந்த சைதன்னியரும கன்னட நாட்டில் வந்து தங்கித் திருமாலிடங்கள் தோறும் சென்று தம் அன்பு நெறியைப் பரப்பியவர் ஆவர். கன்னட நாட்டிலேயே பிறந்த மாத்துவர் முன்னவர் சிடராகவும் பின்னவர் ஆசிரியராகவும் அமைந்தவர். இம் முப்பெரு வைணவத் தலைவர்கள் தொண்டுக்கும ஒருங்கே உரியநாடு கன்னட நாடே.

வைணவ இலக்கியத்தின் பெரும்பாலான நூல்கள் விஷ்ணுபுராணம், பாகவதம், இராமாயணம் ஆகியவற்றின் மொழிபெயர்ப்புக்களும் நாடோடிப் பக்திப்பாடல்களும் ஆகும். பாரத இராமாயணங்கள் சமணர் காலத்தில் பலதடவை மொழி பெயர்க்கப்பட்டாலும் வேத மொழியாளர் (இந்து சமயச்) சார்பாகவும் வைணவச் சார்பாகவும் அவை மீண்டும் பெயர்த்தெழுதப்பட்டன.

12-ம் நூற்றுண்டிலேயே உருத்திரபட்டர் என்ற வேத நெறிப் பிராமணர் விஷ்ணு புராணத்தைத் தழுவி 'ஜெகந்நாதவிசயம்' இயற்றியிருந்தார். விசயநகரப்பேரசின் புகழ்மிக்க மன்னான கிருஷ்ண தேவராயர் காலத்தில் மகாபாரதத்தின் 18 பருவங்களையும் நாரணப்பா, திம்மண்ணா ஆகிய இருவர் மொழிபெயர்த்தனர். முதல் 10 பருவங்களடங்கிய முற்பகுதியை எழுதிய முதற் புலவர் குமாரவியாசர் எனச் சிறப்பிக்கப்பட்டார். இந்நூல் கடக் என்ற நகரில் எழுதப்பட்டதனுல் கடகின பாரதம் எனப்படும். பிற்பகுதி நூல் கிருஷ்ணராய பாரதம என்றழைக்கப்படுகிறது.

கன்னடத்தில் முதல்தர மதிப்புடைய பாரதங்கள் பம்ப பாரதமும் ஜைமினி பாரதமுமே யாகும. பின்னது 18-ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் இலக்ஷ்மீசன் என்பவரால் எழுதப்பட்டது. இதில் தலைமையான நிகழ்ச்சி தருமர் குதிரை வேள்வியே (அசுவமேதயாகம்) ஆகும. ஆயினும பல துணைக்கதைகளும் நாடோடிக்கதைகளும அதனிடையே இணைக்கப்பட்டுள்ளன. தமிழகம் பற்றிய பல செய்திகளும் இதில் காணப்படுகின்றன. தமிழகத்தின் தென்பகுதியில் பெண்கள் நாடு ஒன்று இருந்ததாக இதில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அருச்சுனனின் பாண்டிய நாட்டு மைந்தனை பப்புருவாகனன் மணிப்பூரில் ஆண்டதாகவும் அவன் கையால் அருச்சுனன் முன்வினையிட்டின் (சாபப்)படி மாண்டு கண்ணனால் உயிர்ப்பிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இம மணிப்பூர் தென் மைசூரிலுள்ள ஒரு நகரமெனக் கன்னட அறிஞர் கருதுகின்றனர்.

இலேயே 'தோரவா ராமாயணம்' என்று,'குமாரவால்மீகி' என்ற புனைபெயருடைய புலவரால் இயற்றப்பட்டது. தோரவா என்பது அந்நூல் எழுதப்பட்ட இடமே ஆகும். 16-ம் நூற்றுண்டில் இலக்ஷ்மரும் சமணராகிய சாளுவரும் 17-ம் நூற்றுண்டில் சுகுமாரரும் வேறு இராமயணங்கள் இயற்றினர்.

பாகவத புராண மொழிபெயர்ப்பும் பாகவதக் கதை நிகழ்ச்சிகளை விரித்துரைக்கும் நூல்களும் எண்ணற்றவை. சாடு விட்டல நாதர் என்ற இயற்பெயருடைய 'நித்தியாத்மசுகர்' பாகவத புராண முழுவதையும் மொழிபெயர்த்தார். வேங்கய்யா ஆர்யா பாகவதத்தின் முதல் 10 கந்தங்களையும் சுருக்கிக் 'கிருஷ்ணலீலாப்யுதயம்' என்ற நூலாக்கி அதனைத் திருப்பதியிலமர்ந்த திருமாலுக்குப் படைத்தார். ஆனந்தராமாயணம், அனுமத் விலாசம், உத்தர ராமாயணம் ஆகிய இராமாயணக் கதை நூல்களும் இக்காலத்தில் எழுதப்பட்டன.

பக்திச் சுவைப் பாடல்கள் இக்காலத்தில் எண்ணற்றவை. பெருவாரியாக இவ்வகைப் பாடல்கள் பாடியவர்கள் 16-ம் நூற்றுண்டில் வாழ்ந்த புரந்தரதாசர், கனகதாசர், 18-ம் நூற்றுண்டில் வாழ்ந்த வராக திம்மப்பதாசர் ஆகியவர்களே. மற்றும் விட்டலதாசர், வேங்கடதாசர், விசயதாசர், கிருஷ்ணதாசர், மாத்துவதாசர் ஆகிய 'தாச'க் குழுவினர் 18-ம் நூற்றுண்டினரான சிதானந்தர் இத்துறையில் பிறமொழியாளரும் சுவைக்கத்தக்க 'அரிபக்த ரசாயனம்' என்ற இனிய பாடல் நூல் இயற்றினர். இப்பாடல்களுள் ஒன்றில் தெருவில் பொருள் விலை கூறி விற்பவர் பாணியில் பெருமாள் பெயராகிய 'விலையிலாக் கற்கண்டின் புகழ்' கூறப்படுகிறது.

17-18ம் நூற்றுண்டுகளில் சைமினி பாரதம் எழுதிய இலக்ஷ்மீசனுக்கொப்பான புகழுடைய சமண சைவ சமயப் பெரியார் இருவர். சமணப் பெரியாரான பட்டாகளங்கர் கன்னட இலக்கணத்தை வடமொழியில் சூத்திரமாக்கி வடமொழியிலேயே காண்டிகை விருத்தி உரைகளுடன் வழங்கினர். வீரசைவராகிய சடாட்சர தேவர் விருஷபேந்திர விசயம், சபரசங்கர விலாசம் என்ற நூல்களையும் இராசசேகர விலாசம் என்ற கன்னடத்தின் ஒப்புயர்வற்ற பாடற்புனைகதை நூலையும் இயற்றினர். இராசசேகர விலாசத்தின் கதைத் தலைவர் ஞானசம்பந்தர் கதையில் இடம் பெறும் சத்தியேந்திர சோழனின் மகனும் அமைச்சன் மகனும் ஆவர். சோழன் மகன் இலங்கைமீது படையெடுத்து இலங்கை அரசன் மகளை மணந்தனன். அவன் வற்புறுத்தலால் அடங்காக் குதிரையேறிய அமைச்சன் மகன் குதிரையினால் ஒரு சிறுவன் மாள அது காரணமாக அரசன் மகனும் அமைச்சன் மகனும் அரசனும் சிறுவன் தாயும் மாள, சிவ

உயிர்ப்பித்ததாகக் கதை. தமிழ் மனுநீதி கண்டசோழன் கதையை இது நினைவூட்டுவதாகின்றது.

வைணவ இலக்கிய காலத்தில் சைவம்பற்றி எழுதிய இன்னொரு பேராசிரியர் நிசகுணயோகி ஆவர். இவர் வேதாந்தப் பாடலாகிய பரமார்த்த கிதை, அனுபவசாரம், பரமானுபவ போதம் ஆகியவற்றையும் நாயன்மார்கள் பற்றிய முச்சீர்ப்பாடல் நூலான 'புராதன திரிபதி'யும் சிவநெறிப் பேரறிவுக் களஞ்சியமான கைவல்லிய பத்ததியும் இயற்றினார். பேரறியப்படாத இன்னொராசிரியரால் முச்சீரிலேயே பிரமோத்தர காண்டமும், மைசூர்த் தளவாய் மரபினரான நஞ்சராசரால் சிவபத்தி மகாத்மியமும் எழுதப்பட்டன.

மக்கள் சமயத்திலும் வாழ்வியலிலும் பகுத்தறிவுச் சீர்திருத்த ஒளி ஊட்டிய கவிஞர் சர்வக்ஞமூர்த்தி ஆவர். இவர் பாடல்கள் தமிழில் சிவவாக்கியர் பாடல்களையும் தெலுங்கில் வேமனர் பாடல்களையும் நினைவூட்டுபவை. பாடல்தோறும் இவர் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இவர் முச்சீர் மணிகளில் மூன்றின் கருத்துக் கீழே தமிழ் வடிவில் தரப்படுகிறது.

1 பறையன் மனை புகும் கதிரோன் ஒளி தீதாகிப் பறையொளியாய் மாறிடுமோ? பறையனென்றும் மறையவனென்றும் பேதமேது? எவர்க்கும் இறையருளுண்டேல் உயர்வுண்டாம். சர்வக்ஞ.

2 நடமாடித்திரியும் தாய் நிலமும் ஒன்றே; விடாய் தீர்க்கும் நீர் ஒன்றே; வீட்டினுள்ளே அடுப்பதனில் எரி தழலும் ஒரு தன்மைத்தே; எடுப்பதெங்கே குலம் சாதி காண்! சர்வக்ஞ.

3 பன்றியாய்ப் பிறந்திட்டான் பெருமாள்; ஈசன் சென்றிரந்தான் மனைதோறும்; விதியின் தாதை அன்றிழந்தான் தலையொன்றை; இவர்கட்கெல்லாம் அன்றெழுதி விட்டவன் யார்? காண்! சர்வக்ஞ.

கோவிந்தன்:	என்ன, கண்ணன் எங்கே புறப்பட்டு விட்டீர்?
கண்ணன்:	கடைக்குப் போகிறேன் வாயிலெடுக்க.
கோவிந்தன்:	என் வீட்டிலேயே வாயிலெடுத்தாலென்ன? அங்கே ஏன் போகவேண்டும்.

7. தற்கால இலக்கியம்

தற்கால இலக்கியத்தில் பெரும்பகுதி உரை நடையும் நாடகமும் புனைகதையும் ஆகிய புத்திலக்கியத் துறைகளேயாகும். இவை நாட்டிலக்கியமாகாவிடினும், புதிய நாட்டிலக்கியம் உருவாக உதவுபவையே என்பதில் ஐயமில்லை.

4

பியா நாடகங்கள் பலவும் வங்கத்தின் தற்காலப் புனைகதை நூல்களும் (*Novels*) மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. மைசூர் அரசர் கிருஷ்ணராய உடையார் காலத்தில் (1799-1868) அவர் ஆதரவிலேயே 'கிருஷ்ணராய வாணி விலாசம்' என்ற பெயருடன் உரைநடைப் பாரத நூல் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இவைதவிர மைசூர் அரசர் காலத்திலேயே மைசூர் அரசர் வரலாறுகளும் குடகு அரசர் வரலாறுகளும் பல எழுதப்பட்டன. இவற்றுட் சில மேனாட்டு வரலாற்றாசிரியர்கட்கு உதவியாயிருப்பவை.

கிருஷ்ணராய உடையார் காலத்துக்குப்பின் ஏற்பட்ட நிலையான இலக்கிய மதிப்புடைய மொழிபெயர்ப்புக்களுள் நரசிம்மாச்சாரியாரின் தமிழ்த் திருக்குறள், நாலடியார் மூதுரை, நல்வழி ஆகியவற்றின் மொழி பெயர்ப்பாகிய 'நீதி மஞ்சரி, குறிப்பிடத்தக்கது.

8. முடிவுரை

இந்திய மொழிகளில் பரப்பிலும் பழமையிலும் பலசமயப் பெருக்கத்திலும் கன்னட மொழி தமிழ் மொழிக்கு அடுத்தபடியில் உள்ளது. நாட்டிலக்கியம் என்ற முறையில் தமிழிலக்கியம் நீங்கலாகக் கன்னட இலக்கியத்துடன் ஒப்பிடக்கூடிய பகுதி காளிதாசன் காலத்திய வட மொழி நூல்கள் சிலவே.

கன்னட இலக்கியத்தின் குறைபாடுகள் கீழ் நாட்டு ஆகியவற்றின் பொதுக் குறைபாடுகளே. ஆயினும் தமிழ் பேரளவுக்கும் கன்னடம் ஓரளவுக்கும் இவற்றிடையே தனித்தன்மை பெற்ற இலக்கியங்களே. வடமொழியுடன் ஒப்பிட்டால் இவ்வெல்லா மொழிகளிலும் நாடகத் துறையில்லாதது ஒரு பெருங் குறைபாடே. உரைநடை வரலாறு ஆகிய துறைகளில் தாய்மொழிகள் மட்டுமன்றி வடமொழியும் குறைபாடுடையதே. புனைகதை, அறிவியல் ஆகியவைகள் புதுத்துறைகளாதலால் இனித்தான் இவ்வெல்லா மொழிகளிலும் ஏற்படவேண்டும். ஆயினும் வடமொழியினின்று மொழி பெயர்த்த கதை இலக்கியம் மற்றெல்லா மொழிகளின் மொழி பெயர்ப்புகளையும் விட இலக்கியச் சிறப்புடையவையாகவே அமைந்துள்ளன. ஒரு சில புனைகதை முதனூல்களும் இம்மொழியில் உண்டு. அவற்றுள் ஒன்று விசயநகரப் பேரரசர் காலத்ததாகிய தெனாலி ராமன் கதைகள் ஆகும்.

இந்தியத் தாய்மொழி இலக்கியங்களுள் தமிழ் நீங்கலான யாவும் சமய விளம்பரமாகவும் சிறப்பாக வைஷ்ணவ வேத (பார்ப்பன) சமய விளம்பரமாகவும் அமைந்துள்ளன ஆயினும் இவற்றுள் கன்னடம் நாட்டுப் பண்பாட்டுச் சிறப்பில் மிக்கதேயாகும். இன்று ஏற்பட்டு வரும் இந்தியத் தாய் மொழிப் புதுமலர்ச்சியியக்கத்தால் தமிழ், வங்காளி ஆகியவற்றுடன் ஒப்பாகக் கன்னடம் மேம்படும் என்று உறுதியாகக் கூறலாம். ★ ★

நீயாராகும் ?

நா. பாண்டுரங்கன்

பட்டுவின் முதுகில் பளீர் பளீரெனத் தட்டினார் பரமசிவம். பட்டு, விரித்திருந்த படுக்கையில் போய் விழுந்தாள். அக்காட்சியைக் காணச் சகிக்கவில்லை அவருக்கு. அறையை விட்டு வெளியே வந்தார். அழுதார்! ஆம், அவர் விழிகளிலிருந்து நீர் வழிந்தது. சட்டையின் முனையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே, சாளரத்தின் வழியே பார்வையைச் செலுத்தினார். எதிரே இருந்த பெரிய மரத்தின் கிளை ஒன்றில் கட்டப்பட்டிருந்த கூட்டில், தாய்ப் பறவை, தன் குஞ்சுகளுக்கு அலகால் தீனி தந்து கொண்டிருந்தது தெரிந்தது. அந்தக் காட்சி அவர் மனத்தை அறுத்ததுபோல் தோன்றிற்று. மேலும் அங்கு நிற்காது, மாடிப்படிகளில் இறங்கி, ஹாலுக்கு வந்தார்; நாற்காலி ஒன்றில் அமர்ந்தார்; புத்தகம் ஒன்றை எடுத்துத் திறந்தார்; படித்தார். இல்லை! பார்த்துக் கொண்டிருந்தார்.

“நல்லாயிருந்த என் குடும்பத்திற்கு நச்சரவாகிவிட்டாள். அச்சம் கொஞ்சம்கூட இல்லை. பச்சைக் குழந்தை என்று பார்த்தால்...............

“குழந்தையா அவள்? இல்லை. குமரி! கல்யாணம் செய்து வைக்க அவளுக்குக் கணவனைக்கூடத் தேடிவிட்டாய். இன்னும் குழந்தை போல், இது போன்ற கட்டளைக் கெல்லாம் குனிந்து நடப்பதென்றால் புண்ணாகாதா அவள் உள்ளம்?

“என்ன நான் சொல்லுகிறேன்? என்னுடைய இந்த இஷ்டத்திற்கு மட்டும் இணங்கி விடட்டும். பிறகு அவள் விரும்பியபடி வேண்டியதைச் செய்கிறேன். இதிலென்ன.........

“நஷ்டமில்லையே என்று சொல்கிறாயா? கஷ்டம் எவ்வளவு ஏற்படும்? அதைக் கவனி!

“கவனிப்பதால் தானே சொல்லுகிறேன். மன்மதன் மாதிரி மாப்பிள்ளை வலிய வரும்போது, மகளை அவனுக்குக் கொடுத்துவிட்டால், மன நிம்மதி மட்டுமா, மகிழ்ச்சிகூட என்னிடம் மலரும்! ஏழையா வருகிறவன் ஏங்குவதற்கு! மூன்றடுக்கு மாளிகையின் முதலாளி அவன்! ஒன்பது வேலிக்கு ஒரே பிள்ளை. வக்கிலுக்குப் படிக்கிறான். இதை விட்டுவிடலாமா? சந்தர்ப்பந் தவற விட்டு விட்டுப் பிறகு சஞ்சலப்படுவதிலே கொஞ்சமாவது அர்த்தமிருக்குமா? அதனால் தான் சொல்லுகிறேன், அசடே! நீ நான் வாக்குக்

கொடுத்தவர் பிள்ளைக்கு வாழ்க்கைப்படு என்று! முடியாது என்று பிடிவாதம் செய்கிறாள். இராமசாமி மீது அவளுக்குக் காதலாம்! கோஹினூர் வைரத்திற்கு ரங்கூன் வைரத்தின்மீது காதல்! குஹன் பாங்கியில் குமாஸ்தா அவன்; குச்சு வீட்டில் குடியிருக்கிறான்; என் ஜாதியே அல்ல! அவனைத்தான் அவளுக்குப் பிடித்திருக்கிறதாம்! கல்யாணம அவனோடுதானாம், இல்லாவிட்டால் கழுத்தில் சுருக்கு மாட்டிக்கொண்டு இறந்து விடுவாளாம்! பயமுறுத்துகிறாள். அவள் அப்பா நான். பயமில்லாமல் இவ்வாறு என்னிடம் சொல்லுகிறாள். சிரிக்கமாட்டார்களா இதைக் கேட்பவர்கள்? சிற்றம் பிறக்காதா எனக்கு? அதனால் தான், அதட்டிக்கூடப் பேசி அறியாத என் மகளை அடித்துவிட்டேன். அப்போதும் 'சரி' என்று ஒரு வார்த்தை சொல்லுகிறாளா? வாயைத் திறக்க மாட்டேன் என்கிறாள்......

“ஒரு வார்த்தை! சாதாரணமாகக் கருதுகிறாய் அதை. சரி என்று சொல்லி விடலாம், பெரிய காரியமல்ல. மகளிடம் எதிர்பார்க்கும அந்த ஒரு வார்த்தையை, நீதான் அவளுக்கு அளித்து விடேன். பாம்பின் மேல் அறியாமல் பாதத்தை வைத்துவிட்டது போல் இருக்கிறதல்லவா உனக்கு. அதுபோல்தான் அவளுக்கும் இருக்கும். 'அப்பா சொல்லுவதை மகள் தள்ளக்கூடாது!' இதை அதிகாரத்தோடு கூறுகிறாய் நீ! 'மகள் வேண்டுவதை அப்பா மறுக்கலாமா?' இதை அன்போடு கேட்டுக்கொள்ளுகிறாள் அவள்! இரண்டில் பணிய வேண்டியது எது? அதிகாரமா? அன்பா?

“எதுவானால் என்ன? எல்லாம் அவள் இன்பத்திற்குத்தானே சொல்லுகிறேன்.

“நன்கு சொன்னாய் போ. அவள் சொல்லுவதும், தான் இன்பமாய் இருக்கவேண்டும் என்பதற்குத் தானே. மறந்து விடுகிறாயே அதை. காதல் எப்படி அவனிடம் ஏற்படலாம் என்று நீ கேட்கலாம்? காதல் ஏன் ஏற்பட்டது என்று காரணம் கேட்டால் காதலால் கட்டுண்ட எவரும் கூறும் பதில் என்ன தெரியுமா? 'எனக்கே புரியவில்லை!' என்பதுதான். புரிந்துகொள்ளச் சிரமமான புதிர் அது. மகளின் இஷ்டத்தை மறுக்காதே.

“மறுக்காது கூட இருந்து விடுவேன். ஆனால் அவள் காதலன் இராமசாமி, ... என் ஜாதி அல்லவே. பொறுக்க முடியுமா, என்னால் இதை?”

இது பரமசிவத்தின் மனதில் நடந்த போராட்டம். புத்தகத்தை அவர் பார்த்துக்கொண்டிருந்தாரே தவிர, மனதில் இந்தப் புயல்தான் புகுந்தது. படிக்க முடியுமா அவரால்! புத்தகத்தை மூடி, மேசை மீது வீசி எறிந்தார். சஞ்சலத்தால் தாக்குண்டவர்கள், சாந்தி தேடுவதற்காக எந்தெந்தப் பாதைகளிலோ புகுந்து பார்க்கிறார்கள். கானம் கேட்பது முதல் வானம் நோக்குதல் வரை, எல்லாப் பாதையிலும் புகுகின்றனர். சாந்தி கிடைக்கிறதா? இல்லை! பரம

வாசிக்கத் தொடங்கியது. 'சாந்தி தேட' ஒரு முயற்சி. பலன் முயற்சி முழுத்தோல்வியை வழங்கிற்று. தவித்தார். எவரும் அவர் நிலையில் இருந்தால் . தவிக்கத்தானே செய்வார்கள்!

பரமசிவம் பெரும் பணக்காரர். அருமையான குணம் படைத்தவர் என்று அடிக்கடி அவர் நண்பர்கள் பேசிப் பெருமையடைவார்கள். மூன்று குமாரிகள் அவருக்கு. அவருடைய மனைவி, இந்தப் பெண்களை இளமையிலேயே விட்டு விட்டு இறந்து விட்டாள். தாயற்ற தன்பெண்களைக் கண்களைக் காப்பது போல் காத்து வந்தார் பரமசிவம். பரமசிவம் நன்கு படித்தவராதலால் பெண்களுக்கு ஒரு குறையும் ஏற்படாதபடி, நினைவில் வராதபடி பார்தது வந்தார். மூத்த பெண், பட்டு, படிப்பில் கெட்டிக்காரி. குறும்புக்காரி என்றாலும் குணம் தங்கம்! சுந்தரி அவள்!! கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள். மற்ற இரண்டு பெண்களும் பள்ளியில் படித்துவந்தனர்; இந்தச்சமயத்தில்தான் பரமசிவத்தின் வெளியூர்ச் சொந்தக்காரர் ஒருவர், லட்சாதிபதி! சட்டக் கல்லூரியில் படிக்கும் தன் பிள்ளைக்குப் பட்டுவைக் கேட்டார். பரமசிவம் 'ஆஹா' என்று சம்மதம் கொடுத்துவிட்டார். தன் மகள் பட்டு இதைக் கேட்டால் தாங்கொணா மகிழ்வடைவாள் என்று எண்ணினார். மகளிடம் விஷயத்தைத் தெரிவிக்கும் போதுதான் 'விபரீதம்' நடந்திருந்தது புரிந்தது.

மதியும் நம்மை மகிழ்விக்கத் தான் உள்ளன. பேசும் கிளியும் பாடும் வண்டும் நமக்குப் பேரானந்தம் தரத்தான்! ஆடும் மயிலும் ஓடும் ஓடையும் எதற்கு? நமக்கு இன்பம் தேடத்தானே! நாம் சந்திக்காது, சோலை சோர்வடைகிறது; மாலை கொடும் வேளையாகிறது; மலர்கள் பூக்கின்றன. ரசிக்க நாம் கூடாததால் அவை தளர்கின்றன. வீணை மீட்டப்படாததால் விம்முகிறது. காதலரே, எல்லாம் தெரிந்த நீங்கள் ஏதும் சொல்லாமல் இருக்கலாமா? காலைக் கதிரவனைக் கண்டுவிட்டேன். கண்களைப் பொத்து என்று கட்டளையிடலாமா? வசந்தம் நமக்கு வரவேற்புக் கூறுகிறது!"

"பட்டு, என் உள்ளத்தைப் படாதபாடு படுத்துகிறாய். அடாத செய்கை என்று ஆர்ப்பரிப்பார்களே, நீயும் நானும் கணவனும் மனைவியும் ஆவதை. சற்றேனும் சிந்தித்துப் பார்த்தாயா? கற்றவளாயிற்றே நீ!......"

"அதனால்தான் சொல்லுகிறேன் அன்பரே! 'மெய்க் காதல் கொண்டிருந்தால் எது வந்தால் என்ன! என்ன?......' இந்தக் கீதம் கேட்டிருப்பீரே சினிமாவில்......"

"நடை முறையில் முடியாததை அல்லவா படமாக்கிக் காட்டுகிறார்கள்......"

"இல்லை. திடம் கொள்க நீரே! காதல் ஏட்டில் மட்டும் இருப்பதல்ல. நாட்டி

வில் மட்டுமல்ல, நடைமுறை யிலும் பூக்கும்! இதை மெய்ப் பிப்போம் வாரீர். எங்கே, உடனே இசைவைத் தாரீர்!"

"பட்டு! என் கட்டிக்கரும்பே. உன் உள்ளத்தின் உரம் அறி யவே இந்தப் பரிசோதனை. கண்ணே! உன்னைக் கண்ட அன்றே, நீ என் கருத்தில் கானமிசைக்கத் தொடங்கி விட்டாயே. தேனே! வீணே நான் உன்னை இவ்வளவு நாள் சஞ்சலத்தில் சஞ்சரிக்க விட்டு விட்டேன். கொஞ்சு மொழியே! கோபிக்காதே......"

இது பட்டுவும் ராமசாமியும் ஓர் இடத்தில் சந்தித்துப் பேசிக்கொண்டதல்ல; இருந்த இடத்திலிருந்தே இருவரும் பேனவால் பேசிக்கொண்டது.

ஹூஹன் பாங்க் பட்டுவின் வீட்டிற்கு எதிரே உள்ளது. இராமசாமி அதில் ஒரு குமாஸ்தா. வசீகர வாலிபன் அவன். பத்தாவது பாஸ் செய்துவிட்டு, மிகுந்த இன்ன லுக்குப் பிறகு அங்கே வேலை பெற்றான். வருகிற அறுபது ரூபாயில் ஒரே தம்பியைப் படிக்க வைக்கவேண்டிய கட மையும், தாயைக் காக்க வேண் டிய பொறுப்பும் கொண்டிருந் தான். அவனும் அவன் தம்பி யும், சிறுவர்களாயிருந்தபோது சிங்கப்பூருக்குச் சென்ற தந்தை யுத்தத்திற்குப் பிறகு இப் பொழுதுதான் ஊர் திரும் பினார். திரும்பிய ஒரே வாரத் தில், வீட்டில் திடீரென இறந்து விட்டார். குடும்பத்திற்குத் தலைவன் இராமசாமிதான். மிக் கில் பணியாற்றி வந்தான். பணி ஏற்று ஆறு மாதம்கூட ஆகவில்லை. கனிமொழியாள் பட்டு, அவள் கண்ணெதிரே தினம் தினம் தட்டுப்பட ஆரம் பித்தாள். பட்டுவின் பார்வை இவனிடம் பேச ஆரம்பித்தது. இவனும் வாலிபனல்லவா? இவனுடைய விழிகளும் அதற்கு விடை கூறத்தொடங் கின. முடிவு, இருவரிடையே யும் கடிதங்கள் பறந்தன. வெண்ணிலா, பொன்னொளி பொழிந்து கொண்டிருந்த ஓர் இரவில், ஓர் தனி இடத்தில் இருவரும் சந்தித்தனர். செந் தேன் பருகினர். எந்த எதிர்ப்பு வரினும், இருவரும் மணம் செய்து கொள்வது என்று உறுதி கொண்டனர். இந்நிலை யில்தான், பட்டுவிடம் பரம சிவம், அவள் திருமணத் திற்குத் தான் கொடுத்த சம்ம தத்தை விளக்க வந்தார். விஷ யம் மிஞ்சி விட்டதை அறிந்த பட்டு தான், இராமசாமியிடம் கொண்ட காதலையும், அவனைத் தான் கல்யாணம் செய்து கொள்ள முடியும் என்ற பிடி வாதத்தையும் தந்தையிடம் விளக்கினாள். எவ்வளவோ அவர் சொன்னார். எல்லா வற்றையும் பட்டு தள்ளிவிட் டாள். கட்டாயக் கல்யாணம் நடக்குமானால், தான் தற் கொலை செய்துகொள்வதாகச் சொன்னாள். ஆத்திரத்தால் பரமசிவம் அவளை அடித்தார். அதைத்தான் நாம் முதலில் குறித்திருக்கிறோம்.

செய்வதின்னதென்று தெரி யாமல் தவித்துக்கொண்டி ருந்த பரமசிவம், ஒருநாள், தன் வேலையாளிடம் ஒருகடிதம்

...ஜாடம் கொடுக்கச் சொன்னார். மானேஜர், அவருடைய நண்பர். கடிதத்தைப் பெற்ற மானேஜர், இராமசாமியைக் கூப்பிட்டு, வந்த வேலையாளுடன் போகச்சொன்னார்.

"சரிதான். பட்டுவுக்கும் எனக்கும் இருந்த தொடர்பு அவள் தந்தைக்கும் எட்டி விட்டது போல் இருக்கிறது! பாங்க் மானேஜர் பரமசிவத்தின் நண்பராமே. ஐயோ! என்னுடைய வேலைக்கு ஏதாவது ... ... வேலை ... என் குடும்பத்தின் கதி?.." பரமசிவத்தின் விட்டுப் படியேறுவதற்குள், இது போல் இராமசாமியின் மனத்தில் எண்ணங்கள் பாய ஆரம்பித்தன. ஆனால், பரமசிவம் இவனைக் கண்டதும் வழங்கிய வரவேற்புரை இவனுக்கிருந்த பயத்தைப் போக்கிவிட்டது. 'வாப்பா! இராமசாமி. உன்னிடம் ஒரு காரியம் ஆகவேண்டும். மறுக்கமாட்டாயே!" என்று பேச்சை ஆரம்பித்தார் பரமசிவம். வேலையாளைப் போகச் சொல்லிவிட்டு, இராமசாமியை அழைத்துக்கொண்டு மாடிக்குப் போனார். தனி அறை ஒன்றில் இருவரும் அமர்ந்தனர். இராமசாமியின் கண்கள் யாரையோதேடுவதுபோல்காணப்பட்டன. பரமசிவம் பரிதாபம் கலந்தகுரலில் பேசத் தொடங்கினார்.

"தம்பி! நீ என் மகள் பட்டுவைக் காதலிக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். பட்டு உன் மேல் உயிரை வைத்திருக்கிறாள் என்பதையும் உணர்வேன். நீங்கள் இருவரும் கல்யாணம் செய்துகொள்ளுவதில் எனக்குக் கடு...

...இராமசாமிக்குப் பரமசி... சொல்வதின பொருளே வி... கவில்லை. மௌனமாக இ... தான.

"ஆனால் தம்பி! உலக... இதை ஒப்புக் கொள்ளா... என்பது தான கலக்கத்... உண்டாக்குகிறது. உலகத்தி... உறுமலைக் கூடப் பொரு... படுத்தாமல் இருந்துவிடுவேன்... பட்டு மட்டும் எனக்கு ஒரே ஒ... மகளாய் இருந்தால், ஜாதி... விட்டு ஜாதியில் — உனக்கு... கல்யாணம செய்து கொடுத்து விடுவேன். எதையும் சட்டை செய்ய மாட்டேன். ஆனால் பட்டுவை உனக்குக் கல்யாணம் செய்து கொடுத்து விட்டால், மற்ற இரண்டு பெண்களை எப்படிக் கட்டிக்கொடுப்பது? யார் கல்யாணம் செய்து கொள்ள முன்வருவார்கள்? என்னை ஜாதியைவிட்டு விலக்கியபிறகு, என் இரண்டு பெண்களின் கதி என்னவது?..........."

இராமசாமி, பரமசிவம் சொல்வதில் உண்மை இருப்பதாக உணர்ந்தான். அனறு பட்டுவுக்கு அவன் தந்த உறுதி ஆட்டம் கொடுக்க ஆரம்பித்தது. காரணம் அவருடைய சோகப்பேச்சு. மௌனமாக இருந்தான்.

"தம்பி! சீர்திருத்தக் கடலில் மூழ்கிக் கிடப்பவன் நான் என்று மார்தட்டிப் பேசுபவன் கூடப் பெரும்பாலும் ஒருவன் மேல் கோபம் கொந்தளித்து வரும்போது, அவன் ஜாதியை உச்சரித்து, இழித்துக் கூறு...

வதை மறக்க முடியவில்லை. மற்ற நோக்கமுள்ளவர்களைச் சொல்லவேண்டியதில்லை. இப்படிப்பட்ட மனிதர்கள் இருக்கும்போது, பட்டுவை நான் உனக்குத் தந்தால், என் மற்ற பெண்களின் கதி? இராமசாமி! கொஞ்சம் யோசி! அதற்காகத் தான்......" அவர் பேச்சை முடிப்பதற்குள் "என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?" என்று ராமசாமி கேட்டு விட்டான், சற்று படபடப் போடு!

"பட்டுவை, நேரே பார்த்து, 'நான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்வதற்கில்லை' என்று நீ சொல்லிவிட வேண்டும். உனக்குப் பத்தாயிரம் ரூபாய் பணம் தருகிறேன். என் நிலைமையை நன்ருய் யோசி. இராமசாமி! என்மீது இரக்கம் காட்டப்பா!" பரமசிவம் இவ்வாறு பதில் சொல்லிவிட்டு, அலமாரியைத் திறந்து, நூறு ரூபாய் நோட்டுகளாக, ஒரு கட்டுக் கொண்டு வந்து, இராமசாமியிடம் நீட்டினர். அவன் அதை வாங்கி, அங்கிருந்த

> கலை என்பது புலவன் உள்ளத்திலே தோன்றி மலரும் எழுச்சி. அதைக் கற்பதுதான் கல்வி. மூலமாயுள்ள உணர்ச்சியை ஊட்டுவதுதான் கலை. இழிவான ஒழுக்கத்தைக் காட்டிடும் கதையுடைய கலையும் இழிவானதே. அதை ஒழிக்கத்தான் வேண்டும்.
>
> —பாரதிதாசன்.

மேசை மீது வைத்தான். பரமசிவத்தின் கண்ணில் நீர் ததும்பிற்று. இராமசாமி மௌனமாக இருந்தான். கால் மணி நேரம் அங்கே அமைதி களிநடம் புரிந்தது. கடிகாரம் மட்டும் 'டிக் டிக்' என்று சத்தமிட்டுக்கொண்டிருந்தது!

"பணம் எனக்கு வேண்டாம். பைசாக்கூட வேண்டாம். பட்டு எங்கே? கடைசி முறையாக அவளைப் பார்த்து உங்கள் விருப்பத்தை முடித்துவிட்டுப் போகிறேன்" இராமசாமி இவ்வாறு கூறி, அமைதியைக் கிழித்தான்.

"பக்கத்து அறையில் இருப்பாள். நான் சொன்னதைப் பக்குவமாக எடுத்துச்சொல்லு. நான் கீழே இருக்கிறேன், ஹாலில். நீ போய் அவளிடம் நான் சொன்னபடி சொல்லப்பா. உனக்குப் புண்ணியமுண்டு!" பரமசிவம் இவ்வாறு சொல்லிவிட்டு, மாடியைவிட்டு இறங்கி விட்டார்.

பட்டு இருக்கும் அறையில் இராமசாமி பாதத்தை வைத்தான். உடனே பட்டு அவனைக் கட்டிஅணைத்துக்கொண்டாள். காவிரியும் கங்கையுமாயின, இருவர் கண்களும். அமைதி பூத்தது! "பக்கத்து அறையில் அப்பா பேசிய எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். எனக்கு மாப்பிள்ளைபார்த்துவிட்டார். அவர் சொல்லைக் கேட்காதீர்கள். நீங்கள் கூப்பிடும் இடத்திற்கு வருகிறேன்; நாம் இருவரும், எங்காவது போய்விடலாம். என்ன?" பட்டு பதட்டத்துடன் வார்த்தைகளைக் கொட்டினாள். அவன்

பேசாது இருந்தான். ஆம்! அவனால் பேச முடியவில்லை. எண்ணம் மட்டும் எங்கெங்கோ விரைந்து கொண்டிருந்தது.

"கலித்தொகைக் காலமா இது, தலைவியை அவள் பெற்றோர் அறியாது தலைவன் அழைத்துக் கொண்டு போய் விட? கலிகால மாயிற்றே. ஓடி விடலாம், பட்டுவும் நானும்! ஓடிவிட்டால்........... அழுகிற என் அன்னை-படிப்பை நிறுத்தி விட்டு வேலை கிடைக்காது துடிக்கும் என் தம்பி—புகையாத எங்கள் வீட்டு அடுப்பு, இவையன்றோ, மனத்தில் மாறி மாறி எழும்! காதலியும நானும் சென்ற இடத்தில் கணமாவது களிப்படைய முடியுமா? வாழ்க்கை நடத்துவதற்கு என்னவழி வகுத்துக் கொள்ள முடியும்? போகட்டும். இதைச் சகித்துக் கொண்டாலும், பட்டுவின் சகோதரிகளைக் கட்டிக்கொள்ள யாரும் இல்லாததால் அவர்கள் கெட்டு விட்டால் .... அப்பப்பா! வேண்டாம்!" இராமசாமி இந்தச் சிந்தனையில் இறங்கி இருந்தான். "பேசாமல் இருக்கிறீர்களே! சொல்லுங்கள்!" பட்டு இவ்வாறு கேட்டுக் கொண்டே, அவனைத் தன் கரங்களால் குலுக்கியதும் தான், அவன் 'இந்த' உலகிற்கு வந்தான்.

"பட்டு! நடந்ததை மறந்து விடு. நீ உன் அப்பா சொல்கிறபடி நடந்துகொள். என்னை,

> மதத்திற்குப் பிரதானமும் கீர்ப்பந்தமும் ஏற்படுத்துவது என்பதெல்லாம் மனிதனுக்கு அடிமைத் தனமும், கட்டுப்பாடும், சிறைக்கூடமும் ஏற்படுத்துவது என்பதைத் தவிர வேறு கருத்தென்ன சொல்ல முடியும்?
>
> —பெரியார்

மன்னித்துவிடு, நான்வருகிறேன்" என்று வார்த்தைகளை இதயத்திலிருந்து வழங்கி விட்டு திடுதிடு வென்று இறங்கி ஹாலுக்கு வந்தான்.

"தம்பி! பட்டுவிடம் சொன்னையா?" பரமசிவம் கேட்டார்.

"சொல்லிவிட்டேன்" என்று கூறிவிட்டு, இராமசாமி அங்கிருந்து மறைந்தான். பரமசிவத்தின் கண்ணில் நீர் நிறைந்தது! போய்க் கொண்டிருந்த இராமசாமியின்மனதில் இரண்டு காட்சிகள் தோன்றின. பரமசிவத்தின் கண்ணிலிருந்து நீர் வழிந்தது. அவர் வாய், 'தம்பி என் கண்ணீருக்காக உன் காதலைத் தியாகம் செய்து விட்டாய்' என்று கூறியது. இந்தக் காட்சி மறைந்தது. இன்னொரு காட்சி! பட்டுவின் முகம். அவள் கன்னத்தில் நீர். அதுவே பேசிற்று 'இராமு! நீ துரோகம் செய்து விட்டாய். ஆம் நீ செய்தது துரோகம்!' என்று! ★

உலக வாழ்வில் முன்னேற விரும்பும் ஒவ்வொரு மனிதனும் தான் ஈடுபட்ட துறையில் 'வெற்றி' காணவே விரும்புகின்ருன். மக்களின் இயல்பான பண்பும் இதுதான். அடிமைக் கட்டு நீங்க ஆபிரகாம் லிங்கன் தலைமையில் போராடிய நீக்ரோ வரும வெற்றியையே நாடினர். "பாராளுமன்றத்திலே பங்களிக்காதவர்க்குப் பணவரி தருதலென்பதும் பகற்கனவுதான்" என்று இறுமாந்து இயம்பிய குடியேற்ற நாட்டு அமெரிக்கரும் வெற்றியைத்தான் நாடினர். சுருங்கக் கூறின், வாழ்விழந்து வாடும் எந்த மக்கட் கூட்டமும் வாழ்வின் முன்னேற்றத்தில் வெற்றியைக் காணவே விழைந்தது-விழைகின்து என்பதை எவரும் மறுத்தல் இயலாது.

இன்றைய நிலையிலே அறிவிழந்து—ஆட்சியிழந்து—ஆரியர்க்கும் வடநாட்டார்க்கும் அடிமையாகி வாழும் ஓரினம் "திராவிட இன"மென்பதைப் பகுத்தறிவுடையார் எவரும் எளிதில் உணர்வர். திராவிடத்தின் சீரழிந்தநிலையைஉணர்ந்த திராவிடனெருவனுக்கு'வெற்றி வேண்டுமேல்,போர்தான்வேண்டும்' என்பதை அவனது தோள்களின் 'தினவு' நினைவூட்டும். ஆரிய அரசர்களை அடிபணியச் செய்த அன்றைய அருந்தமிழ் வேந்தனின்மறச்செயலை நினைவு கொள்ளும் திராவிடனின் உளம் 'வெற்றி வேண்டுமேல் போர்தான் வேண்டும்' எனவே தூண்டுதல் செய்யும். அன்றியும், மக்களின் வாழ்விலே 'வெற்றி' என்பது, அரசியல்—வணிகம்—பொருளியல் — மன்பதையம் ஆகிய துறைகளில் முன்னேற்றங்களிலேதான் என்பதே இன்றையத் தலைவர்கள் பெரும்பாலோரால் பரப்பப் படும் கொள்கை. ஆனல்கொள்கைகட்கோ — தலைவர்கட்கோ அடிமைப்படாது, அமைதியுடன் ஆராய்ந்து பார்க்கும் எந்தத் திராவிடனுக்கும், 'வெற்றி வேண்டுமேல் மொழிப்போர் வேண்டும' என்ற பேருண்மை வெள்ளிடை மலையென விளங்கும்.

பண்டை நாளிலே பாங்கன் தொழிலில் புகுந்த ஆரியம், உண்மையாகவே மொழியின் வேரைத்தான பற்றி அசைத்தது என்பதை இலக்கியங் கண்ட எந்தத் திராவிடனும் உணர மறுக்கமாட்டான். "ஊர்களின் பேர்களை மாற்றினர்கள், மக்கட்குள்ள தமிழ்ப் பெயரையும் மாற்றினர்"என்று ஓர்சான்ருேர் சாற்றுமாப்போல், ஆரியம் 'மொழித் துறையிலே' திராவிடரை முற்றம உருக்குலைத்து விட்டது என்பதை அறிஞர் ஒப்புவர். 'ஆரியர் பண்பாட்டில் திராவிடராக, திராவிடர் மொழியில் ஆரியரானர்' என்று

மேனுட்டறிஞர் கலப்பட சிலேட்டெர் கூறுவதே ஆய்ந் தெடுத்த உண்மை யென்ப தைத் 'திராவிடன்' மனத்திற் பதித்துக் கோடல் மிக மிக இன்றியமையாததாகும்.

கம்ப இராமாயணம், வில்லி பாரதம் போன்ற வடநாட்டுக் கதைகளைத் தமிழில் பாடிய தமிழ்நாட்டுக் கவிஞர்கள், ஆரி யத்தின் அடிதாங்கிகள் என்ற ஒருண்மையைப் பரப்பும பெரு முனைவிலே, நாம் முதன்மை யானதொரு உண்மையை மறந்துவிட்டோம். அவ்வுண் மைதான் மொழியின் தூய்மை யையும்—காப்பையும் பற்றிய தொன்று! இஃது நம்பாலுள்ள மிகப் பெருங்குறை யொன்றெ னின் யாவரே மறுக்கவல்லார்?

வில்லி பாரதத்தையும் கம்ப இராமாயணத்தையும் பாடிய புலவர்களின் வாழ்க்கைக்குறிப் பினை வரையுங்கால், 'வடசொற் களைத் தமிழ்ப்பாக்களின் ஓசை யோடு ஒருங்கு சேரவிட்டு, தமிழ் ஓசை மாறுதபடி இடத் திற்கேற்பப் பொருளும் சொல் லும் இயைந்தோடப் பாடும் பெருமை இவர்கட்கே உண்டு' என 'அறிஞரெனப் படுவோர்' அறைகின்றனர்களேயன்றி, இத் தகைய நூல்கள் தமிழுக்கும் தமிழினத்திற்கும் இழிவைத் தருவன என்பதை எடுத்தியம் பத் துணிகின்றாரல்லர்.

'வரலாற்றறிஞன்' என வழங் கப் பெறும் தமிழன் 'நான் மறைகள் யாவை?' எனக்கேட்ட பினனர்-இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற வடமறைப் பெயர்களை எதிர்பார்க்கின்று னேயன்றி, "வடமறை தமிழருக் கொத்த தன்று" எனத் தன் மானத்துடன் போராடத்துணி கின்றானல்லன். என்னே இன் னோரன்னார் நிலை!

வாவியும் சோலையும்படைத்த தமிழகத்தில் வாழும் மக்கள் வரலாறு, காவிரிக் கரையினின் றும் தொடங்கவேணடியிருக்க, கங்கைக்கரையினின்றும் துவங் கப் படுவதைக் கண்ட பின்ன ரும் வரலாறுணர்ந்த தமிழன் வாளாவிருக் கின்றனேயன்றி உணமைக்குப் போராடத் துணிகின்றானல்லன். மேலும் கற்பிற்சிறந்த கண்ணகியினது வரலாற்றைமறைத்துவைத்து, —'ஐவருக்கு மேல் ஆறுமொரு வனைச் கொள்ளவும் ஆசை தான்' எனக் கூறிய திரௌப தையின் வரலாற்றையும், வட நாட்டினரை அடிமைப்படுத்திய புலிகேசியையும் வென்று நின்ற பரஞ்சோதியார், 'ஒரு சேனைத் தலைவர்' என்ற வரலாற்றை மறைத்து, அவரைக் காவியும் ஓடும் தாங்கும் ஓர் துறவியாகக் காட்டும் கலையையும் போற்றி வரவேண்டிய நிலைமை இன்றள வும் இந்த நாட்டிலே இருக்கின் றதென்றால், இஃது நாம் எத் துறையில் அடிமை என்பதைக் காட்டுகின்றது? மொழிக் கடிமை என்பதை யல்லவா? மொழிதான் ஓரினமக்களை வகுத்துக் காட்டுவதென்பதை யும், மொழியாட்சி யிழந்த ஓரி னம் வீழ்ச்சியடையு மென்பதை யும், மொழியாட்சி பெற்றிலங் கும் ஓரினம் மாட்சியடையு மென்பதையும் சென்ற வரலா றுகள் செதுக்கிக் காட்டுகின்ற னவே! இப் பேருண்மையை இன்னும் உணராது நாம் என் வாளாய்க் கரைந்துறைதல் வேண்டும்? எண்ணிப் பார்மின்!

" கடைவிரித்தோம் கொள்வாரில்லை"

தமிழ் நாட்டிற்கென்று ஒரு தமிழர் மகாசபை தேவையா? இல்லையா? அதற்கென "தமிழர் நாடு" கிழமை இதழ்வேண்டுமா? வேண்டாமா? வெள்ளைய, வட நாட்டின், ஆரிய, ஆந்திர, மலையாள, கன்னடிய மக்களின் அடிமைத் தளையிலிருந்து தமிழ் நாடும், தமிழ் மொழியும், தமிழ் மக்களும் விடுதலைபெற்றுத் தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டு, தனி வாழ்வு வாழ வேண்டுமா? வேண்டாமா?

வேண்டுமானால் தமிழ் நாடு முழுவதும் தமிழர் கழகத்திற்கு 100 கிளைக் கழகங்களாவது உடனடியாக ஏற்பட்டாக வேண்டும் "தமிழர் நாடு" இதழுக்கு ஒருக்கு ரூ. 10ஆகிலும் உடனே நன்கொடை அனுப்பவேண்டும். இவைகளுக்கென நான் கொடுத்த ரூ. 1001-ல் பெரும் பாகம் செலவாகி இருக்கிறது, இதுவரை எவரிடமிருந்தும் ஒரு செம்புச் சல்லியேனும் கழகத்திற்கென்றோ, இதழுக்கென்றோ நன்கொடை பெறவில்லை.

தமிழ் மக்கள் தமிழர் கழகத்தையும் 'தமிழர் நாடு' வையும் உடனே பயன் படுத்திக் கொள்ள வேண்டும். இன்றேல் எனக்காக இவைகள் தேவையில்லை.

தங்களன்பிற்குரிய,

கி. ஆ. பெ. விசுவநாதம்.

"தமிழர் நாடு" 25—1—48

பது அன்பெனப்படுதல்போல, மனிதன் மனிதனோடு நெருங்கிப் பேச இடமளிப்பது மொழியேயன்றோ? மன்பதைய மக்களை அவர் தம் அன்றாட வாழ்வில் ஒருவரோடொருவர் ஊடாட இடமளிப்பவற்றில் முதலிடம் பெறுவது மொழியல்லவா? அன்றியும், அன்புருவாம் அன்னையுடன் அருமையுடன் உரையாட உறுதுணை செய்வதும் மொழி; உயிரனைய தோழனிடம் தன் உள்ளக் கிடக்கைகளை உணர்த்த உடன்பாடளிப்பதும் மொழி; கண்ணினுமரிய காதலியுடன் கனிவு கொண்டு பேசக் கருவியாயமைவதும் மொழி; அறிவறிந்த மக்கள் தம்மோடு, அளவளாவும் வண்ணம் அமைவதும் மொழி.

தலைவன்—தலைவியர் தமக்குள் நேரும் ஊடலை உணர்த்த முற்படுங்கால் வேண்டப்படுவதும் மொழி; வளங்கொழிக்கும் வணிகத்தினை மேற்கொள்வோனுக்கு வணிகரோடு பேசும் பேற்றை யளிப்பதும் மொழி. மற்றும் நாவன்மை கொண்டு நானில மக்களைத் தன்வயப் படுத்தமுனைவோருக்கும், உலக உயிர்களின் உள்ளத்தின்கண் உவகையூறச் செய்யும்வகையில் இன்னிசை இயக்குவோருக்கும் இன்றியமையாத முதற் பொருளாயமைவது மொழி. என்றும்—எங்கும்—எப்போதும்—எவருடனும் பேச இன்றியமையாததாய் இலங்குவது மொழி. இன்னும் எத்துணை-எத்துணை வகைகளில்தான் மொழி முதலிடம் கொள்கின்றது? ஆய்ந்து அறிமின்!

றலைத் திரட்டிச் செயலில் ஈடு படமுனையும் திராவிடனின் உள்ளம், வெற்றி வேண்டு மேல், எப்போர் வேண்டு மென்பதை இயம்புகின்றது?

'தமிழெங்கள் உயிரென்பதாலே—
வெல்லுந்தரமுண்டு
தமிழர்க்கு, இப்புவி மேலே'—

என்ற புரட்சிக்கவிஞரின் உயிருரைகள் இப்போதேனும் உளத்தின் கண் பதிகின்றனவா? கவிஞர் பாரதிதாசனின் 'உயிர்' தமிழ்! அங்ஙனமேதான் ஒவ்வொரு தமிழனின் உயிரும் தமிழ்.

தமிழ், உயிரினும் உயரியது என்பது உண்மையாகிவிட்டது இப்போது. 'எப்போர் வேண்டுமென'உள்ளம் உரைக்கின்றது?

தமிழுக்கு நேர்ந்த தீங்கினைத் தீர்ப்பதற்கென்றன்றோ அன்று நேர்ந்த 'இந்திப் போரில்' தம் உயிரைப் பறிகொடுத்தனர், பைந்தமிழிளைஞர்! தம் உயிரைத் தமிழ்க் காப்புக்கெனத் தந்த அன்னாரின் இறுதி மொழிகள் நமக்கு நல்கிய உறுதிமொழி என்ன? ஓர்ந்து பாருங்கள்!

அன்றாட வாழ்வில் இன்று கண்கூடாகக் காணும் உரையாடலையேனும் உன்னிப் பாருங்கள்! 'வணக்கம்' என வண்டமிழிலே கூறி வரவேற்கும் திராவிடனை-'இளங்கோ' எனத் தனது இன்றமிழ்ப் பெயரை இயம்பும் திராவிடனை. 'வணக்கம்' 'இளங்கோ' என்ற இரு சொற்களும் 'திராவிடர்க் கழகத்தான்' என மாற்றாருக் குணர்த்தும் வன்மை பெற்றுள்ளன. இத்தகு தமிழ்ச் சொற்களைத் தகுதியாகக் கொண்டே ஆரியமும்—ஆரிய அடிவருடிகளும் நம்மை எதிரிகளாகக் கொள்கின்றனரென்றால், 'தமிழுக்குப் பகை ஆரியம்', 'தமிழுயர்வே ஆரிய அழிவு' என்பதை எவரே அறியார்!

வீழ்ச்சியுற்ற திராவிடம் ஆட்சிபெற்று மாட்சியுடன் மல்க வேண்டுமேயானால், அயர்லாந்து மேற்கொண்ட 'மொழிப் போர்' வரலாற்றினை ஆய்ந்து அறியுங்கள். எவ்வெதுறையிலே ஈடுபட்டுப் போரிடினும் இறுதியில் வெற்றி தர நிற்பது மொழிப் போரேயன்றி வேறெந்தப் போரும் அன்று, அன்று.

எதிர்காலம் 'இந்திப் போருக்கென'த் திராவிடச் செம்மல்களை எதிர்நோக்கி அழைக்குங் காலம். 'இந்திப் போரே' திராவிடராகிய நமக்கு வெற்றியை அளிக்கும் முதல் வாய்ப்பாக அமையு மென்பதில் அணுத்துணையும் ஐயமில்லை. ஆனால், இந்திப் போரையே நோக்கியமையாது, முன்னேக்குடன் எல்லாத் துறைகளிலும் 'தமிழ்ப் போர்' துவக்கலே நமது முன்னணி வேலையாக வேண்டும்.

இனிக் கூறுங்கள் 'வெற்றி வேண்டுமேல்......! மொழிப் போர் முதன்மையா, அன்று?' என்பதை. ★

முழு விடுதலை

என். வி. நடராசன்

“அந்நியர் ஆட்சியின் பிடிப்பிலிருந்து விடுபட்டு நம்நாடு மற்ற எந்த நாடுகளுக்கும் எத்துறையிலும் பின் வாங்கினதாக இல்லாது மானத்துடன் தலைநிமிர்ந்து இருத்தல் வேண்டும். அவ்வித நம் நாட்டின் சுதந்திரத்திற்கு, பூரண சுயராஜ்யத்திற்கு எவ்விதத் தியாகமும் செய்யத் தயார். அதுதான் இந்நாட்டின் ஒவ்வொருவருடைய உறுதியும் உயிர்நாடியுமாகும்.”

என முழக்கமிடப் பட்டது. முழக்கம் மட்டுந்தானா, அதற்கான சேவைகள், தியாகங்கள், உயிர்ப்பலிகள், உல்லாச வாழ்வை விடுத்து உருக்குலைந்த கோலங்கள், பல நெருக்கடிகள் இன்னும் பலவற்றினை அவ்வப்போது நாட்டுத் தலைவர்களின் கட்டளைக்கேற்ப மக்கள் செய்யத் தவறினார்களா, எனில் இல்லை. தலைவர்கள் கூறியதைவிடப் பன்மடங்கு தங்களின் வீரத்தை, தியாகத்தை மெய்ப்பித்துக் காட்டினர் என்றே கூறலாம். வடநாட்டிலேயும் பல தலைவர்கள், தொண்டர்கள், தாய்மார்கள் தியாகச் சுழலில் சிக்கிச் சிதறுண்டனர்.

நம் மாகாணத்தைப் பொறுத்தவரை எடுத்துக் கொள்வோமானாலும், திருப்பூர்க் குமரனிலிருந்து தாலமுத்து, நடராசன் வரை பொதுவாழ்வின் பணியிலே (கருத்து வேறுபட்டிருப்பினும்) புத்துணர்ச்சியின் சின்னங்களாக இன்றளவும் திகழ்ந்து வருகினறனர்.

அதுமட்டுமா? இந்தப் பூரண சுயராஜ்யத்திற்காக நம் திராவிடத்தில், அதாவது சென்னை மாகாணத்திலே கப்பலோட்டிய தமிழன் என்று பெருமைப் படக்கூடிய வீரர் வ. உ. சி., சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், சுயராஜ்யவாழ்வுக்காகத் தனது வாழ்நாளின் பெரும்பகுதியை அத்தொண்டுக்காக அர்ப்பணஞ் செய்த பெரியார் ராமசாமி, காங்கிரஸ் என்பதுதான் தனது உயிர் என்ற வைராக்யம் உடையவரான அறிஞர் திரு. வி. க., டாக்டா நாயுடு, என் இன்னுங் கூற வேண்டுமானால் கனம் ஆச்சாரியார் ஆக இவர்களைப் போன்ற தலைவர்களும், தொண்டர்களும் தாய்மார்களும் சிறைப் பறவைகளாக விளங்கியும் என் நமது நாட்டுக்குப் பூரண சுயராஜ்யம் கிடைக்கவில்லை யென்பதைப் பற்றிச் சிந்தித்தோமா? சிந்தித்து அதற்கேற்பச் செயலாற்றினோமா?

வெள்ளையனின் தொடர்பு ஒரு சிறிதுமில்லாத பூர்ண சுயராஜ்யம் கிடைக்கப் பெறாததற்கு நம் மக்களின் மீது பழி சுமத்தவும் முடியாது.

வது என்று கேட்கக்கூடும். யார் மீதுந்தான் இனிப் பழி சுமத்திப் பயன் என்ன இருக்கிறது? இனியாவது அவ்வித பூரண சுதந்திரம் கிடைக்க வேண்டுவதற்குச் செயலாற்றுவதுதான் சிறந்ததாகும்.

தியாகத்திலே, உயர் திறத்திலே, வீரத்திலே ஆற்றலிலே ஆக எல்லாவற்றிலும் மிக்கோராகிய நாம் உள்ளபடியே உண்மைச் சுதந்திரம் அடைய முடியுமா எனின் உறுதியாக முடியும். அதிக ஆண்டுகள் கூடத் தேவையில்லை, அறிவுடைமையிருப்பின்.

ஆனல் அதற்குப் பதிலாக ஆணவமிருந்தால் என் செய்வது? இன்று கிடைத்துள்ள அரைகுறை சுயராஜ்யத்திற்கும் அற்பாயுசுதான் பலனுகும்.

எனவே இந்திய உப கண்டத்திலுள்ள ஒவ்வொரு இனத்தவர்களின் பண்பு, கலை, நாகரிகம் ஆகியவற்றிற்கேற்ப அந்தந்த இனத்தவர்களுக்கு முழு உரிமையளித்து அந்தந்த மாகாணம் அல்லது நாடுகளின் நல் வாழ்வுக்கேற்பப் பிரிவினைக்கும் மனப்பூர்வமாக ஒப்புதல் செய்துகொண்டு, முக்கிய இரண்டொன்றுக்கு மட்டும் பொது உறவுகொண்டு வாழும் நிலைமை நிரந்தரமாக ஆக ஆவன செய்தால், அன்றே இவ் இந்திய உபகண்டம் பூர்ண சுயராஜ்ய நாடாக மட்டுமல்ல, பொதுவுடமை நாடாகவும் திகழும் என்பது திண்ணம்.

ஆனல் பெரும் அரசியல் அறிஞர்கள் அந்நாளில் கூறிய ஆதிக்கத்தார் ஏற்றுக் கொண்டார்களில்லை.

அந்நியன் ஆதிக்கம் கூடாதென்றால் அந்நிய மாகாணத்தவனின் ஆதிக்கம் அதிலும் இனத்தால் மற்ற நடைமுறை பழக்கவழக்கங்களால் மாறுபட்டுள்ளவர்களின் ஆதிக்கத்தை மட்டும் வலுக்கட்டாயமாகத் திணிப்பது நேர்மையன்று.

இன்று பாகிஸ்தான் 'பிரிவினைக்குப் பின்னர் நாட்டில் அமைதி நிலவியிருக்க முடியும். எனினும் பிரிவினையால் நாட்டுக்கு, மக்களுக்கு ஆபத்து என்றுகூறித் தங்களின் ஆட்சிபீட ஆதிக்கத்தை வெள்ளையர்களைவிடப் பன்மடங்கு அதிகமாக நிலைநாட்டிக் கொள்ள வேண்டி இன்றைய வடநாட்டுச் சர்வாதிகாரிகள் செய்யும் வீண் குழப்பமே இன்றைய அமைதியின்மைக்கும் காரணமாகும்.

எனவே இவ்விதக் குறுக்கு வழிகளால் மற்றவர்களின் உரிமையைப் பறித்துவிடலாம் என்று கருதுவது தற்காலிகமாச் சிறு வெற்றியை அளிப்பினும் நிரந்தரத் தோல்வியை, தீராப்பகையை, நாட்டில் அமைதியின்மையைத் தான் முடிவில் தேடித்தரும்.

அந்த நிலையை உணர்ந்து வடநாட்டு ஆட்சி பீடத்தின் கர்த்தர்கள் வீண்காலம் போக்காமல் நமது திராவிட நாடு பிரிவினைக்கு ஆவன செய்யவேண்டுவது அவர்களின் நல்வாழ்வுக்கும் முழுவிடுதலைக்கும் இன்றியமையாததாகும். ★

தலைக்கு மேலேதான்

தணிகாசல் முதலியார் பெரிய செல்வந்தர். ஒருநாள் பங்களாவின் முன்புறத்தில் நின்று கொண்டிருக்கும் பொழுது ஒரு வைதிக சாஸ்திரியார் அவரிடத்தில் வந்து 'பரம ஏழை. சாப்பாடில்லாமல் படும் கஷ்டம் சொல்ல முடியவில்லை. ஏதாவது தர்மம் கொடுங்கோ' என்று கேட்டார். உடனே முதலியார் உள்ளே போய் எட்டணுக் கொண்டுவந்து சாஸ்திரியாரிடம் கொடுக்க, சாஸ்திரியார் இரண்டு கைகளையும் அடக்கத்துடன் நீட்டி வாங்கிக் கொண்டு, "எங்களுடைய காலம் இப்படி ஆயிட்டுது, வைதிகப்பிராம்ணுளாகப பிறந்து, இந்தக் காலத்தில் எங்கள் கை கிழேயும், சூத்திரராகிய உங்கள் கை மேலேயும் இருக்கப் பிச்சைவாங்கும் கதி எற்பட்டு விட்டது" என்று வருத்தத்துடன் சொல்லிக கொண்டு புறப்பட ஆரம்பித்தார். உடனே முதலியார்



"இருங்கள் சாஸ்திரிகளே. வருத்தப்படாதீர்கள்" என்று சொல்லிக்கொண்டே வீட்டிற்குள் போய், ஒரு ரூபாய் எடுத்துக் கொண்டு வந்து, சாஸ்திரியாரைக் கூப்பிட்டார். சாஸ்திரியாரும் வந்தார். முதலியார் ஒரு ரூபாயையும் கொடுத்துக் கொண்டு "எங்கள் கை மேலேயும், உங்கள் கை கிழேயும் என்ற கவலை உங்கட்கு இனி வேண்டாம். இந்த ஒண்ணரை ரூபாயும் எடுத்துக்கொண்டு கடை வீதிக்குப் போங்கள். ஒரு நல்ல 'ரேசர்' (அம்பட்டன் கத்தி) வாங்கிக் கொள்ளுங்கள். "அதோ தெரியுது பாருங்கள் ஒரு குளத்து மேடை. அங்கு போய் ஒருசிறிய பெட்டியுடன் உட்கார்ந்து கொள்ளுங்கள். பிறகு உங்கள் பாடு யோகந்தான். உங்கள் கை கிழேயே இருக்காது. வருகிறவர் தலைக்கு மேலே தான் உங்கள் கை. சந்தோஷமாகப் போங்கள்" என்ருர்.

நச்சுப் பொய்கை

இளமைப்பித்தன்

மாலை ஒளி மங்கியதும் வானத்தில் பல்லாயிரக்கணக்கான நட்சத்திரங்கள் சுடர்விட்டு மின்னிக்கொண்டிருந்தன. காந்தா சாய்வு நாற்காலியில் சாய்ந்த வண்ணம் ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள்.

"உலகம் பாவம் செய்யாதே என்று சொல்லவில்லை; ஆனல் செய்வதை இரண்டு பேருக்குத் தெரியாமல் செய் என்றுதான் சொல்லுகிறது" என்றவரிகளைப் படித்ததும் அவளுடைய மனதில் மின்வெட்டுகள் தெறித்தோடின.

புத்தகத்தை மூடிவைத்துவிட்டு, எழுந்து சாளரத்தின் ஓரமாகப் போய் நின்ருள்.

எதிரே எல்லையற்ற பரந்த வெளியான நீலவானம். சரிகைத் துணிகளால் அலங்கரிக்கப்பெற்ற கருநீலப் போர்வையைப் போர்த்திக் கொண்டிருந்தது.

"நான் செய்த பாவத்தை இரண்டு பேர்களுக்குத் தெரியாமல் மட்டும் செய்திருந்தால், இன்று........"

கருநீல விழிகளில் நீர் தளும்பியது.

அவளுடைய எண்ணங்கள் எதிர்நீச்சுப் போட ஆரம்பித்தன.

'காந்தா!'

'என்ன கண்ணு!'

"உன் அழகை அனுபவிக்கவே நான் பிறந்திருக்கிறேன் போலும்!"

"நீ என்ன சொல்லுகிருய்?"

"நம் மாணவ உள்ளத்திலே மலர்ந்திருக்கும் காதல் மலர் வாடிவிடக் கூடாது என்றுதான் சொல்லுகிறேன்."

"நீ எதைச் சொன்னுலும் எனக்கு இனிக்கத்தான் செய்கிறது. ஆனல்......!"

"உன்னை மறந்து விடுவேனென்று நினைக்கிருயா?"

"இல்லை!"

"இல்லை யென்ருல் 'ஆனல்' எதற்கு?"

"நாம் மணமக்களாக ஆனல் எவ்வளவோ ஆனந்தமாக இருக்கலாமே என்றுதான் சொல்லுகிறேன்."

"உன் நிகழ்காலக் கனவு வருங்காலத்தில் நினைவாகும் இப்பொழுதுமட்டும்..."

"கண்ணு!"

"காந்தா!"

அவள் கழுத்தினிழ் சுருண்டு வளைந்தன. காந்தாவின் இதழ் களிலே இன்பவெறி கூத்தாடி யது.

●

"ஐயோ, அம்மா!"

"என்னடி?"

"...........''

"உனக்கு உடம்பு என்ன செய்கிறது?"

"வலி தாங்க முடியவில் லையே!"

"என்ன வலியா?"

'ஆமாம் அம்மா...டாக்டரைக் கூட்டிக்கொண்டுவாயேன்''

"நீ நாசமாய்ப் போக. இந்தக் காரியம் இரண்டாம் பேருக்குத் தெரியக் கூடாதடி!"

"என் உயிரே போய்விடும் போலிருக்கிறதே!"

"வெளியில் தெரிந்தால் நம் குடும்பத்தின் கௌரவம், மானம், எல்லாமே போய் விடுமே"

சிறிதுநேரம் அமைதி: பிறகு பலமான ஒரு கூக்குரல்.

காந்தா கிரீச்சிட்டாள்.

குழந்தை பிறந்து விட்டது!

காந்தாவின் தாய கைகளைப் பிசைந்து கொண்டாள். அவ ளுடைய சிந்தனை தறிகெட்டு ஓடியது. மனதில் ஒரு பயங்கர சிறியது.

"வில்......ல்...ல்......"

குழந்தையின் கழுத்தை அழுத்திக் கொன்று விட்டாள் அவள். காந்தா நினைவிழந்து கிடந்தாள்.

●

காலவெள்ளத்தில் ஆண்டுகள் மூழ்கின. காந்தாவைப் பார்க்கப் பிள்ளைவீட்டார் வந்த னர். பக்கத்து வீட்டுக்காரர்கள் பலமான பிரசாரத்தில் ஈடுபட் டார்கள்.

விஷயம் விபரீதமாகியது.

பெண் பார்க்க வந்தவர்கள் வந்த வழியாகப் போய்விட்டார் கள். காந்தா கண்ணீர் வடித் தாள். கண்ணன், அவளுடைய வாழ்வுக் கிண்ணத்தில் கக்கிய நஞ்சு குடும்பத்தையே நச்சுப் பொய்கையாக்கி விட்டது.

காந்தா உள்ளத்தைக் கல் லாக மாற்றிக் கொண்டாள். கல்லும், முள்ளும் அள்ளிக் கொட்டப் பட்டிருந்த அவளு டைய வாழ்வில் ஒரு புதிய வழி யைக் காண ஆரம்பித்தாள்.

கண்மூடிச் சமூகத்திற்கு அவள் வைரியானாள். வாழ் விலே வளம் பெருக்க வளையா மல் நிமிர்ந்து நின்றாள்.

சிந்தனையிலே உருவான சிற் பங்கள், பெண்ணினத்தைத் தாக்கவரும் கொடிய பழக்க

கண்ட, கண்ட இடங்களிலெல் லாம் வெடுக்கு, வெடுக்கெனக் கடித்துக் கொன்ருள். அனுப வம் அவளுக்கு ஆழ்ந்த அறி வைக் கொடுத்தது!

●

சாளரத்தின் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்த காந்தா வின் பார்வைவிண்ணகத்தைத் துழாவியது.

கீழ்க்கோடியில் சிறிதுநேரத் திற்குமுன், கண் சிமிட்டிக் கொண்டு கர்வத்துடன் ஒளி வீசிய ஒரு நட்சத்திரம் நிலை பெயர்ந்து கீழே விழ்ந்தது.

அதன் ஒளி மறையும் வரை யில் அவள் அதையே பார்த்துக் கொண்டிருந்தாள். சட்டென்று உள்ளத்தில் ஒரு கற்பனை தோன்றியது. திரும்பி வந்து அவளுடைய குறிப்புப் புத்தகத்தில் பின் கண்டவை களை எழுதலானுள்:

விண்மீனும் பெண்ணும்!

பூமியில் உதிர்ந்த நட்சத்திர மலர்களை வானம் மறுபடியும் தன்மீது எடுத்து ஒட்டவைத்துக் கொள்ளுவதில்லை. செடி, கொடி, மரங்களும் அப்படித் தாம்.

அதேபோலச் சமூகமும் வாழ்க்கையில் வளங்கெட்ட பெண் களை ஏற்றுக்கொள்ள எளிதில் இடங் கொடுக்க மறுத்து விடுகிறது!

பெண் பாவம் செய்துவிட்டா ளென்பதற்காகவா? அப்படி யென்ருல் அவளைப் பாவம்செய் யத் தூண்டியது யார்? பெண் சமூகமே பாவத்தின் பிரதிபிம் பமென்று இகழ்ந்துகூறும் இதிகாச புராணங்கள் தாமே சாவித்திரியையும், ஞாயினி யையும் உருவாக்கி விட்டன!

பெண்களுடன் சமூகம் கண் ணுமூச்சியாடுகிறது. அதிலே அகப்பட்டவளைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கிறது அது. பெண்ணும், நட்சத்திரத்தைப் போன்றவளே; அது வானத்தி லிருக்கும் வரையில்தான் அதற்கு மதிப்பு. அது பூமியில் விழுந்துவிட்டால் வெறும் கல்!

விண்மீனின் அழகைப் பருகிய மனிதன், தன் காலடியில் கிடக்கும் கல்லைப்பற்றிச் சிந்திப்பதில்லை.

ஒன்று விழ்ந்ததும், மற்றதைப் பார்க்க ஆரம்பிக்கிருன் அவன்.

ஆனுல்......

பெண்கள் அதைப்போல நடந்து கொள்ள இயலுமா?

சருக்கு நிலத்திலே சதிராடும் சமூகமே இதற்கு என்ன பதில் சொல்லப் போகிருய்?

●

அவள் அதை எழுதி முடித்து விட்டுச் சிரித்தாள். வானத்தில் நிலவும் சிரித்துக் கொண்டே வெளியேறியது. ★



பாரதிதாசன் பரம்பரை

[“பாலைவனம்” தமிழரசன் இயற்றிய கவிதை. அவர் தம் இயற்பெயர் சி. மாணிக்கம் என்பதாகும். மதுரை வாசியான அந்த இளைஞர் அமெரிக்கன் கல்லூரிமாணவர் —ஆசிரியர்]

பாலைவனம்

பார்த்திடும் இடத்தி லெல்லாம்
பரந்தமண் பரப்பை யன்றி
நீர்த்துளி காண்ப தற்கு
நெடுந்தூரம் செல்ல வேண்டும்
வார்த்தைகள் சொல்ல வியலா
வறுமையால் வாடும் மக்கள்
ஆர்த்திடும் ஒலியைப் போலப்
பேய்க்காற்(று) அலறி வீசும்!

திமிங்கல முதுகைப் போலத்
திரள்மணல், அடிமை மக்கள்
குமுறிய நெஞ்சம் போலக்
கொதிப்பேறிப் புகையும்; ஆங்கே,
தமிழனின் கீர்த்தி இங்நாள்
சிதறுண்டு தவிப்பதைப் போல்
அமைந்தன சோலை பூங்கா!
அங்கெல்லாம் தென்றல் வீசும்!

பகைவரைத் தமிழன் பார்க்கும்
பார்வையைப் போலக் கதிரும்
தோகைபெரு வனத்தை நோக்கி
வெப்பத்தைச் சொரியும்; பின்னர்
பகையல்ல நமக்குப் பாலை
எனக்கண்டு மாலைப் பொழ்தில்
நகைமுகம் காட்டி மெல்ல
மேற்கினில் நகர்ந்து செல்லும்.

மூப்பெய்திப் போன உலகை
மொய்த்திடும் இருளை ஓட்டும்
தீப்பந்தம் கதிரோன் மேற்குத்
திசைக் கடல் மூழ்க, இருட்டில்
தீப்பட்ட புண்கள் போலத்
தெரிந்திடும் மீன்கள்; பின்னர்ப்
பூப்போட்ட திரையைப் போலப்
பொலிந்திடும் அழகு வானம்!

தமிழ்

ரிக மொழிகள் பலவற்றில் அறிவுக் களஞ்சியங்கள் இயற்றப் பெற்று அவ்வந்நாட்டு மக்கள் அறிவு வளர்ச்சிக்கு அவை பெரும்பயன் விளைவித்து வருகின்றன. பல மொழிகளையும் பல மொழி இலக்கியங்களையும நாகரிகங்களையும்விட எவ்வளவோ பழமை வாய்ந்த தமிழ் மொழியில் இதுகாறும் நல்ல அறிவுக் களஞ்சியம் ஏற்படாதது வியப்பே. சில காலமாகப் பல தமிழன்பர்கள் இக்குறைபாட்டை நன்குணர்ந்து அதனை நீக்க முயன்று வந்துள்ளனர். ஆனல் பலருடைய முயற்சிகள் கரு நிலையிலேயே நின்றுவிட்டன. இத்துறையில் வருங்கால வளர்ச்சிக்குரிய கருநிலையாக வேனும் அமைந்த நன்முயற்சி அபிதான சிந்தாமணி என்ற நூல் ஒன்றே. காரணம் இப்பெருந் தொண்டு முற்றிலும் ஆர்வத்தினல் மட்டும் நிறைவு பெறக் கூடியதன்று என்பதே. அறிவுலகில் பயின்ற பலதிறப்பட்ட அறிஞர், கலை, தொழில், வாழ்க்கைத் துறைகள் ஆகியவற்றில் தேர்ச்சி உடைய பலவகை மக்கள், நாட்டின் செல்வர், அரசியல் நிலையங்கள், கல்வி நிலையங்கள், பொது நிலையங்கள் ஆகிய எல்லாத் திறங்களிலும் உள்ளவர்கள் முதலியோர் ஒத்துழைப்பின்றி அது உருவடைதலரிது.

> தமிழுக்குக் களஞ்சியம் ஏற்படுவது வரவேற்கத் தக்கசெய்தி; ஆனல் அது உருவம் பெறுவதில் தமிழறிஞர் அனைவருமே கவனம் செலுத்தவேண்டும். அறிஞர் அப்பாத்துரை அவர்கள் இக்கட்டுரை வரிசையில் தம் ஆய்வுரைகளைத் தொடர்ந்து எழுதுகிறார்கள்.

எல்லா நாடுகளிலுமே அறிவுக் களஞ்சிய முயற்சிக்கு முன்னோடிகளாக இருந்த துறைகள் அகர வரிசைகள், பொது அறிவுத் தொகுப்பு நூல்கள், நாடு, மொழி, இலக்கியம், கலை, சமயம் ஆகியவைபற்றிய அறிவுரைத் தொகுதிகள் வரலாறுகள் முதலியவை. தமிழ் நாட்டில் இத்துறைகளுள் எதனிலுமே இன்னும் முழு அளவில் கவனம் செலுத்தப்படவில்லை. மொழியியலும் வரலாறும் கால்டுவெல்லுக்குப் பின் வளர்க்கப் பெறவில்லை. போக, தமிழ் நாட்டு வரலாறு, தமிழர் நாகரிக வரலாறு, கலை வரலாறு, சமய வாலாறு ஆகியவை பற்றி எங்கும் பேச்சுக் கூட எழவில்லை. தமிழ்ப்பெரும் புலவர் சிலரும் ஆராய்ச்சியாளர் சிலரும் தமிழிலக்கிய வரலாறு எழுதியுள்ளனர். ஆனல் தமிழிலக்கியப் பெருங் கடலை வாலாற்றுக் கோலால் முழுவதும் அளக்க இதுவரை எம் முயற்சியும் செய்யப்படவில்லை. அகரவரிசைத் துறையில் மட்

அறிவுக் களஞ்சியம்

கட்டுரையாளர்: அறிஞர் கா. அப்பாத்துரை

டும் பலர் பல நூல்கள் யாத்துள்ளார்கள். இங்கும் முதல் முயற்சி மேல் நாட்டவர்களிடமிருந்தே வந்தது. முதல் தமிழ் அகரவரிசை வீரமாமுனிவர் என்ற தமிழ்ப்பெயர் கொண்ட அறிஞர் பெஸ்கியாலும் முதல் ஆங்கிலத் தமிழ் அகர வரிசை அறிஞர் வின்ஸ்லோவாலும் இரண்டு நூற்றாண்டுகட்கு முன்பே எழுதப்பட்டன. தமிழ் அகரவரிசைகள் இப்போது பல எழுதப்பட்டுள்ளன. ஆங்கிலந் தமிழ் அகரவரிசைகளும தமிழ் ஆங்கில அகர்வரிசைகளும் ஒரு சில உள்ளனவாயினும் தற்கால நிலைக்கேற்ற நிறை பயனுடைய நூல்கள் இத் துறைகளில் இன்னும் ஏற்படவில்லை என்னலாம்.

ஒரு சில ஆண்டுகட்கு முன் சென்னைப் பல்கலைக் கழகத்தார் தமிழ் - ஆங்கில - தமிழ் அகரவரிசை ஒன்றைப் பலர் ஒத்துழைப்புடன் பன்னூறாயிரம் செலவில் பல ஏடுகளாகத் தொகுத்து உதவியுள்ளார்கள். தற்போது மாநில உரிமைக்கழகத்தின் (*Congress*) சார்பில் சென்னை அரசியலை ஏற்று நடத்தும் அமைச்சவை (*Ministry*)யில் கல்வி அமைச்சராயமர்ந்துள்ள தமிழன்பர் உயர்திரு. டி. எஸ். அவினாசிலிங்கம் அவர்கள் அகரவரிசையினும் பன்மடங்கு பெருமையும் பயனும் தருவதாகிய அறிவுக் களஞ்சிய முயற்சியை மேற்கொண்டு அதற்கான முன்னேற்பாடுகளைத் தொடங்கி வருகின்றார்கள். தமிழர் சார்பாகவும் தமிழ் நாட்டின் சார்பாகவுமே இம்முயற்சியை அரசியலார் ஏற்று நடத்த முன்வந்துள்ளராதலால், தமிழகமும் தமிழரும் இதில் எல்லா வகை ஒத்துழைப்பும் தரக் கடமைப்பட்டுள்ளனர். யாருக்கு வந்தவிருந்தோ எனத் தமிழர் இருப்பாரானால், தமிழர் முயற்சியையும் தமிழகத்தின் செல்வத்தையும் கொண்டு செய்யப்படும் இம்முயற்சி வெறும் வாணிக முயற்சியாய் நின்றுவிடுமேயன்றி நாட்டுப்பணியாய் நிறைவு பெறாது. ஆகவே தமிழுக்கும் தமிழருக்கும் தமிழகத்துக்கும் மெய்யானமுழுநிறை பயன் தரத் தக்க வகையில் இம்முயற்சி பயன்பெற எத்தகைய குறிக்கோள், திட்டம், வேலை நடைமுறை ஆகியவை வேண்டப்படும என்று ஆராய்வோம். ★

மக்குச் சொக்கன்



– அத்தான் –

சொக்கன் மிகவும் சிறுபையன்
'சுட்டி' யென்பாள் பாட்டியம்மாள்
'மக்கே' என்பார் ஆசிரியர்
'மணிப்பயலெ' ன்று நான் சொல்வேன்

பள்ளிக் கூட வகுப்பினிலே
பாடம் நடக்கும் வேளையிலே
துள்ளி யெழுந்து சிறு சொக்கன்
துடுக்காய்க் கேள்விகள் கேட்டிடுவான்

பையன் கேட்கும் கேள்வியெல்லாம்
பாடத்தோடு சேர்ந்ததுதான்
ஐயா பதிலே சொல்லாமல்
அவனை அதட்டி அடக்கிடுவார்

'உனது வகுப்புப் பாடத்தை
ஒழுங்காய்ப் படிக்க வழியின்றி
எனக்கும் உனக்கும் தொடர்பின்றி
எதற்குக் கேள்விகள் கேட்கின்றாய் ?





'இனிமேல் இவ்விதம் கேட்டாயோ
எனக்குக் கோபம் வந்திடுமே.
மனதில் அச்சம் கொண்டிடுவாய்
மக்குச் சொக்கா' என்றிடுவார்.

புத்தகத்தை மூடிவிட்டு
'பொட்டை நெட்டுரு'ச் செய்கின்ற
வித்தை தெரியாச் சொக்கனுந்தான்
விளங்கா தெவ்விதம் படித்திடுவான்!

ஐயம் கேட்கப் போனலோ
ஐயா கோபம் கொண்டிடுவார்!
பயத்தால் பையன் நடுநடுங்கி
பாடம் படியாதிருந்திடுவான்.

இவ்வித மிருக்கும் நாளையிலே
எழுதும் தேர்வு வந்ததுவாம்;
எவ்விதம் சொக்கன் விடையளிப்பான்
என்ற செய்தி தெரியாதோ?

தேர்வின் முடிவும் தெரிந்ததுவே;
தேறவில்லை சொக்கனுமே!
தேர்ந்தே அறியாப் பெற்றோர்கள்
திட்டித் திட்டி நொறுக்கினரே!

ளெல்லாம் தலை விதி' என்கின்ற
ாண்ணம் சிறிதும் மாறாத
ால்ல வயதுப் பாட்டியுந்தான்
ாமது சொக்கனை வைதாளாம்!

பாட்டி' 'பாட்டி!' தலைவிதியால்
ரீட்சை தோற்ற தென்று' சொல்லி
ாட்டி சொல்லால் அவள் வாயைப்
லமாய்ப் பையன் அடைத்தானே!





அறுந்த கயிறு

டி. கே. சீனிவாசன்

இளமையை அள்ளி வீசிக்கொண்டு பொன்னி அம்மாள் உள்ளே நுழைந்தாள். வானத்திலே வளைந்து வட்டமிடும் மாடப்புருவை மனங்குளிரப் பார்த்து ஜோடிப்புரு ஒன்றைத் துணைக்கனுப்பித் தன்னிடத்தில் இழுக்க எண்ணமிடும் புருப் பிடிப்பவனைப் போலச் சோமசுந்தரம் அவளைப் பார்த்தார். கண்கள் அவள் உருவத்தை இதயத்திற்கு இழுத்துச் சென்றன. மட்டரகமான காகிதத்தில் மனதை உருக்கும் ஓவியம் ஒன்றை எழுதி விட்டுக் காகிதத்தால் கைத்திறனின் எழில்மங்கிவிட்டதே எனக் கவலைப்படும் சித்திரக்காரன் நிலை போலானது அவர் மன நிலை!

அவர் எதிர்பார்க்காத உருவம் எதிரே நின்றது. "மாமா" என்று மழலைமொழி பேசி மடியில் உட்கார்ந்து விளையாடிய சிறுபிள்ளை இன்று அவர் மஞ்சத்தில் உட்கார்ந்து மயக்க மொழிகள் பேசப்போகிறது. அவள் அவருக்கு இப்போது மனைவி. பிஞ்சுக் கைகளால் அவர் இலையில் இருந்த உணவை எடுத்துச் சாப்பிட்ட போது இருந்த இன்பத்தின் ருசிதான் அவரை அவளை மனைவியாக்கிக் கொள்ளத் தூண்டியது. அந்தக் கை வாழ்வில் துணைபுரியப் போதுமான நிலையிலிருக்கிறதா என்ற மனத்துடிப்பு அவரைத் திடுக்கிடச் செய்தது.

ஆசையோடு தன் மாமன் தன்னை அழைத்து அன்புடன் பேசுவதால் பொன்னி அம்மாளுக்கு எப்பொழுதும் அவர்

மேல் ஒரு தனி அன்பு இருந்தது. மாமன் வீட்டிற்குச் செல்வதென்றால் அலாதி இன்பம உண்டாகும். அவர் வாங்கித் தரும் விளையாட்டுச் சாமான்களைக் கட்டிக் காப்பாள். வீட்டிற்குத் திரும்பிவிட்டால் அவரைப்பற்றி அடிக்கடி தன் தோழிகளிடம் சொல்லிச் சொல்லி மகிழ்வாள். அவரே தனக்கு மாலையிடப் போகிறார் எனத் தெரிந்தவுடன் சென்று போன நாட்களை மறுபடியும் வரவழைத்துக் கொஞ்சி விளையாட ஆரம்பித்தாள்!

திருமண நாளன்று கூட அவளுக்கு இருப்புக்கொள்ளவில்லை. மாமா வீட்டில் செல்வக் குழந்தையாக விளையாடிய அந்த நினைவுகள் எல்லாம் அவளை வானத்தில் நிந்தவிட்டு வேடிக்கை பார்த்தன. அவர் முதுகின்மேல் ஏறிக் குதிரை சவாரி செய்த அந்தப் பழைய நிகழ்ச்சிகள் அவளைப் பரவசப் படுத்தின. "என்னமோம்மா, நீ பாக்கியம் செய்தவள். எங் கண்ணன் ஒன்னை ராஜாத்தி மாதிரி வச்சிருப்பார்" என்று அவள் தாய் தன் அண்ணனைப் பற்றிக் கூறிய பொழுது முதல் முதலில் மேடை ஏறிப் பேசுந் தோழருக்கு வரவேற்பும் வாழ்த்தும் மலர் மாலையும் தொடர்ந்த காட்சிகளாகத் தோன்றினால் எப்படி இருக்குமோ அதே நிலையில்தான் அவளும் இருந்தாள்.

அன்றுதான் முதன்முதலில் அடைபட்ட வாழ்க்கையிலிருந்து விடுபட்டுத் தன் மாமனைத் தனிமையில் காணவந்தாள். ஒரு கையில் வெற்றிலைத் தட்டும் மறு கையில் பால் பாத்திரமும் முகத்தில் எப்போதும் தோன்றாத வெட்கமும் அவளோடு துணைக்கு வந்திருந்தன. வழக்கப்படி கதவை மூடித் தாழிட்டுவிட்டார்கள். கழுத்தைச் சுற்றிக் கைகளைக் கோர்த்து காதைப் பிடித்துக் கிள்ளி "மாமா இன்னைக்குப் பொம்மை வாங்கித் தாரேன்னு சொன்னிங்களே, ஏன் வாங்கிட்டு வல்லே?" என்று கேட்ட காட்சி கண்ணெதிரே நின்று அவளைக் கைநீட்டி அழைத்தது.

அவள் நெருங்க நெருங்கச் சோமசுந்தரத்தின் அங்கங்கள் சோர்வுற ஆரம்பித்தன. ராஜா மாதிரி ஒருவனுக்கு அவளைக் கொடுத்து ராணி மாதிரி வைத்திருக்கத் தன் தங்கையுடன் எத்தனையோ முறைகள் திட்டம் போட்டிருக்கிறார். இன்று அந்த ராஜா மாதிரி தன்னை நினைத்துக்கொள்ளக்கூட முடியாமல் தவித்தார். பெனாரஸ் புடவையும், மஞ்சள் பூசி அதைப் பவுடரால் மெருகு கொடுத்த முகமுங்கொண்ட அந்த உருவம் குனிந்த தலை நிமிராமல் தன்னெதிரே வந்து கொண்டிருந்தது. இன்னும் சற்று நேரத்திலே அவள் தன்பக்கத்திலே அமர்ந்துவிடப் போகிறாளே என்ற அச்சம் அவருக்கு அவரை அறியாமல் ஏற்பட்டது.

தன்னை உயிர் என மதித்த மாமன் "வா" என்றுகூட அழைக்க வில்லையே என்ற வருத்தத்தால், சோபை நிறைந்த அவள் முகத்தில் ஏக்கத்தின் சாயல் இடம்பெற்றது. ஒருவேளை யாருமே இல்லாமல் தான் மட்டும் தனியாக இருக்கிறோமே என்ற சந்தேகம்

தோன்றியது. நிமிர்ந்து பார்த்தாள். அன்பின் ஒளியை எதிர்பார்த்துவந்த அவள் கண்கள் கட்டிலில் உட்கார்ந்திருந்த அந்த உருவத்தைப் பார்த்தன. அன்பு காட்சியளித்தது. ஆனால் அதில் ஒளிமட்டும் இல்லை!

காலம மட்டும் தன் காரியத்திலேயே கண்ணுயிருந்தது. அவள் நின்றுகொண்டிருந்தாள். அவளுடைய மாமன் உட்கார்ந்து கொண்டிருந்தார். பத்துப்பேருக்குமத்தியில்கூடக் கூச்சமோ வெட்கமோ துளிகூட இல்லாமல் பரிகாசம் செய்து பழக்கப்பட்ட அவர்களுக்கு அந்தத் தனிமையில் ஒருவரை ஒருவர் பார்க்கக்கூடத் துணிவேற்படவில்லை. சோமசுந்தரத்திற்கு எப்போதுமே அவளுடனிருப்பதில் வெட்கம் இருந்ததே இல்லை. பொன்னி அம்மாளுக்கு அதுவரையில் இருந்த வெட்கம் எங்கேயோ ஓடிவிட்டது. இருவரும் புதிதல்லவே, பின உபசாரம் என்பது எப்படிக் குறுக்கே நிற்க முடியும்? இருவரும் பார்த்துக்கொள்வதற்கு முன்னுல் சகஜமான நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்று என்றுதான் எண்ணினர்கள். பார்த்த பிறகு ஏதோ புதிதாக, நடக்கக்கூடாததாகத் தோன்றிற்று. வீட்டில் இருந்தவர்கள் அத்தனை பேரும் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தார்கள். நிம்மதி சுற்றிலும் தன் முழு ஆட்சியையும் பூரணமாகச் செலுத்திற்று. கடிகாரத்தின் முட்கள் நகர்ந்து கொண்டே இருந்தன.

காலையிலே அவளுடைய தோழி ஒருவிதமாகப்பார்த்துப் புன்சிரிப்போடு கண்ணைச் சிமிட்டியபோது கோபத்தோடு அவளைப் பார்த்தாள். ஆனால் மறுமுறையும் அவளுடையவிஷமம நிறைந்த அந்தப் பார்வையை எதிர்பார்த்தது பொன்னி அம்மாளின் மனம. அன்று வீட்டிலுள்ளவர்கள் அத்தனை பேரும் இவளை விசேஷமாகக் கவனித்தார்கள். நாடகத்தில் கதாநாயகி வேஷம் போடுபவளுக்கு எப்படி மரியாதையும் புகழுரைகளும் "அட்வான்ஸாக"க் கிடைக்குமோ அதே போலத்தான் இவளிடம் எல்லோரும் அக்கறை காட்டினர்கள். அவள் தாய் "ஏம்மா இப்படி அலையறே? கொஞ்சம் படுத்துத் தூங்கேன்" என்று சொன்னபோது அவள் தாய் வார்த்தையைத் தட்ட முடியாமல் படுத்தாள். தூக்கம் என்ன அவ்வளவு விரைவில் வருகிறேனென்கிறதா? வருந்தி வருந்தி அழைத்துப் பார்த்தாள். சாக்குப்போக்குக்காட்டி அது இவளிடமிருந்து தப்பித்துக் கொள்ளவே முயன்றது. கண்ணை மூடினுள். அவள் மாமன் அன்பும் ஆதரவும் நிறைந்த பார்வையோடு வந்து நின்ருர். இவள் ஓடி அவர் கைகளைப் பிடித்து இழுத்தாள். இரட்டை மாட்டு வண்டியில் ஒரு மாடு மெள்ளப் பின் தங்கவே அடுத்த மாடும் வேகமாகப் போகமுடியாமல் தத்தளிப்பதைப் போலச் சின்னஞ்சிறு கால்களால் அளந்து அளந்து நடைபோடும் இவளோடு அவள் மாமன் நடக்க முடியாமல் தவித்தார். இரண்டு கைகளாலும் அவளைத் தூக்கித் தன் கைகளில் ஏந்திக் கொஞ்சி முத்தங் கொடுத்தார். இவளும் "மாமா நாளைக்குப் பொம்மை கல்யா

அக்கா எல்லாரும் சேர்ந்து பண்ணப்போறேம்; பணங் கொடு," என்று கேட்டாள். ஆசையோடு ஒரு ரூபாயை எடுத்து அவர் அவள் கைக ளில் வைத்தார். "நீங்க என் னுண்ணோன் சின்ன பிள்ளை கையிலே பணங்கொடுத்துக் கெட்ட பழக்கம் உண்டாக்கு றீங்க" என்று அவள் தாய் அந்த ரூபாயைத் தட்டிப் பிடுங்கிக் கொண்டாள். ஏக்கம் நிறைந்த இவள் பார்வையும், கோபம் நிறைந்த இவள் அம்மாவின் பார்வையும் — பரிகாசம் நிறைந்த இவள் மாமாவின் பார்வையும் — அந்தக் காட்சி இவளுக்குப் பிடிக்கவே இல்லே. பிடிக்காத தொடர்கதையைச் சலித்துப் போய்ப் பாதியோடு படிக்காமல் விட்டுவிடுவது போல, இவள் விழிகளுக்கு மூடிபோட்டிருந்த அந்த இமைகளைத் திறந்து விட்டாள். மாலையானதும் ஐயர் இவளிடத்திலே இது வரையிலே இருந்த தோஷங் களை எல்லாம் என்னென் னவோ சொல்லி விரட்டினர். இரவு நெருங்க நெருங்க இவள் மனமும் சொன்னபடி கேட்க மறுத்தது, இரவும் வந்தது. இவளும் அந்த அறைக்குள்ளே நுழைந்தாள்.

"ஏம்மா வெட்கப்படுறே, இந்தா இந்தப் படுக்கையிலே வந்து படுத்துக்கோ" என்று சொல்லிக்கொண்டே சோம சுந்தரம் எழுந்து நின்றார். இவளுக்கு அந்தப் படுக்கை எப்போதும் போலத்தான் காட்சி அளித்தது. ஆனல் அதில் போய்ப் படுக்கமட்டும் மனம் வாளில்லே. மெள்ளக் சென்று படுக்கையிலே படுக்க வைத்தார். அவருடைய அந்தக் கை சற்று நடுங்கிற்று. "ராத்திரி எல்லாம் முழிச்சா உடம்புக்கு ஆகாது, படுத்துத் தூங்கு" என்று சொல்லிவிட்டு அவர் பக்கத்திலிருந்த சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கண்களை மூடினர்.

சூரியன், சந்திரன், ராகு, கேது, சனி அத்தனை கிரகங் களும் அவர் முன்னலே வந்து நின்றன. மங்கள வாத்தியங் கள் முழங்கிக் கொண்டிருந்தன. எதிரே சிலசுள்ளிகளைப்போட்டு ஐயர் எரித்துக் கொண்டிருந் தார். அரிசியும் மஞ்சளும் கலந்து வைக்கப்பட்ட தட்டு சுற்றிலும் இருப்பவர்களிடம் நீட்டப்பட்டது. ஒவ்வொரு வரும் ஒரு பிடி எடுத்துக் கொண்டனர். அது முடிந்த தும் ஐயர் மஞ்சள் நனைக்கப் பட்ட கயிறைக்கையில் எடுத்து இவரிடங் கொடுத்தார். குனிந்து கொண்டிருந்த அந்தச் சிறிய தலையை யாரோ ஒரு பெண் பின்னலிருந்து நிமிர்த்தினள். "கெட்டிமேளம்," "கெட்டி மேளம்" என்று எல் லாரும் கத்தினர்கள். ஏதோ ஒரு ராகத்தை அப்போதுதான் தொடங்கித்தன் கைத்திறமை அத்தனையையும் காட்டிக் கொண்டிருந்த நாதஸ்வரக் காரன் அலுப்போடு நாதஸ் வரத்தைக் கீழே வைத்தான். மேளக்காரன் வேகமாகத் தட்டி னன். அந்தக் கயிற்றை அவள் கழுத்தினருகே கொண்டு போனர் சோமசுந்தரம். கயிறு கையில் இல்லே. கூரான வாள் ஒன்று அவர் கையிலே மின்

தத் தலை கவிழ்த்து வைக்கப் பட்டிருந்தது. கத்தியை ஓங்கினர், மறு நிமிடம் அந்தக் கத்தி அந்த சின்னஞ் சிறிய கழுத்தை..............! "ஐயோ பொன்னி" என்று அலறிக் கொண்டே விழித்துப் பார்த்தார். அவளும் திடுக்கிட்டு விழித்துப் பார்த்தாள். கொடுமையான உணர்ச்சியின் ரேகை அவளுடைய கண்களிலே காணப்பட்டது. கலவரமும் கலக்கமும் நிறைந்த பார்வையோடு தன்னைப் பார்த்த பொன்னியை மறுமுறையும் கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தார். பொன்னி இன்னும் கன்னியாகத் தானிருந்தாள்! இரண்டு பேரும் மறுபடியும் தலையைச் சாய்த்தார்கள். மணி மூன்று அடித்தது. பிறகு என்ன நடந்ததோ? இருவரும் அத்தனை நேரம் கண் விழித்திருப்பதற்கு உடல் நிலை இடங் கொடுக்கவில்லை!

இவர் அறையைவிட்டு காலையில் வெளி வரும்போது, எல்லோருக்கும் ஒன்றும் புரியவில்லை. பொன்னியின் தம்பி யாருக்கோ எதோ ஒரு புத்தகத்தை உரக்கப் படித்துக் கொண்டிருந்தான்.

"பேடகன்ற அன்றிலைப்போல்
  மனைவி செத்தால்
பெருங் கிழவன் காதல்செயப்
  பெண் கேட்கின்றான்.

வாடாத பூப்போன்ற
  மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தாற் பின்
  மணத்தல் தீதோ?"

இந்த அடிகள் தெளிவாகவும் அழுத்தமாகவும் இவர் வருடங்களுக்கு முன்னால் தவறிவிட்டதால் பழிக்கஞ்சித் தூக்குப் போட்டுக்கொண்ட இவருடைய தங்கை—பொன்னியின் சிற்றன்னை—உத்திரத்திலே கட்டப்பட்ட கயிறு கழுத்தை நெருக்கிக் கொண்டிருக்கக்காட்சி அளித்தாள். அந்தக் கயிற்றைவிட அதிகமாகவே பொன்னியின் கழுத்திலே இவர் கட்டிய கயிறு இறுக்கிப் பிடித்து அவளைச் சித்திரவதை செய்துகொண்டிருந்தது போல் இவருக்குத் தோன்றியது. வேகமாக உள்ளே நுழைந்தார். பொன்னி கழுத்திலிருந்த அந்தக் கயிற்றை வெடுக்கெனப் பிடித்து இழுத்தறுத்தார். அன்போடு பொன்னியை அணைத்தார். "இனிமேல் நீ என் மகளம்மா, நான் தான் தவறு செஞ்சுட்டேன்னு, நீ ஏனம்மா என்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொல்லக்கூடாது?" என்று அமைதியான குரலிலே அழுத்தமாகக் கேட்டார். அந்த அணைப்பு பொன்னியின் உடலிலே புதுவிதமான உணர்ச்சியை உண்டாக்கியது. பேசாமல் மாமன் மார்பில் தன் தலையை வைத்து அன்போடு அவர் முகத்தைப் பார்த்தாள். அவர் கண்களிலிருந்து ஒரு துளிக்கண்ணீர் இவள் கண்களில் துளிர்த்த கண்ணீரைத் துணைக்கழைத்துக் கொண்டு கீழே விழுந்தது. சுற்றிலும் நின்றவர்கள் ஆத்திரமும் ஆச்சரியமும் நிறைந்த பார்வையோடு இந்தக் காட்சியைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். அறுந்து போன அந்தக்கயிறு கீழே விழுந்து கிடந்தது! ★

குழந்தை வளர்ப்பு முறை



1. தூயகாற்று

தமிழரசி

"ஈன்று புறந்தருத லென்றலைக்கடனே
சான்றோ ளுக்குதல் தந்தைக்குக்கடனே"

என்ருர் பொன்முடியார். ஈன்று தரும் தாய்க்கு அதன் வளர்ப்பும் சரியானபடி தெரிந்திருக்கவேண்டும். தெரிந்திருப்பின் சமூகத்திற்கும், நாட்டிற்கும், ஆரோக்கியமான, அறிவிற் சிறந்த ஆண், பெண் குழந்தைகளை அளிக்கும் தகுதியுடைய தாயாக அவள் இருப்பாள். "தாலாட்டும் கையே தரணி ஆளும்!" தாலாட்டும் கை தகுதியுடைய தனயர்களைக் கொடுத்தால்தான் அவர்கள் தரணியை ஆளுவதற்கு உரியவர்கள் ஆவார்கள் என்பது வெளிப்படை.

குழந்தை வளர்ப்பில் சுத்தமும், சுகாதாரமும் தலைமையான இடத்தைப் பெறுகின்றன என்பது யாரும் மறுத்துரைக்கக் கூடாததொன்று. "சுத்தம் சோறுபோடும்" சுத்தம் சுகம் தரும் சுத்தம் மக்களை ஆரோக்கியமுடையவர்களாக வளர்க்கும். குழந்தை வளர்ப்பில் காற்று, வசிக்குமிடம், தண்ணீர், உடல் என்பவற்றின் சுத்தம் எப்படிக் கவனிக்கப்படவேண்டு மென்பது பற்றியும், அவைகள் சுத்தமில்லாவிடின் அவற்ருல் வரும் தீமை பற்றியும் சிறிது ஆராய்வோம்.

மக்கள் ஆகாரமின்றியும், தண்ணீர் இன்றியும், சிற்சில நாட்கள் இருக்கலாம் அல்லது சில மணி நேரங்களாவது இருக்கலாம், ஆனுல் மூச்சுவிடாமல் ஒரு நிமிடம்கூட வாழமுடியாது. குழந்தைகள் பிராணவாயுவை உட்கொண்டு கரியமில வாயுவை வெளிவிடுகின்றன. அப்பிராணவாயு இரத்தத்தைச் செவ்விரத்



தம ஆக்குகிற து. செவ்விரத்தம் குழந்தைகளின் ஆரோக்கியத்துக்கு அத்தியாவசியமானது. அசுத்தக் காற்றை உட்கொண்டால் இரத்தம் காரிரத்தம ஆகும். தூய காற்றை உட்கொண்டால் இரத்தம் செவ்விரத்தம் ஆகும் ஆதலால் குழந்தைகள் சுத்த வாயுவை உட்கொள்ளக் கூடிய வசதியைத் தாய் மார்கள் அளிக்க வேண்டும்.

நல்ல காற்றேட்ட வசதியுள்ள அறைகளில்தான் குழந்தைகளைக் கிடத்தவேண்டும். அறைகளில் நல்ல காற்று வருவதற்குப பல சன்னல்கள் இருக்க வேண்டும அச்சன்னல்களை நன்ருகத் திறந்து வைக்க வேண்டும். சில தாய்மார்கள நன்ருகச் சன்னல்களை அடைத்துத் தாழிட்டு விடுவார்கள, அதனல் அவ்வறையிலுள்ள மற்றவர்கள் உட்கொண்ட காற்றையே குழந்தையும் உட்கொள்ளும். ஆதலால் குழந்தையின் ஆரோக்கியம் கெடும். கெட்ட காற்றைக் குழந்தைகள் உட்கொள்ளக் கூடாது. ஆகையால் துர்நாற்றமுள்ள அறைகளில் குழந்தைகளைக் கிடத்தக்கூடாது. குழந்தைகளின் மல ஜலம் முதலியவற்றை அவ்வப்போது அகற்றிவிட வேண்டும். சில தாய்மார்கள் குழந்தைகளின் தொட்டிலுக்கு அடியில் சாக்குகளைப் போட்டிருப்பர். அதில் விழும் சிறு நீர் அப்படியே இருக்கும். அதை மாற்ருமல் இரண்டு மூன்று நாட்களுக்குப் போடுவதால் கெட்ட காற்று வீசும். ஆகையால் குழந்தையின் தேக ஆரோக்கியம் கெடும். நெருங்கிய ஜனக்கூட்டம் உள்ள இடத்தில் குழந்

...தையை வைத்திருந்தால் குழந்தை கெட்ட [illegible] கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும். ஆகவே குழந்தைகளை ஜனக்கூட்டமுள்ள இடங்களில் அதிக நேரம் வைத்திருக்கக் கூடாது.

குழந்தைகள் வசிக்குமிடம் எப்போதும் சுத்தமாக இருக்க வேண்டும். மேற்கூரையில் ஒட்டடை முதலியவற்றை நீக்கிவிட வேண்டும். அவைகளை அப்போதைக்கப்போது நீக்காவிடில் மூட்டை, கொசு முதலிய பூச்சிகள் அவைகளில் வசித்துக் கொண்டிருக்கும். அவைகள் குழந்தைகளைக் கடித்துக் குழந்தைகளின் தூக்கத்தைக் கெடுக்கும். தூக்கம் கெட்ட குழந்தையின் ஆரோக்கியமும் கெடும். சுவர்களில் சுண்ணாம்பு பூசிச் சிறு துவாரங்கள் இன்றியும் மலினமின்றியும் பாதுகாப்பதால் மூட்டை முதலியன வசிக்காமல் தடுக்கலாம்; பார்க்கவும் அலங்காரமாக இருக்கும். தரை செங்கல் தளையாக இருந்தால் நல்லது. சிமெண்ட் தரையாக இருப்பின் குழந்தைகளைக் கீழே போடக் கூடாது. பாய் விரித்துப் படுக்கப்போட வேண்டும். ஏனெனில் சிமெண்ட் தரை குட்டைக் கொடுக்குமாகையால் அடிக்கடி கீழே போடப்பட்ட குழந்தையின் உடல் நலம் கெடும். மண் தரையானால் அதில் நீர் தேங்காமலும், ஈரம் இல்லாமலும் திருத்தியும், புதுப்பித்தும் வைத்துக்கொள்வது நல்லது. குழந்தைகளை வைத்து வளர்க்கும் அறைகட்குப் பக்கத்தில் வேப்பமரம் ஒன்று இருந்தால் நல்லது. அவ்வேப்பங்காற்று குழந்தையின் தேகத்துக்கு நல்ல ஆரோக்கியத்தைக் கொடுக்கும். ★

பம்பாயில் ஆண்டுவிழா

பம்பாய் தாராவி திராவிடநாடு பகுத்தறிவு நிலையத்தின் நான்காவதாண்டு நிறைவு விழா 25—1—48 அன்று மாலை 5மணிக்குத் தோழர் எம்.ஆர். ஜம்புநாதன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. 2500 பேருக்குமேல் பம்பாய்த் தமிழ் மக்கள் கலந்துகொண்டனர். தோழர்கள் தொல்காப்பியன், சேறவானே, என்.கே. பகவத், ஷண்முக வேலாயுதம், கழகத் தலைவர் எஸ். பெரியசாமி, செயலாளர் எஸ். சுப்பையா ஆகியோர் சொற்பொழிவாற்றினர். ஆண்டு விழா இரவு 9-45 மணிக்கு இனிது முடிவுற்றது.

'நிரபராதி'

ஆம்! "நிரபராதி" தான். வஞ்சகமே உருவாகிய பணக்கார வர்க்கமும், ஆண்டவன் பெயர் கூறி ஏழைப் பாட்டாளி மக்களை உருக்குலைக்கும் சில சுய நலக் கயவர்களும் கூறுகிறார்கள் "திருடன்" என்று. ஆனால், அவன் கூறுகிறான் உழைத்து, உழைத்து உருக்குலைந்து, பஞ்சையாகிப் பராரியாக நிற்கும் நான் நிரபராதி என்று. சமூகமும் அவனை அவ்விதமே அழைக்கிறது.



நடிகர் ஜெகதீஷ்

வேலையின்றித் திண்டாடும் பாட்டாளி மக்கள் ஓர் புறம். அதே நேரத்தில் பணத்திமிர் பிடித்த முதலாளி வர்க்கம் தங்களது வஞ்சகத்தால் பல லீலா விநோதங்கள் புரிவதும் அதை மறைப்பதற்கு ஆண்டவன் பெயர் கூறி ஆறுகால் பூஜை செய்வதும், உழைத்தவன் தன் உரிமையைக் கேட்டால் "பாபி" என்று சபிப்பதும் இன்றைய உலகில் என்பதை விளக்கிக் காட்டுகிறார் நண்பர் "பாரானன்" நிரபராதி என்னும் நாடகத்தின் மூலம். இந்த நாடகத்தை "மதுரை மாடர்ன் ஸ்டார் ஸொஸைட்டியார்" நடத்துகிறார்கள்.

இதன் ஆசிரியர் இன்றைய சமூகத்திற்குப் படிப்பினையான பல கருத்துக்களை அள்ளிக்கொட்டுகிறார் வசனத்தின் மூலம். தோழர்கள் ஜெகதீஷ், முனிசாமி, குமாரி சுப்புலெக்ஷ்மி, திருமதி ரமாமணி பாய் ஆகியோர்கள் பிரபல நடிகர்களாக நடிக்கின்றனர்.

நாடகத்தில் ஜீவநாதனைத் தோன்றும் நண்பர் ஜெகதீஷ் நல்ல முறையில் நடிக்கின்றார். அவருடையபேச்சுக்கள் அத்தனையும் உயிருள்ளவை. ஜீவநாதனின் தாயாராக நடிக்கும் தோழியார் ரமாமணிபாய் தம் கட்டத்தை உணர்ந்து கச்சிதமாக நடித்துள்ளார்கள். இன்னும் கொஞ்சம் முயற்சிசெய்தால் மேன்மையடையலாம்.

சந்திராவாக நடிக்கும் குமாரி சுப்புலெக்ஷ்மி பாடும் 'கோபந் தான்!' என்ற பாட்டு மக்களைப் பரவசமூட்டுகிறது. நாடகத்தின் இடையே கந்தனைக் காட்சியளிக்கும் தோழர் முனிசாமி மக்களைவயிறு குலுங்கச் சிரிக்க வைக்கின்றார்! மற்றும் பின்னணி இசை பிரமாதம்.

இரண்டாம் - - ஆண்டு

உங்கள் அருமைப் 'பொன்னி'க்கு ஓராண்டு முற்றுப் பெற்றது. இரண்டாம் ஆண்டு முதலிதழ் உங்கள் கையிலே தவழ்கிறது. தமிழகம் அளித்துவரும் ஊக்கமும் ஆதரவுமே 'பொன்னி'யின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாகிறது. நமது தலைவர் பெரியார் அவர்கள் 'பொன்னி'யின் வரவினை வாழ்த்திச் செய்தி அனுப்பியுள்ளார்கள். மற்றும் பெருமக்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள், ஓவியர்கள் அனைவரும் தங்கள் ஒத்துழைப்பை நல்கி வருகின்றனர். வரும் ஆண்டுகளிலும் 'பொன்னி' தமிழ் நாட்டின் மிகச் சிறந்த இதழாகத் திகழுமென்று உறுதிகூற விரும்புகிறோம்; தமிழ்ப் பெருமக்களின் இதயங் கனிந்த ஆதரவுக்கு நன்றி!

புதிய ஆண்டு பல புதுப் பகுதிகளையும் நண்பர்களுக்குக் கொண்டு வந்திருக்கிறது.

அறிஞர் கா. அப்பாத்துரை அவர்கள் 'தமிழ் அறிவுக் களஞ்சியம்' பற்றிய கட்டுரை வரிசையை இந்த இதழில் தொடங்கியிருக்கிறார்கள்; அப்பெரும்பணி நிறை வேறத் தம ஆய்வுரைகளை ஒவ்வொரு இதழிலும் நல்கிவர இசைந்துள்ளார்கள்.

திருக்குறள் முனிசாமி அவர்கள் அன்பர்களுக்குத் திருக்குறள் இன்பப்பால் நயங்களை வள்ளுவர் விருந்தாகத் தந்து வருவார்கள்.

நண்பர் கு.ப. நாராயணன் அவர்கள் வாழ்க்கையின் பல கூறுகளைப் பற்றி ஆராய்ந்து எழுத ஒப்பியுள்ளார்கள். 'வாழ முடியும்' என்ற கட்டுரை அக்கட்டுரை வரிசையைத் தொடங்கி வைக்கிறது.

பெண்கள் பகுதியில் மகளிர் அழகுக் குறிப்புகளை முடித்துத் தோழியர் தமிழரசி அவர்கள் குழந்தை வளர்ப்பு முறையைப் பற்றி எழுதுகிறார்கள்.

'மதம் அவசியமா?' 'பாரதிதாசன் பரம்பரை' முதலிய பகுதிகள் இரண்டாம் ஆண்டிலும் தொடர்ந்து வருகின்றன.

தோழர்கள் டி. கே. சீனிவாசன், தில்லைவில்லாளன், இளமைப்பித்தன், முதலியோரின் கதை விருந்தும் உண்டு. துறைப் பாடல்களும் தொடர்ந்து வருகின்றன.

செய்திப்பாட்டு என்ற புதிய பகுதியைத் தோழர் நாராநாச்சியப்பன் தொடக்கி வைத்துள்ளார். அப்பகுதியில் ஒவ்வொரு இதழிலும் பாடல்கள் வரும்.

றிகை. உங்கட்கு அவ்வப்போது தோன்றும் எண்ணங்களை எழுதியனுப்புங்கள். கருத்துரைகளை வரவேற்கிறோம்.

பொங்கல் மலர்

'சிறப்பான வெளியீடு' என்று தமிழகத்தின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் பாராட்டுகள் வந்து குவிந்துள்ளன; வேற்று நாடுகளில் வாழும் தமிழர்களின் சிறப்புரைகளும் கிடைத்துள்ளன. 'பொன்னி' மலர் முதல் முயற்சி; எனினும் தமிழகம் இம்மலருக்கு அளித்த வரவேற்பினைப் போல் எம்மலருக்கும் நல்கியதில்லை என்னும்போது நாங்கள் பூரிப்படைகிறோம். பாராட்டி உற்சாகமளித்த நண்பர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். வரும் ஆண்டுகளில் மலர் இன்னும் சிறப்புற அவர்களின் ஊக்கவுரைகள் பயன்படுமென்றும உறுதி கூறுகிறோம்.

மன்னியுங்கள்

தமிழகத்திற்கு மகிழ்ச்சியை அளித்த 'பொன்னி' பொங்கல் மலர் ஏராளமான அன்பர்களுக்கு ஏமாற்றத்தையும் அளித்துவிட்டது. என் செய்வது? விற்பனையாளர்களின் தேவையையோ, தொலை தூரங்களிலிருந்து 'ஒருமலர்' கேட்கும அன்பர்களின் ஆர்வத்தையோ எங்களால் நிறைவேற்றிவைக்க முடியவில்லை. 'இல்லை' 'இல்லை' என்று எழுதுவதைத் தவிர செய்ய இயலவில்லை. அன்பர்கள் வருத்தத்துடன் எழுதினார்கள்; சினந்தார்கள்; 'நேர்மையில்லை' என்று குறைகூறினார்கள். எல்லாவற்றிற்கும் விடையாக 'மன்னியுங்கள்' என்று வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

ஏராளமான அன்பர்கள் நமக்குப் பொங்கல் வாழ்த்துக்கள் அனுப்பியுள்ளனர். அவர்களின் உள்ளன்புக்கும் ஆர்வத்திற்கும மகிழ்வதோடு எங்கள் உளமார்ந்த நன்றியையும் புலப்படுத்திக் கொள்கிறோம.

— ஆசிரியர்

பொது மேடை

சென்னை 14 — 18—1—48

'பொன்னி'யைக் கண்டேன். பதினெட்டு வயது இளங்குமரியைப் போல் அழகாகவும் கவர்ச்சியாகவு மிருக்கிருள். தொட்ட இடமெல்லாம் இனிக்கிறது. பொன்னி வளர்க, வாழ்க என வாழ்த்துகிறேன்.

— இராதாமணாளன்

சென்னை — 18—1—48

அல்லிகள் நிறைந்த குளத்தினிலே அழகிய செந்தாமரை பூத்தாற்போல், எண்ணற்ற பேச்சாளர்களின் மத்தியிலே அண்ணாத்துரை விளங்குவதுபோல், புதுமைக் கவிகள் பலருள்ளே நம் புரட்சிக் கவிஞரின் காட்சியைப் போல், பொங்கல்மலர்கள் பலவற்றுள்ளே "பொன்னி" மலர் சிறந்து மிளிர்கின்றது.

— புத்தனேரி ரா. சுப்பிரமணியன்

புதுச்சேரி — 18—1—48

"அழகான தமிழ்ப் புத்தகங்களை வெளியிடும் பெருமை எங்கட்கே"—"சுவை தரும் கதைகள் தருவது நாங்களே"—"பிரமாதமான மலர்கள் போடுவது நாங்களே" — என இதுவரை ஏய்த்து வந்த...இன்னோரன்னவர்க்கு மூஞ்சியில் விளக்கெண்ணெய் வடியத்தான் செய்யும் பொன்னி,மலரைப்பார்த்தால். பொங்கல் மலர்கள் அனைத்துக்கும் பொன்னி தலைமைதாங்குகிறது எனலாம்.

— சு. மன்னர் மன்னன்

சென்னை — 20—1—48

நான் கேள்விப்பட்டேன்—'பொன்னி' மலருக்கு ஏகக் கிராக்கி என்று!—எப்படிக் கிராக்கி இல்லாமலிருக்க முடியும்?—அடாடா! அந்தப் பிரபல பேசு வீரர்களின் பெயர்களுக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து வரிசைக்கிரமமாகப் பிரசுரித்திருக்கிறீர்களே—அது ஒன்றே போதுமே—தங்கள் மேதைக்கு!

— நக்கீரன்

உத்தமபாளையம் — 20—1—48

பொன்னி பொங்கல் மலர் கிடைக்கப்பெற்றேன். அகத்தும் புறத்தும் அழகு தேக்கிய 'பொன்னி'யிடம் புதுநலந் துய்த்தேன்.

— சி. இராமசாமி

திருச்சிறுப்பள்ளி — 22—1—48

'பொன்னி' புதுவருடத்தில் அழகாக மலர்ந்துள்ளாள். பல ஆண்டுகளாகப் பழக்கப்பட்டவர்கள் வெளியிடும் சிறந்த மலர்களைப் போல் தாங்கள் மலர் வெளியிட்டிருக்கிறீர்கள்!

— அமிலன்

மைசூர்ப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கம்
பெங்களூர் — 22—1—48

தங்கள் 'பொன்னி' இதழின் பொங்கல் மலரை, புதுமைப் பொழிலில் பூத்த பொலிவுறு நறுமலர், பழமையின் பாசறையை விழ்த்தும் வெம்புயல், தனித் தமிழ் நிதி, கலைத் தாயின் தலை சிறந்த அணி என்பேன்.

— இர. சேவியர், செயலாளர்.

மாதுங்கா, பம்பாய் — 25—1—48

பொன்னி பொங்கல் மலர், மலர்களில் எல்லாம், ஆங்கிலத்தில் Examplory என்று சொல்லுவார்களே, அதே போலமைந்துள்ளது. வேண்டியவர்களுக்கு வேண்டிய மணத்தை அளிக்கும் 'மனோரஞ்சிதம்] போல் பொங்கல் மலர் திகழ்கிறது ... ...

மலரின் அட்டைப் படமும் உள்ளுறை ஓவியங்களும் தமிழர்களின் ஓவிய வன்மைக்கு ஓர் உவமையாகப் பரிமளிக்கின்றன.

இவையாவற்றிற்கும் இடையிடையே, இதோ நான் தான் சார் 'பிக்பாக்கட்' இதோ இவன் இடமின்றி நிற்கும் யாம் தாம் 'நெருக்கடிப் புலவர்' என்பவர்களின் கூற்று பிரமாதமாயிருக்கிறது!

— கே. டி. தேவர்

கவுல் பஜார், பெல்லாரி — 28—1—48

முதலில் ஏமாற்றமடைந்து பிறகுதான் மலர் கிடைத்தது. நான் எப்படி எப்படி மலர் அமையவேண்டுமென்று நினைத்தேனோ அப்படியெல்லாம் மலர் அமைந்திருக்கிறது. ... திராவிடமக்கள் திராவிடநாட்டை அடைந்துவிடுவார்கள் என்பதற்குப்'பொன்னி' பொங்கல் மலர் ஒரு சான்று...மலரில் வந்துள்ள பெரியார் படம் ஒன்று அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

— கே. எஸ். சந்தானம்

தமிழர் கழகம், ஆக்ரா — 4—2—48

நமது "பொன்னி"க்கு இவ் ஆங்கில ஆண்டு ஜனவரித் திங்களோடு ஓராண்டுமுடிந்து இரண்டாவது ஆண்டு ஆரம்பமாவதைக் கண்டு பெரிதும் களிப்பெய்துகிறேன்; யான்மட்டுமல்ல திராவிடராய்ப் பிறந்துள்ள அனைவரும் களிப்பெய்துகிறார்கள். வைக்கம் வீரர் பெரியாரின் திராவிடநாட்டுப் பிரிவினைக்கு பக்கபலமாக நின்று, திறமைமிக்க எழுத்தாளர்களின் சொல்லோவியங்களைத் தந்து, அயர்ந்துகிடக்கும் மறத்தமிழர்களைத் தட்டியெழுப்பிஉணர் ஊட்டும், நமது "பொன்னி"பல நூற்றாண்டு வாழ்ந்து வளம் எய்த வேணுமாய் மன, மொழி, மெய்களால் வாழ்த்துகிறேன்.

— அன்பழகன். செயலாளர்.



வளரும் இலக்கியம்

(மதிப்புரை பெற விரும்புவோர் இரண்டு புத்தகங்கள் அனுப்பவேண்டும்)

சிட்டு (வாரவெளியீடு) ★★★

"சிட்டு குழந்தைகளுக்காக வெளியிடுவது என்றல்லவா நினைத்தேன். உள்ளோட்டம் பலமாக இருக்கிறதே, ஓகோ... குமரன் ஆசிரியர் முருகப்பா வெளியிடுவதா? இருப்பதற்கென்ன?" — கடைத்தெருவிலே காற்றுவாக்கிலே கேட்ட சொற்கள் இவை. "சிட்டுக் குஞ்சு படிக்கும் பள்ளிக்கூடம் கூடு" என்ற புரட்சிக் கவிஞன் விளக்கப்படி கூட்டுப்பள்ளியிலிருந்து வெளிவந்திருக்கின்றது சிட்டுக்குஞ்சு.

தமிழ்—தமிழ் மக்கள்-அதற்காகத் தேசம், உலகம் வாழ வேண்டும் என்ற குறிக்கோளுடன், சீர்திருத்தக் கொள்கையும் நாட்டு வழக்கில் நகைச் சுவையையும் சங்கராச்சாரிக்குச் சவுக்கடியும், நூல் ஆராய்ச்சியும் செய்துகொண்டு சிட்டு குத்தலாகப் பேசுகின்றது. புதிய பத்திரிகை உலகில் 'சிட்டு' மிகச்சிறந்து விளங்குகிறது. விலை 0—0—6. மகளிர் இல்லம், அமராவதிபுதூர்.

சங்கொலி (மாதவெளியீடு) ★

ஒலி சங்கிலிருந்துதான் எழுகிறது. ஆனால் அது, பகுத்தறிவுப் பேரட்டியாளர்க்குச் சாவொலியாக, நாமக்கல்லாருக்கு இடியொலியாக, தன்மானக் கருத்துக்களின் ஒலி பெருக்கியாக, அரசியல் அரங்கில்-திறைமறைவில்-பின்னணி ஒலியாகப்பரவுகிறது. ஆசிரியர் தி. சு. குழந்தைவேலன். விலை 4 அணா. திருக்கழுக்குன்றத்தினின்றும் வெளிவருகிறது.

மன்றம் ★★★

தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் வெளியிடும் மாத இதழ் "மன்றம்." அவர் வெளியிடுகிறார் என்றால், அங்கே 'அறிவுப்பசி தணிக்கப்படலாம், நல்லபாதை வகுக்கப்படலாம்' என்ற எண்ணம் எழுவது இயற்கை. 'பல்கலைக் கழக மண்டப மேலட்டையுடன் வந்துளது. உள்ளேயும் பல்கலைக் கழகமாகவே காட்சி அளிக்கிறது. கருத்துப் பொதிந்த கட்டுரை, பண்பு குறிக்கும்.' இலக்கிய விளக்கம், அறிவியல் ஒளிரும் அரசியல் கருத்து மற்றும் குறிப்பாகக் கூறின் கல்விப் பகுதியிலே அரசியலார் ஆற்ற வேண்டியவை தோழர் நெடுஞ்செழியனால் மன்றம் வாயிலாக ஆற்றப்படுகிறது, அரசாங்கம் நன்றிகூற வேண்டிய அளவுக்கு. விலை அணா 8. அலுவலகம் 30—79 செம்பு தாஸ் தெரு — சென்னை 1.

தனியரசு ★★

மாதப் பத்திரிகை, விருதுநகர் பிறப்பிடம். ஆசிரியர்: எ. வி. பி. ஆசைத்தம்பி. திராவிடத் தனியரசின் கோரிக்கைக்கு

தூத்துக்குடி மாநாடு

பதினெட்டாவது திராவிடர் கழக மாகாண மாநாடு தூத்துக்குடியில் வரும் ஏப்ரல் மாத இறுதியில் மிகச் சிறப்பாக நடைபெறுமென்று அறிவிக்கப்படுகிறது.

விளக்கம் தரப்படுகிறது. இயற்கைக் காட்சியிலும் திராவிடம் காணும் முறையிலே அட்டைப் படம் அமைந்துளது சிறப்பாகும். விலை அணா நான்கு.

மீண்ட இன்பம் ★★

இன்பம் இழக்கப்படுவதும் மீளுவதும் இயற்கைதான். ஆனால் இந்த இன்பமாற்று வேடிக்கைகள் எல்லாம் எளியவர்களிடத்தேதான் நடக்கிறதென்பதைத் தெளிவுறுத்துகிறது இந்த நாவல்.

சமுதாயச் சீரழிவா—வறுமை அணைக்கிறதா—துன்பம் பரவுகிறதா—இன்பம் சிட்டு வாங்குகிறதா—இதற்கெல்லாம் காரணம் கூறுகிறேன் என்ற பல்லவியைத் தொடங்கி அதற்கு விதியைப் பாட்டாக்கி, செய்வினை, பழவினை என்ற பக்கமேளங்கொட்டி. இறைவனின் செயல் எனும் மங்களம் பாடுவோரின் தலைகளைச் சாயவைக்கும் கருத்துகள் கதையின் இடையிடையே மிளிர்கின்றன. கதைப் போக்கும், நடையமைப்பும் ஓடும் ஆறென—துள்ளுமானென—குழறுபடியில்லா அமைந்துள்ளன. ஆசிரியர் நாக. முத்தையா. விலை ரூ. 1-8-0; தமிழக நிலயம். சண்முகநாதபுரம். காரைக்குடி (வழி).

—கோவை இளஞ்சேரன்.

காதல் பரிசு ★

அவன் செல்வச் சீமானின் மகன். அவள் வறுமையில் பிறந்து வளர்ந்த வனிதை. இருவருக்குமிடையே காதல் பிறக்கிறது. காதல் நிறைவேருமல் தடுக்க முட்டுக்கட்டைகளும் ஏற்படுகின்றன. இறுதியில் தாய் தந்தையர்க்குத் தெரிவிக்காமல் இளங் காதலரிருவரும் வேற்றூர் சென்று, அங்கோர் கழகத்தைத் தோற்றுவித்து அதன் மூலம் நூல் நூற்கக் கற்றுக் கொடுக்கின்றனர். அவர்கள் வாழ்வு ஓர் சிறு குடிசையில் தான். அரைவயிற்றுக் கஞ்சியும் பொத்தல் உடைகளுமே அவர்களுக்குக் கிடைத்ததெனினும் மனமொத்த அவர்களது வாழ்க்கையில் இன்பம் மிளிர்ந்தது. இந்த இன்பந் தான் காதல் அவர்கட்குத் தந்த பரிசு.

இதுதான் கதை புரியும்படியான எளிய நடையில் கவிதையாக்கப்பட்டிருக்கிறது. காதலின் மேன்மை கூறப் புகுந்த ஓரிடத்தில்,

"கன்னலொடு தேனும், நீங்
கருப்பினது சாறும்
காதல் அவி சுவைக்கீடோ?"

என்று கூறுவது சிறிது கலக்கத்தை ஏற்படுத்துகிறது. "காவியம் செய்வதில் இது கன்னி முயற்சியே" எனினும் ஆசிரியர் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறுர் என்று கூறலாம். ஆசிரியர்: அ. இராமநாதன். வெளியிட்டோர்:- செந்தமிழ்ப் பண்ணை. பொ. புதுப்பட்டி. புதுக்கோட்டை. விலை அணா ஆறு.

— சாமி பழனியப்பன்

தன்மான இயக்கம் காட்டும் வழியில் முன்னேறித் தடைக் கற்களை உடைத்துத் தமிழ் நாட்டைப் பண்படுத்த 'வாழ்வு' வெளி வந்திருக்கிறது. மாதம் இருமுறை வரும் இந்தப் பத்திரிகையின் விலை இரண்டணா. ஆசிரியர்கள்: தே. நாராயணன், அரவரசன், வாழ்வு வெளியீட்டகம் — புதுக்கோட்டை.

கரும்பு★★

வளரும் தமிழுக்குச் செழிப்பூட்டக் 'கரும்பு' பயிராகி இருக்கிறது. புதுக்கோட்டையிலிருந்து வெளிவரும் இந்த மாதப் பத்திரிகையின் விலை ஆறு அணா. ஆசிரியர் ந. மெ. தியாகராஜா ஆவார். மா. இராசமாணிக்கனார், சுப. நாராயணன், இளஞ்சேரன், நாக. முத்தையா, மு. அண்ணாமலை முதலியோரின் கைவண்ணங்கள் இடம் பெற்றிருக்கின்றன. கரும்பு அலுவலகம், முருகன் நிலையம், சாந்தநாதபுரம், புதுக்கோட்டை.

முல்லைக்காடு★★★

கவியரசர் பாரதிதாசனின் கவிதைகளின் உயர்வைச் சொல்லித் தெரிய வேண்டிய நிலையில் இன்று தமிழ் நாடில்லை. "குவெட்டாவில் பூகம்பம்" என்ற பாடல் தமிழ் நாட்டில் இதுவரை வெளிவந்த செய்திப் பாடல்களில் உயர்ந்தது என்று கருதலாம். இந்தத் தொகுப்பில் சில இசைப் பாடல்களும் உள்ளன. இவையனைத்தும் கவிஞர் நடத்திய 'கவிதா மண்டலம்' என்ற பத்திரிகையில் வெளிவந்தவை. இந்நூலைப் புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகத்தார் பன்னிரண்டணா விலையில் நன்றாக வெளியிட்டிருக்கின்றனர் — முகவரி: 28 அம்பலத்தாடுஜயர் மடத்து வீதி, புதுச்சேரி.

திராவிடர்களால் அழகிய சிறந்தமலர் வெளியிட முடியுமா என்று ஏக்கமுற்றிருந்த நேரத்தில் அதுவும் முடியும், அதற்கு மேலாகவும் வெளியிட முடியும் எனப் பொன்னி காரியாலயத்தினர் இம்மலரின் மூலமாக வெளிப்படுத்தி விட்டனர்.

—திராவிடமணி 15-2-48.

புதுவாழ்வு★★★

க. அன்பழகன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு, தமிழருக்குப் புது வாழ்வு நல்க, "புது வாழ்வு" வந்திருக்கிறது. பலதுறைப்பட்ட கட்டுரைகளும், தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களும் இதில் பொதிந்திருக்கின்றன. "திராவிடம் நமது பேச்சு" என்று புது வாழ்வு வெற்றிச் சங்கு ஊதுகிறது. மாத வெளியீடு. விலை அணா 4. வாழ்வு அலுவலகம், 10 வேளாளர் தெரு, புரசவாக்கம், சென்னை 7

தமிழ் வாத்தியார்★★

ஆசிரியர் ம. ரா. நகைச்சுவை ததும்பத் தமிழாசிரியர்களைப் பற்றியும், பாடல்கள் பல திருத்தியும் இந்தக் கட்டுரைத் தொகுப்பைவிரித்துக்கொண்டு செல்கிறார். புத்தகத்தின் அட்டை ஓவியமும் நகைச்சுவை ததும்பச் சித்தரிக்கப்பட்டுளது. விலை அணா 12. விற்பனையாளர். பாரி நிலையம் – 59, பிராட்வே, சென்னை – 1

சினிமா லோலனின் ஆண்டு மலர் பல வண்ணப் படங்களுடன் வெளி வந்திருக்கிறது. கொளும்பிலிருந்து வெளிவரும் இந்தத் தமிழ்ப் பத்திரிகை சினிமா விஷயங்களை, 'தமிழ் நாட்டுச் சினிமாப் பத்திரிகைகளைக் காட்டிலும் நன்ருகக் கொடுத்திருக்கிறது. கேள்விக்குப் பதிலளிக்கும் பகுதி எல்லாவற்றிலும் போல் இதிலும் சிறப்பாக இருக்கிறது. 215, மெசன்ஜர்வீதி, கொழும்பு.

தோழன் ★★

தோழர் ஜனர்த்தனம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு இந்தப பத்திரிகை ஞாயிறு தோறும வெளி வருகிறது. விலை மிக மலிவு — ஒரு அணு. உள்ளுறை உணர்ச்சி மிகுந்த நடையில் அமைந்திருக்கிறது. அலுவலகம்: பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி — சென்னை 5.

— மலையன்

முரசொலி ★★

வாலாட்டுஞ் சமூகத்தைத் தோழர் கருணநிதி ஈரோட்டுப் பாதையிலே நின்று தாக்குகின்ருர். உள்ளக் கருத்துக்களை உணர்ச்சியோடு வெளியிடும் ஆசிரியரின் திறனை நாம் பெரிதும் போற்றுகிறேம். முரசொலி இடைவிடாது ஒலித்துக கொண்டிருக்க வேண்டும் எனபதே நம விருப்பம்: விலை ஒரு அணு. முரசொலி அலுவலகம்: திருவாரூர்.

குருகுலம் ★

'குழந்தைகளுக்காகவே குழந்தைகளோடு உயிர் வாழுவோம்.' என்று முழக்கி வெளிவரும் தனிகை அரசு ஆவார். விலை அணு மூன்று. மாதப்பத்திரிகை. 'குருகுலம்' வள்ளலார் மாணவர் இல்லம்; வாலாஜா பாத்.

தமிழ்க்கலை (பொங்கல் மலர்) ★★

அறிஞர் அண்ணுதுரை, அன்பழகன், நெடுஞ்செழியன், ம. பொ. சிவஞானம், மு. வரதராசனர், பிரதமர் ராமசாமி ரெட்டியார் முதலியவர்களின் எழுத்தோவியங்கள் இம்மலரிலே இடமபெற்றுள்ளன. கலை மலரில் தமிழ் மணம் கமழ்கின்றது. சிறந்த பொங்கல் விருந்து. 'தமிழ்க்கலை' அலுவலகம், சென்னை 10.

திராவிடமணி (பொங்கல் மலர்) ★

கடந்த ஒன்பது ஆண்டுகளாக இவ்விதழ் திராவிடர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வருகின்றது; 'திராவிட நாடு திராவிடர்க்கே' 'திராவிடர் சிறப்புறுக' இவைகள் நாம மணியினின்று அறிகின்ற ஒலிகளாகும். சிறந்த கட்டுரை, கதைகளின் தொகுப்பான இம்மலரின் விலை அணு எட்டு. ஆசிரியர்கள்:-T. M. முத்து, எப. மாணிக்கவாசகம். 'திராவிடமணி' தெப்பக்குளம். திருச்சி.

அசோகா ★★

பாக்குத் தூளல்ல! புதிய பத்திரிகை வரிசைகளில் இதுவும் ஒன்று. இம் மாதவெளியீடு அமைப்பிலும் பொருட் சிறப்பிலும சிறந்து விளங்குகிறது. ஆசிரியர் வ. சுப்பிரமணியம். விலை அணு எட்டு. 316, தங்கசாலைத் தெரு. சென்னை 1.

ஆரியப் பிடியினின்றும் அறியாமைச் சுழலிலினின்றும் திராவிடர்களை விழிப்புறச்செய்வதற்காக முரசுகள் மிகுந்தொலிக்கும் இந்நாளில் தோழர் G. R. மணியம் இப்பணியிலே ஈடுபட்டிருக்கின்றார். போற்றுகிறோம். வெற்றி காணட்டும். மாத வெளியிடு—தனிப்பிரதி அணா 8. 'திராவிட முரசு' காரியாலயம், 20, பப்லோடு, சிங்கப்பூர்.

போர்முரசு (வார இதழ்)★

திராவிடர் நலங்கருதிப் போர்முரசு கொட்டுகிறார் தோழர் M. K. அண்ணாமலை. எண்ணம் நன்று. எழுச்சியில் வெற்றி பெற வாழ்த்துகிறோம். விலை $1\frac{1}{2}$ அணா. No. 5, மாடசாமி நாடார் தெரு, சென்னை 21.

டமாரம் (வார இதழ்)★

குழந்தைகளுக்கென்று வெளிவரும் அரையணா வெளியிடு இது. வெற்றி தரத்தக்க முயற்சி. ஆசிரியர் சுப. சொக்கலிங்கம் 'டமாரம்' ஆபிஸ், மார்த்தாண்டபுரம், புதுக்கோட்டை.

மறுமலர்ச்சி (மாத இதழ்)★

இலங்கையினின்று வெளிவரும் இவ்விதழின் ஆசிரியர்கள் S. P. சர்மா T. S. வரதராஜன் ஆவார்கள். கட்டுரை, கதைகள் உண்டு. 'மறுமலர்ச்சி' 288, ஆஸ்பத்திரி ரோடு, யாழ்ப்பாணம் (இலங்கை).

சிறுகதைகள் ★★★

அறிஞர் அண்ணாத்துரையின் நான்கு சிறு கதைகள் இத்தொகுப்பில் உள்ளன. கதை கருத்திற் கலந்து நம்மைச் சிரிப்படையச் செய்கின்றன. உவமையின் மூலம் கருத்தைச் சொல்லிக்கொண்டே வந்து, கருதிய கருத்தை விளங்க வைக்கின்ற சிறப்பு 'அண்ணா'வுக்கே உரியதாகும். விலை ரூ. ஒன்று. வெளியிட்டோர்; 'திராவிடப்பண்ணை' தெப்பக்குளம், திருச்சி.

சாபம்★

இது சாரண பாஸ்கரனின் கவிதைத் தொகுப்பு. கருத்தாழமுடைய கவிதைகளைக் காட்டிலும், கவியோட்டமுடையன நிறைய இருக்கின்றன. முற்றும் எழுச்சிப் பாடல்களின் தொகுப்பான இந்நூலின் விலை ரூ. 1. வெளியிட்டோர்:- பன்னூல் பதிப்பகம், சாலை, திருவனந்தபுரம்.

மணியோசை★

முழுதும் இயக்கப் பாடல்கள். எழுச்சிக் கருத்துகள் நிறைய இருக்கின்றன. இயற்றியவர் சாரண பாஸ்கரன். விலை அணா ஆறு. வெளியிட்டோர்: தென்றல் மன்றம், கூத்தாநல்லூர்.

ஸாரதி★

மாத இதழ். ஆசிரியர் S. R. திருவேங்கடம்: மாத இதழுக்கு வேண்டிய அம்சங்கள் பொருந்தி இருக்கின்றன. எம். கே. கோவிந்தராஜ பாகவதர் 'இசை' பற்றி எழுதியுள்ள கட்டுரை பாராட்டுதற்குரியது. விலை அணா 4. அலுவலகம்: 'சாரதி' யாதவர் தெரு, பாலக்கரை, திருச்சி.

தொடங்கிய சில மாதங்களி லேயே பெரும் புகழ் எய்தியிருக் கும் 'போர்வாள்' வார இதழ் தமிழ் நன்மக்களுக்குப் படைத் திருக்கும் பொங்கல் விருந்து இது. பெரியார், 'அண்ணா', கவியரசர், மற்றும் பேரா சிரியர் மு. வரதராசனார் முதலி யோரின் கருத்தோவியங்கள் இடம் பெற்றிருக்கிறன. சிந் தனைக்குச் சிறந்த விருந்து. விலை எட்டணாத்தான். 'போர் வாள்'—47, பவழக்காரதெரு, சென்னை!

—நாக முத்தையா.

ஈழமணி ★★

திங்கள் வெளியீடு. ஆசிரியர் தென்புலியூர், திரு. க. க. முரு கேச பிள்ளை. 'ஈழமும் தமிழும்' கொண்டுள்ள இணைப்பைத் தெளிவுற விளக்கும் இனிய இதழ். பண்டிதர்கள், பேராசிரி யர்கள் கட்டுரைகள் நல்கியிருக் கிறனர். உயர்ந்த தாள்; சிறந்த அமைப்பு; பொருட் செறிவும் உண்டு. விலை ரூ. 1. அலுவ லகம்: 97, நொறிஸ் ரோடு—கொழும்பு.

திருக்குறள் வகுப்பு (நினைவு மலர்)

பம்பாய்த் தென்னிந்திய இல் லத்தார் சங்கத்தில் திருவாளர். திருக்குறள் முனிசாமி அவர் களால் ஒரு வருடமாக நடத்தப் பட்டு வந்த திருக்குறள் வகுப்பு-நினைவு மலர் கிடைக்கப் பெறறோம். பன்னிரு குறட் பாக்கள் முன்னும் பின்னும் விளக்கவுரைகளுடன் அமைந் துள்ளன. எளிய இனிய இன் பத் தமிழ் நடையில் எல்லோ ரும் மிகச் சுலபத்தில் புரிந்து யுள்ள வகுப்பாசிரிய...ப் பாராட்டுகிறோம். அச்சங்கக் காரியதரிசி P. E. ராமசாமி அவர்களின் தொண்டு போற் றற்குரியது.

வரப்பெற்றோம்:—

உத்தம மித்திரன்: வார வெளி யீடு, ஆசிரியர்: K. B. M. I. சூர்மா, விலை அணா $1\frac{1}{2}$. 17-20 நரசிங்கபுரம் தெரு, மௌண்ட் ரோடு சென்னை.

பாலைவன நபி: இலவச வெளி யீடு: ஆசிரியர்: ஜனாப் P. சையது இபுராகிம். வெளியிட்டோர்: சன மார்க்கத் தொண்டர் சபையார், கூத்தாநல்லூர்.

குழந்தைக்குறள் நூறு:-தொகுத் தவர் ரா. கோவிந்தராசு, திருக் குறள் கழகம், பொன்மலை, திருச்சி. இலவச வெளியீடு.

மூவிடோன் நியூஸ்:- பொங்கல் மலர் விலை அணா 6. ஆசிரியர் T. D. சிவபுண்ணியம் அலுவல கம் தெப்பக்குளம், திருச்சி.

தமிழர் நாடு பொங்கல் மலர்:- ஆசிரியர்: கி. ஆ. பெ. விசுவநா தம், விலை அணா 4. 45, மணியக் கார தெரு, திருச்சினாப்பள்ளி.

அணிகலம் பொங்கல் மலர்:- ஆசிரியர்: எல். கதிரேசன் செட் டியார். விலை அணா 12, 'அணி கலம்' ஆபீஸ், புதுக்கோட்டை.

நவீனம்:-மாதவெளியீடு. ஆசி ரியர்: வி. எஸ். டி. சுவாமி. அலு வலகம்: வேப்பேரி-சென்னை.

புத்தாண்டு காலண்டர்: விலை அணா 8. வெளியிட்டோர் திராவிடன் பதிப்பகம், வேலூர் (வ. ஆ.)

PRINTED BY AR. PERIYANNAN AT THE SENTHAMIZH PATHIPPAKAM,
EAST MAIN STREET, PUDUKKOTTAI.
EDITOR & PUBLISHER: MURUGU SUBRAMANIAN

வள்ளுவரும் பெரியாரும்

*

ஆசிரியர் : திருக்குறள் முனிசாமி

....................வள்ளுவரும் பெரியாரும் என்னும் நூலினைப் படித்துப் பார்த்துக் கருத்தறிவிக்குமாறு அன்பரால் பணிக்கப்பட்டேன். படித்தேன் அதனைப் பாராட்டுகிறேன்.................இந்நூலினைப் பலரும் படித்து யான் கருதுமாறு பொதுமக்கள் கருதுவார்கள் என்று நம்புகின்றேன்.........இந்த மாதிரியான முயற்சி எல்லோராலும் ஊக்கத் தக்கது............என்று இவ்வாறு, தமிழ்ப் பேராசிரியர், நாவலர் திரு ச. சோமசுந்தரபாரதியார், எம். ஏ., பி. எல்., அவர்கள் பாராட்டி எழுதிய தமது மதிப்புரையில் குறிப்பிடுகின்றார். மற்றும் பேரறிஞர் பலரும் பெரிதும் புகழ்ந்து பாராட்டுகின்றனர்.

திராவிட மக்களுக்கோர் சிறந்த ஆராய்ச்சி நூல். பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்களின் ஒப்புயர்வற்ற அனுபவ வாழ்க்கையில் வள்ளுவர் குறளறங்களைப் பயன்படுத்திச் செல்லும் நெறி முறைகளைப் புத்தம் புதிய பாணியில் எடுத்துக் கூறும் அரிய நூல். அழகிய பதிப்பு.

விலை ரூ. 0—8—0

[தனிப்பிரதி வேண்டுவோர் 0–9–0 அனுப்புதல் வேண்டும்]

விவரங்கட்கு:—

செந்தமிழ்ப் பதிப்பகம்

தபால் பெட்டி 39 : : புதுக்கோட்டை.

தேய்ந்த விரல்

ஆசிரியர்: திருக்குறள் முனிசாமி

●

இன்பந் தோய்ந்த காதலர் வாழ்க்கைப்பூங்காவில் ஆங்காங்கு சுடர்விட்டு மின்னும் நிகழ்ச்சிகளைச் சித்தரித்துக் காட்டும் அரிய நூல். எளிய - இனிய - சுவையூட்டும் நடையில் எழுதப்பட்டுள்ளது. காதலர் உள்ளத்தில் மிதந்து வரும் வியப்புறும் செய்திகள் - சிந்தித்துச் சிந்தித்து மகிழவேண்டியனவாய் அமைந்துள்ளன. "காமத்துப்பால் வேண்டாம்" என்னும் மந்திரிமார்களும் படிக்க வேண்டியது; தின்னும் கண்கள் - சுடாத நெருப்பு - வாடிய மலர் - காற்றை விடாதே .... என்பன போன்று திகைப்பும் வியப்பும் பின்னிக்கொண்டு செல்லும் போக்கு, நூல் முழுதும் காட்சியளிக்கின்றது.

இது 'பொன்னி' வெளியீடு

விலை 0—4—0

தபாற் செலவு 0—0—9

○

செந்தமிழ்ப் பதிப்பகம்

த. பெ. 39. : : புதுக்கோட்டை